
Join / Telegram : @Tamil_Books_Library

விகடன்
பிரசுரம்



# உயிர்மொழி!

பாலியல் தொடர்பான
ஆண்-பெண் ஊஞ்சல்
கட்டுரைகள்



உளநலவியல் நிபுணர்
டாக்டர் ஷாலினி

Join / Telegram : @Tamil_Books_Library

# உயிர்மொழி!

பாலியல் தொடர்பான
ஆண்-பெண் ஊஞ்சல்
கட்டுரைகள்

உளநலவியல் நிபுணர்
டாக்டர் ஷாலினி

விகடன்
பிரசுரம்

Join / Telegram : @Tamil_Books_Library

Join / Telegram : @Tamil_Books_Library

Title :
UYIRMOZHI
© Dr. SHALINI

ISBN : 978-81-8476-417-8

விகடன் பிரசுரம்: 651

நூல் தலைப்பு:
உயிர்மொழி!

நூல் ஆசிரியர்:
© டாக்டர் ஷாலினி

முதற்பதிப்பு : மார்ச், 2012

விலை : ₹ 70

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
இரா.சரவணன்

முதன்மை பொறுப்பாசிரியர்:
பொன்ஸீ

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எஸ்.கோபால், எம்.நாகமணி, கே.பாசுமணி

உதவி ஆசிரியர்:
சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

தலைமை வடிவமைப்பு:
அ.அன்பழகன்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

**விகடன் பிரசுரம்**
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: pubonline@vikatan.com

Join / Telegram : @Tamil_Books_Library

# ஆண்-பெண் பாலியல் போராட்டம்!

தா ய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, பேரன், பேத்தி... என சங்கிலித்தொடர்போல வாழும் மனித உறவுகள் அனைத்தும் ரத்த சம்பந்தமான உறவு என்பதால் இவர்களிடையே பாசப் பிணைப்பும் இயற்கையாக அமைந்துவிடும். கூடிவாழ்தல், விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, பகிர்ந்து அளிக்கும் தன்மை போன்ற குணங்களும் வழிவழியாக அமைந்துவிடும். ஆனால், அனைத்து உறவுகளின் மீதும் ஒருவருக்குப் பாசம் வந்துவிடாது. அதிலும் ஆண்-பெண் உறவு என்பது மிகவும் சிக்கல் வாய்ந்தது!

கணவன்-மனைவி என்ற உறவுச்சங்கிலி இடையில் ஏற்படுவது. திருமணம் என்ற பாலம் மட்டுமே இவர்களை இணைப்பதால், அந்தஸ்து, வேலை, பொருளாதாரம், உணவுமுறை, உடை, பிறந்தவீட்டுப் பாசம் போன்ற காரணிகளால் குடும்பத்தில் சிக்கல்கள் எழும்போது அந்த உறவுப்பாலம் உடையவும் வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. 'ஆண்தான் உயர்ந்தவன்... பெண்தான் உயர்ந்தவள்' என்கிற ஈகோ உருவாகி, இருவருக்கும் இடையில் அன்பு நழுவும் நேரத்தில் பிரிவு என்பது நிரந்தரமாகிவிடுகிறது!

இப்படி, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பிரிவு ஏன் வருகிறது? இரு இனத்துக்கும் இடையே போட்டி தொடர்ந்து கொண்டே இருக்க என்ன காரணம்? ஆண்கள் மட்டும் தனித்தோ, பெண்கள் மட்டும் தனித்தோ இந்த உலகை ஆளமுடியுமா? -மனித இனம் தழைக்க, இதுபோன்ற கேள்விகளுக்குப் பதில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

ஆண்-பெண் உறவு மேம்படவும், திருமண பந்தம் நீடிக்கவும் தேவையான வழிமுறைகளைக் காண, பல துறைகளைச் சார்ந்த வல்லுனர்கள் தொடர்ந்து ஆராய்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே இருக்கும் ஆண்-பெண் உறவுச் சிக்கலை விஞ்ஞான ரீதியாக

Join / Telegram : @Tamil_Books_Library

அலசி ஆராய்ந்து இந்த நூலில் எழுதியிருக்கிறார், உளநலவியல் நிபுணர் டாக்டர் ஷாலினி.

அடிமைத் தளத்திலிருந்து விடுபடவும், தங்களுக்கான பாதுகாப்பைத் தேடிக்கொள்ளவும், கலவி வாழ்க்கையில் வீரியம்மிக்க நல்ல வாரிசுகளைக் கருவாக்கவும் ஆதிகாலத்திலிருந்தே பெண் இனம் எப்படி பரிணாமவளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்குகிறது இந்த நூல்.

- ஆசிரியர்

Join / Telegram : @Tamil_Books_Library

# உயிர்மொழி உருவான கதை...

ஆ ண்-பெண் உறவைப்போல சுவாரசியமான விஷயம் இந்த உலகில் வேறெதுவும் இல்லை... அதைப்போல ஒரு சிக்கலான விஷயமும் வேறில்லை! சரியாக அமைந்தால் கொள்ளை இன்பத்தைக் கொடுக்கக் கூடிய இந்த உறவு, சொதப்பலாக மாறினால் இருக்கும் இன்பத்தை எல்லாம் கொள்ளை அடித்துக்கொண்டே போய்விடுகிறது!

நம்மூரில் திருமணத்தைப் பற்றி 'ஆஹா, ஓஹோ' என்று எல்லோரும் புகழ்ந்து தள்ளுகிறார்கள். 'திருமணம்தான் வாழ்வின் ஒரே இலக்கு, இதை செய்துகொள்ளாவிட்டால், வாழ்க்கை முழுமை பெறாது' என்றெல்லாம் சொல்லி, வேண்டாம் என்கிறவர்களுக்கும் பலத்த சிபாரிசோடு இதை செய்துவைத்துவிடுவார்கள். 'சொர்கத்தில் முடிவானது, முப்பத்தி மூன்று கோடி தேவர்களின் ஆசீர்வாதத்துடன் நடைபெற்றது' என்றெல்லாம் சொல்லி, பெருத்த பணச்செலவில் இந்தத் திருமண வைபவத்தை நடத்தி, மூக்குப்பிடிக்கச் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவார்கள்!

சரி... திருமணம் என்றால் விளம்பரங்களில் வருவதுபோல ரொம்ப ஜாலியான சமாசாரம்தானே என்று நினைத்துக்கொண்டு தம்பதியினரும் உறவைத் துவங்குவார்கள்... அப்புறம்தான் அவர்களுக்குத் தெரியும், இது எவ்வளவு சருக்கலான பாதை என்று! யாராவது ஆபத்பாந்தவர் வந்து, இதை எப்படிச் சமாளித்து, வெற்றிகரமாகப் பயணிப்பது என்று சொல்லித் தந்து மீட்க மாட்டார்களா என்று தம்பதியினர் அல்லோலப்படும் போதுதான், எல்லா உறவுக்காரர்களும் தங்கள் பங்குக்கு கொஞ்சம் கொஞ்சமாகக் குட்டையைக் குழப்பி, வாழ்க்கையையே இன்னும் வெறுக்க வைத்துவிடுகிறார்கள். இப்படி நொந்துபோன பலர் கோயில், கோர்ட், ஜோசியர், பார் என்றெல்லாம் சுற்றிவிட்டு, எதுவுமே உதவாதபோது கடைசியில் குடும்பநல ஆலோசனை பெற வருகிறார்கள்.

இப்படி வரும் எல்லா தம்பதிகளுக்கும் கிட்டத்தட்ட ஒரே விஷயத்தைத் தான் சொல்லித் தெளிவுபடுத்துகிறோம். ஆனால், அது ஏற்படுத்தும் மனத்தெளிவு இருக்கிறதே, ரொம்பவே

Join / Telegram : @Tamil_Books_Library

அபாரமானது. சிகிச்சை முடிந்து விடைபெறும்போது எல்லா தம்பதிகளும் தவறாமல் வைக்கும் கோரிக்கை, 'இதை நீங்க அப்படியே ஒரு புத்தகமா எழுதுனா, எங்களைப் போன்றவர்களுக்கு உபயோகமா இருக்குமே டாக்டர், அப்பப்ப படிச்சுப் பார்த்து எங்களை சரிபடுத்திப்போமே. புதுசா கல்யாணம் பண்ணிக்கிறவங்களுக்கு கிஃப்டா கொடுத்தா, பிரச்னையில மாட்டிக்காம தப்பிப்பாங்களே..!' என்பார்கள்.

சரி, எழுதலாம் என்றால், இதில் நிறைய வெளியே சொல்லக்கூடாத சமாசாரங்கள் அடங்கி இருக்குமே. நம்முடைய சமுதாயமோ 'உள்ளொன்று வைத்து, புறம் வேறு பேசி' போலிப் பெருமைபட்டுக்கொள்ளும், இரட்டை நிலை கொண்டதாயிற்றே. இதை எல்லாம் தைரியமாகப் பிரசுரிக்க யார் முன்வருவார்? என்று நான் யோசித்துக்கொண்டிருந்த போது தான், ஆனந்த விகடன் அலுவலகத்தில் இருந்து ஆசிரியர் ரா.கண்ணன் போன் செய்தார். 'ஆண்-பெண் ஊஞ்சல் தொடர் ஒன்றை எழுத வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். உடனே ஒப்புக்கொண்டேன். 'உயிர்மொழி' விகடனில் தொடராக வெளியாக ஆரம்பித்தது.

பலர் இதைப் படித்துப் பயன்பட்டாதாக போனிலும், ஈமெயிலிலும், நேரிலும் சொல்லி ஊக்குவித்தார்கள். ஆனால், சிலருக்கு நான் எழுதிய பல விஷயங்கள் உறுத்தலாக இருக்க, எதிர்ப்புகளும் எழுந்தன. அறிவியல் உண்மைகள் வெவ்வேறு மனிதர்களை வெவ்வேறு மாதிரி பாதிக்கின்றன. எதையும் உணர்ச்சி ரீதியாகப் பார்த்தே பழகிப் போனவர்களுக்கு, பற்றற்ற அறிவியல் நோக்கோடு விஷயங்களை அணுகுவது கடினம்தான்!

ஆனால், இந்தப் புத்தகம் முழுக்க முழுக்க அறிவியல் நோக்கோடு மட்டுமே எழுதப்பட்டிருக்கிறது; யாரையும் விமர்சிக்கவோ, காயப்படுத்தவோ முயலவில்லை; ஆனாலும், மனிதர்களிடையே காணப்படும் பலவிதமான ஆரோக்கியமற்ற மனப்பான்மைகளை விவரிக்கிறது. நம்மை நாமே

சீர்தூக்கிப் பார்த்து, மென்மேலும் மேன்மையான மனிதர்களாக உயர்த்திக்கொள்ள இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டால் மகிழ்ச்சி.

நான் எத்தனை ஊர்களுக்குப் போனாலும், எத்தனையோ

Join / Telegram : @Tamil_Books_Library

வேலைகளில் மூழ்கிக்கிடந்தாலும், என்னை விடாப்பிடியாக ஊக்குவித்து, ஒவ்வொரு அத்தியாயத்தையும் எழுத வைத்த ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவுக்கு என் மனமார்ந்த நன்றி.

மற்ற கடமைகளில் நான் மெய் மறந்திருந்த போதும், இந்தத் தொடரை புத்தகமாக வெளியிடுவதில் ஆர்வம் காட்டி, எனக்கு ஊக்கம் கொடுத்த விகடன் பிரசுரம் நண்பர்களுக்கும் நன்றிகள் பல.

இந்தப் புத்தக வடிவில் புதிய தகவல்களும் விளக்கங்களும் உள்ளன. இதை எல்லாம் படித்து மகிழ்வீர்கள் என நம்புகிறேன். உங்கள், கருத்துகள், கண்டனங்கள், விமர்சனங்கள் என எதுவாக இருந்தாலும் எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

வாழ்த்துகளும், நன்றிகளும்.

அன்புடன்,

ஷாலினி

55, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,

சென்னை - 600 005

மின்னஞ்சல்: psrfindia@gmail.com

Join / Telegram : @Tamil_Books_Library



# டாக்டர் ஷாலினி

சென்னை மருத்துவக் கல்லூரியில் இளங்கலை மருத்துவம் பயின்ற டாக்டர் ஷாலினி, மதுரை மருத்துவக் கல்லூரியில் முதுகலை மனநல மருத்துவம் முடித்தவர்.தமிழ்நாடு- டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தில் ‘மகளிர் மனநலம்’ குறித்த ஆராய்ச்சியில் முனைவர் பட்டம் பெற்றவர்.

சென்னை மருத்துவக் கல்லூரியின் மனநலப் பிரிவில் ஆராய்ச்சியாளராகப் பணிபுரிந்து வருகிறார். ‘மைண்ட் ஃபோகஸ்’ என்ற நிறுவனத்தை உருவாக்கி, மன அழுத்தத்தைக் குறைப்பது பற்றி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் காவல் துறையினருக்கு வகுப்புகள் நடத்தி வருகிறார். மேலும், ‘உளநல சேவை மற்றும் ஆராய்ச்சி மையம்’ என்ற அமைப்பை நிறுவி அதன் இயக்குநராகவும் இருக்கிறார். மனிதகுல வரலாற்றைப் படிப்பதிலும், ஆராய்ச்சி செய்வதிலும் ஆர்வம் அதிகம்.

இவர் எழுதிய பிற நூல்கள்: ‘Myths and Psychiatry’, ‘ஆளை அசத்தும் 60 கலைகள்’, ‘அந்தரங்கம் இனிமையானது’, ‘அர்த்தமுள்ள அந்தரங்கம்’, ‘பெண்ணின் மறுபக்கம்’.

Join / Telegram : @Tamil_Books_Library

இந்த நூல்...

எனக்குப் பெயர் வைத்த கொள்ளுப் பாட்டி

பாலகுஜாம்பாள் என்கிற தனம்மாளுக்கு...

Join / Telegram : @Tamil_Books_Library

# உள்ளே...

1. உறவுகளில் ஏன் விரிசல்?
2. கலவியல் கவர்ச்சி!
3. தாயா..? தாரமா..?
4. பெண் இனத்தின் 'பவர்'!
5. அம்மா சென்டிமென்ட்!
6. முழுமைபெற்ற ஆண்!
7. பெண்ணை அடக்கினால்...
8. யாருக்கு யார் அடிமை?
9. துணை தேடி இனம் சேரும்!
10. அம்மாக்களின் அஸ்திரங்கள்!
11. அன்பு எனும் அங்குசம்!
12. ஆண் தோற்பது எப்போது?
13. பெண்கள் விரும்பும் ஆண்கள்?
14. மரபணு ஆட்டம்!
15. பெண் எப்படி தலைவியானாள்?
16. எது பேராண்மை?
17. கலவி சுகம் - ஒரு போட்டி!
18. முகத்தோடு முகம் பார்த்து...
19. கைகள் இரண்டால்... என் கைகள் இரண்டால்...
20. வேட்டையாடு... விளையாடு!
21. பெண்ணைத் தாண்டி வருவாயா..?
22. ஆண் ஆதிக்கம்!
23. ஆணும் பெண்ணும்

Join / Telegram : @Tamil_Books_Library

24. அறிவு மயக்கம்!

25. ஆல்ஃபா ஆண்கள்!

26. பெண் அடிமை ஆனாள்!

27. பெண்ணின் திறமை... ஆணின் ஆளுமை!

Join / Telegram : @Tamil_Books_Library

# 1

## உறவுகளில் ஏன் விரிசல்?

ஈரக் கூந்தலுடன் வந்து வாசலில் கோலம் போட்டு, கணவனுக்கு ஆவி பறக்கும் காபி கொடுத்து, துளசி மாடத்தைச் சுற்றி வந்து, கலாசாரப் பாரம்பரியங்களைக் கவனமாகக் கடைப்பிடிக்கும், 'பொண்ணுன்னா இப்படி இருக்கணும்!' என்று பெயர் வாங்கும் பெண் அவள். அத்தனை அழகு, அடக்கம், ஒடுக்கம். தன் வீடு உண்டு... வேலை உண்டு என்று இருப்பாள். அதிர்ந்துகூடப் பேசமாட்டாள். திருமணமாகி 15 வருடங்கள் ஆகிவிட்டிருந்தன. இரண்டு குழந்தைகள். யாரும் பார்த்தால், பொறாமைப்படக்கூடிய வாழ்க்கைதான்!

ஆனால், யாருக்கும் தெரியாத ரகசியம் என்ன என்றால், அந்தக் குடும்பத் தலைவி, கணவன் வேலைக்குப் போன அடுத்த நிமிடம், தன் செல்போனில் இன்னொரு காதலனுடன் மணிக்கணக்கில் பேசிச் சிரித்துக்கொண்டு இருந்தாள். அவனிடம் ஒருநாள் பேசாவிட்டால்... இல்லை, பேச கொஞ்சம் தாமதமாகிவிட்டாலும், அவளால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது. உடனே, இருப்புக்கொள்ளாமல் தவிப்பதென்ன, படபடவென வருவது என்ன, பார்ப்பவர் மேலெல்லாம் எரிச்சலுற்றுக் கோபப்படுவது என்ன..!

புதியவனுடன் பேச ஆரம்பித்த பிறகு, அவளுக்குத் தன் கணவனுடைய நெருக்கம் பிடிப்பது இல்லை. தன் கணவனை விட்டுவிட்டு இன்னோர் ஆளோடு இப்படி கொஞ்சிக்கொண்டு இருப்பது தவறு என்று அவளுக்குக் குற்ற உணர்ச்சி குத்தாமல் இல்லை. இருந்தாலும், விட முடியவில்லை. மிக மிக ரகசியமாக

Join / Telegram : @Tamil_Books_Library

அவளின் தொலைபேசிக் காதல் தொடர்ந்துகொண்டே இருந்தது.

அது எப்படி, இந்தத் தமிழ்த் திருநாட்டில் ஒரு பெண் இப்படி நடக்கலாமா? இது பத்தினி தர்மத்துக்குப் புறம்பானது அல்லவா? கட்டின கணவனை விட்டுவிட்டு ஒருத்தி இப்படி எல்லாம் கண்டவனோடு கடலை போட்டுக்கொண்டு இருக்கலாமோ?

என்னதான் வியாக்கியானம் பேசினாலும், இதுபோன்ற நடப்புக்களைத் தடுக்க முடிவது இல்லை. காரணம், மனிதன் நியமித்த விதிகள் எல்லாவற்றையும் கடந்து, எல்லாம் வல்ல இயற்கை ஏற்கெனவே ஏற்படுத்தி உள்ள வேறு சில விதிகளும் இருக்கின்றன. இந்த விதிகள் ரொம்பவே வலிமையானவை என்பதால், இவற்றுக்கு நாம் உட்பட்டுவிடுகிறோம். விரும்பியோ, விரும்பாமலோ!

இதற்கு நேர்மாறாகவும் நடப்பது உண்டு.

அவன், அந்தப் பெண்ணை உயிருக்கு உயிராக நேசித்தான். அவள் 'வேண்டாம் வேண்டாம்' என்று பல தடைகளை முன் நிறுத்தியபோதும், அவளை மசியவைத்தான். வேறு வேறு சாதி என்பதால் வழக்கம்போல பெருசுகள் பெரிதாய் மறுத்தார்கள். குடும்ப மானம், குல கௌரவம், லொட்டு லொசுக்கு என்றெல்லாம் அவர்கள் மொக்கை போட, சத்தம் போடாமல் பதிவுத் திருமணம் செய்துகொண்டு, பெற்றோருக்கு 'செக்' வைத்தார்கள் காதலர்கள். வேறு வழி இல்லாமல் திருமணத்தை ஏற்றுக் கொண்டார்கள், இருவீட்டாரும்.

ஆனால், பையனின் அம்மா... "இந்தக் கல்யாணத்தை நான் ஏத்துக்கவே மாட்டேன்!" என்று ஒரு தற்கொலை நாடகம் நடத்த, அன்றோடு தீர்ந்துபோனது பையனின் ஆண்மை எல்லாம். அதற்குப் பிறகு மனைவியுடன் அவனால் ஆசையாகவே இருக்க முடியவில்லை. காதலர்களாக இருந்தபோது அவன் அவளை ஆசையாகத் தொட்டபோதெல்லாம், 'கல்யாணத்துக்கு அப்புறம்' என்று காக்கவைத்த காலம் போய்... இப்போது அவள், அவன் எப்போதடா கிட்டே வருவான் என்று ஏங்கிக்கிடக்க... அவன் பக்கத்தில் வந்ததும், 'எங்கம்மாவை நீ மதிக்கிறதே இல்லை' என்று ஆரம்பித்தான் என்றால்... ராத்திரி முழுக்க ஒரே ரம்பம்தான்.

அழகான பெண்டாட்டி ஆவலாகப் பக்கத்தில் இருக்கும்போது,

Join / Telegram : @Tamil_Books_Library

அந்த நேரம் பார்த்து, அம்மாவை மதிக்கவில்லை என்று கவலைப்படுபவன் ஒரு ஆம்பளையா?



ஆனால், கசப்பான உண்மை என்ன தெரியுமா? இந்த ஓவர் அம்மா சென்டிமென்ட்டினாலேயே ஆண்மையை இழந்து வாழ்க்கையில் தோற்றுப்போன ஆண்கள் ஏராளம். தன்னால் இப்படி மகன் ஊனமாகிப்போனான் என்று தெரிந்தும், பையனை தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கும் தாய்க்குலங்கள் அதைவிட ஏராளம்.

இப்படியும் இருப்பார்களா?

Join / Telegram : @Tamil_Books_Library

ஆதி மனிதர்களுக்கு அதிசயமாக இருந்தது எல்லாம், நமக்கு இன்று அற்ப சமாசாரமாகிவிட்டன. அவர்களுக்கு அற்ப மேட்டராக இருந்தது எல்லாம், இன்று நமக்கு அசிங்கமாகிவிட்டன. ஆதி மனிதன் காலத்தில் இத்தனை வசதிகள் கிடையாது, உயிருக்கு எந்நேரமும் ஆபத்து, சாப்பாட்டுக்கு உத்தரவாதமே இல்லை, தனி மனிதனின் வாழ்வுக்குப் பெரிய மகிமை இருந்திருக்காது.

ஆனால், இன்று?

ஆதி மனிதன் நம்மைப் பார்த்தால், ஏதோ இறை அவதாரம் என்றல்லவா நினைப்பான்? இத்தனைக்கும் இன்றைய மனிதர்களுக்குச் சாப்பாட்டுப் பிரச்னை இல்லை, வேலை இல்லாத் திண்டாட்டம் இல்லை, ஏன் உடல் கோளாறுகள்கூட அவ்வளவாக இல்லை. ஆனால், மனிதர்கள் இன்னமும் சோகமாகவே இருக்கிறார்கள். காரணம், உறவுகளில் ஏற்படும் விரிசல்கள்தான்.

இந்த ஆண் - பெண் உறவு இருக்கிறதே, அது படுத்தும் பாடு ரொம்பவே அதிகம். அது ஏன் அப்படி? அக உறவுகளில், ஏன் இவ்வளவு விரிசல்கள்?

Join / Telegram : @Tamil_Books_Library

# 2

## கலவியல் கவர்ச்சி!

ஜெ யந்தியின் முன்னாள் கணவர் ராஜுவுக்குப் பெண் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். ஏன், இவர்களின் திருமணத்துக்கு என்ன ஆச்சு? அதை நம் ஊர் நீதிமன்றம் செல்லாத் திருமணம் எனத் தள்ளுபடி செய்துவிட்டது. ஏன், எதனால் அந்தத் திருமணம் செல்லாமல்போனது?

விஷயம் இதுதான்... திருமணம் ஆன நாள் முதலாக ஜெயந்திக்கும் ராஜுவுக்கும் இடையே தாம்பத்திய உறவே நடக்கவில்லை. முதலிரவில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எல்லாம் ஜெயந்திக்கு இருந்ததோ இல்லையோ... மாப்பிள்ளை சாருக்கு எக்கச்சக்கமாக இருந்தது. 'சரி... முதல் நாள்தானே' என ஜெயந்தி விட்டுக் கொடுத்தாள். ஆனால், எல்லா ராத்திரிகளும் இப்படியே இருந்தால்?

ராஜுவுக்கு என்னதான் பிரச்னை? பிரச்னை, அவன் மனதில் இருந்தது. ராஜுவுக்குத் திருமணம் என்றால் என்ன, மனைவியை எப்படிக் கையாள வேண்டும், செக்ஸ் என்றால் என்ன, ஒரு பெண்ணின் உளவியல் என்ன... ம்ஹூம், எதுவும் தெரியவில்லை. இருந்தது எல்லாம் பயமும் பதற்றமும் மட்டுமே. அவனை வைத்துக்கொண்டு என்ன செய்வது? வேறு வழியின்றிதான் ஜெயந்தி கோர்ட்டுக்குப் போனாள். விவாகரத்து முடிந்தது என்று நிம்மதியாக இருந்தவள், திடீரென்று ஒருநாள் பதற்றத்தோடு என்னைத் தேடி ஓடிவந்தாள்! ராஜுவுக்கு இன்னொரு கல்யாணம் ஏற்பாடு செய்கிறார்களாம்.

'அவன் என்னைப் படுத்தினது போதும். அவனால் இன்னொரு பெண்ணும் பாதிக்கப்படக் கூடாது. முதலில் அவனைக் கூப்பிட்டு கல்யாணம்னா என்ன, எப்படி நடந்துக்கணும்னு புரியற மாதிரி சொல்லுங்களேன்' என்று பொது நலன் கருதி ஜெயந்தி என்னிடம் முறையிட்டாள்.

'இதுகூடவா தெரியாது? இதை எல்லாமா சொல்லித்தர முடியும்?' என்று நீங்கள் நினைத்தால்... ஸாரி! நிஜமாகவே ஆண்கள் பலருக்குத் திருமணம் குறித்த தெளிவான புரிதல்கள் இல்லை. ஜெயந்தி தன் முன்னாள் கணவனுக்காக வைத்த இதே கோரிக்கையை, இன்னும் எத்தனையோ பெண்கள் தங்கள் நிகழ்காலக் கணவனுக்காகக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்!

இன்றும் நிறைய ஆண்களுக்குத் திருமணம் என்பது ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு, 'அம்மா, அப்பா ஆசைப்படுறாங்க. எல்லோரும் செய்துக்கிறாங்க. நானும் செய்யலைன்னா அசிங்கமாப்போயிடும்' என்பதற்காக நடக்கும் ஒரு சடங்கு மட்டுமே. பெண்களையாவது சின்ன வயதில் இருந்தே, 'இன்னொருத்தன் வீட்டுக்குப் போகப்போறவ' என்று சொல்லிச் சொல்லியே ஓர் அளவுக்குத் தயார் செய்கிறார்கள். ஆனால், ஆண்களுக்கு இத்தகைய தயாரிப்பு எதுவும் இல்லை. அதனால்தான் திருமணம் என்கிற அமைப்பே ஆண்களை அச்சுறுத்துவதாக இருக்கிறது. அவர்களின் அறியாமை பெண்களையும் படுத்தி எடுக்கிறது!

திருமணத்தின் முதல் நிலை:

துணைக்கான தேர்வில் இருந்தே ஆரம்பிப்போமே... நரேஷ், மெத்தப் படித்து வெளிநாட்டில் வேலையில் இருப்பவன். '30 வயது நெருங்குகிறதே, கூட இருக்கும் பசங்களுக்கு எல்லாம் கல்யாணம் ஆகிவிட்டதே' என்றெல்லாம் பலவாறாக யோசித்து, 'பொண்ணு பாருங்க' என்று ஜாடைமாடையாகவும், அது பலிக்காதபோது நேரடியாகவும் சொல்லிவிட்டான். வீட்டில். ஜாதகம், நிறம், வசதி, வருமானம், அந்தஸ்து, இத்யாதி, இத்யாதிகளுடன் பெண் தேடினர்.

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

இறுதிக்கட்டத் தேர்வில் மூன்று பெண்கள் மிஞ்சினர். அதில் ஒருத்தியைக் காட்டி, 'இந்தப் பொண்ணு' என்று அம்மா சொல்லிவிட, நரேஷும் சுறுசுறுப்பாக அந்தப் பெண்ணைப் போய்ப் பார்த்தான். ஆனால், அந்தப் பெண் அவனுடைய உலகமயமான சிந்தனைக்குச் சரிவரவில்லை. லிஸ்ட்டில் அடுத்த பெண்ணைப் பார்த்தான். அவளை நரேஷுக்குப் பிடித்துப்போனது. அம்மாவிடம் சொன்னால் முகம் சுளித்தாள்.

இப்போது பையனுக்குக் குழப்பம். தனக்குப் பிடித்த பெண்ணைத் தேர்ந்தெடுப்பதா, அல்லது அம்மாவுக்குப் பிடித்த பெண்ணைத் தேர்ந்தெடுப்பதா? தனக்குப் பிடித்த பெண் என்றால், அது அம்மாவுக்குச் செய்யும் துரோகம் ஆகாதா? அம்மாவுக்குப் பிடித்த பெண் என்றால், குறைந்தபட்சம் அம்மாவாவது திருப்தி அடைவார்கள். அம்மாவுக்காகத் தியாகம் செய்துவிட்டால் என்ன என்பது பையனின் பெருங்குழப்பம்!

இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

'அம்மாவுக்குத் தெரியாததா? அவங்க சொல்கிற பெண்ணை ஏத்துக்கிட்டா, போகப்போக தானாக ஆசை வந்திரும்' என்கிறீர்களா? அல்லது 'கல்யாணம் யாருக்கு? உனக்குத்தானே. நீதானே வாழப்போற? உனக்குப் பிடிச்ச பெண்ணாப் பாருப்பா' என்கிறீர்களா?

உங்கள் கருத்து ஒரு பக்கம் இருக்கட்டும். அறிவியல் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

1. 'திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது' என்கிற பேத்தல்களை எல்லாம் மீறி, திருமணம் என்பது ஒரு ஜெனடிக் ஒப்பந்தம். இரண்டு பாலினரின் மரபணுக்கள் கலந்து ஆரோக்கியமான அடுத்த தலைமுறை உருவாகிட சமுதாயம் ஏற்படுத்திய ஒரு சடங்கு. அதனால்தான் திருமணம் முடிந்த உடனேயே 'சாந்தி முகூர்த்தம்' என்கிற சடங்கை முதலில் செய்கிறார்கள்.

2. இப்படி ஓர் ஆணும் பெண்ணும் இணைய வேண்டும் என்றால் அவர்களுக்குள் 'செக்ஸுவல் கெமிஸ்ட்ரி' சரியாக ஒருங்கிணைய வேண்டும். இந்தக் கலவியல் கவர்ச்சி என்பது அவரவர் சொந்த விஷயம். இதில் பெற்றவர்கள்கூடக் கருத்துச் சொல்ல முடியாது.

Join / Telegram : @Tamil_Books_Library

3. ‘அம்மா அப்பாவைத் திருப்திப்படுத்த…’, ‘அம்மா அப்பாவைப் பார்த்துக்கொள்ள’ என்ற காரணங்களுக்காக ஒருவனோ ஒருத்தியோ திருமணம் செய்துகொள்கிறார்கள் என்றால், அவர்கள் தங்கள் மரபணுக்களை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்கு முக்கியத்துவம் தரவில்லை என்று அர்த்தம். மனித விதிகளின்படி, ‘அடடா, என்ன ஒரு அம்மா சென்டிமென்ட்’ எனத் தோன்றலாம். ஆனால், இயற்கையின் விதிப்படி மரபணுவை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதுதான் உயிரினத் தோற்றத்தின் அடிப்படையான அம்சம்.

அதற்காக அம்மா - அப்பாவை அம்போ என விட்டுவிடுவதா? நம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கியவர்களை உதாசீனப்படுத்துவது அநியாயம் இல்லையா?

அதுவும் சரிதான்.

என்ன செய்யலாம்? இந்தச் சமன்பாட்டை எப்படிச் சரிசெய்யலாம்?

Join / Telegram : @Tamil_Books_Library




# தாயா..? தாரமா..?

`தா யா, தாரமா?' என்ற குழப்பத்தில் நிறைய ஆண்கள் சிக்கிக்கொள்கிறார்கள். இந்தியத் திருமணத்தில் ஏற்படும் மிக மோசமான

விரிசல்களுக்குக் காரணம், இந்தச் சமன்பாட்டுக் கோளாறுதான். அம்மா சென்டிமென்ட்களைக் கொஞ்சம் ஓரங்கட்டிவிட்டு இதை நாம் பேசுவோம்.

அம்மா பிள்ளையாக வளர்ந்தவர் ரகு. திருமணத்துக்குப் பிறகும் அப்படியே. அம்மாவின் பேச்சைக் கேட்டு தினமும் மனைவியை டார்ச்சர் செய்ய ஆரம்பித்தார் ரகு. அவளையும் அவள் குடும்பத்தையும் குறை சொல்வது, மட்டம் தட்டிக் கட்டம் கட்டுவது, நொட்டை சொல்லிக் கொண்டே இருப்பது... என, இப்படியே போனால் பாவம், மனைவி என்னதான் செய்வாள்?

Join / Telegram : @Tamil_Books_Library



‘வேலைக்குப் போயாவது சற்று நேரம் குடும்பப் பிரச்னைகளை மறந்து நிம்மதியாக இருக்கலாம்’ என்று வேலைக்குப் போனாள். அதற்கும், ‘படிச்ச திமிர், வேலைக்குப் போற மெதப்பு’ என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லி... சமையல், குழந்தைப் பராமரிப்பு மாதிரியான விஷயங்களில் பிரச்னைகளை ஆரம்பித்தார் மாமியார். இதைத் தட்டிக்கேட்கத் துப்பு இல்லாமல், ‘பெரியவங்கன்னா அப்படித்தான் பேசுவாங்க, அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போகத் தெரியலைன்னா, நீயெல்லாம் என்ன பொம்பளை?’ என்று அதற்கும் மனைவி மேலேயே பழியைப் போட்டு எஸ்கேப் ஆனார் ரகு.

பொறுக்க முடியாமல் ‘தனிக் குடித்தனம் போயிடலாமே?’

Join / Telegram : @Tamil_Books_Library

என்று மனைவி மன்றாடியபோது, 'எங்கம்மாகிட்டே இருந்து என்னைப் பிரிக்கப் பார்க்கிறியா?' என்று சண்டை.

இந்த விவகாரம் இப்படிப் போய்க்கொண்டு இருக்கும்போது, மாமியார் - மாமனார் எல்லாம் என்ன செய்தார்கள் என்றுதானே யோசிக்கிறீர்கள்?

மகன் தன்னைவிட்டுப் போய்விடுவான் என்கிற ஆதங்கத்தில் மாமியார், 'நான் செத்துப்போறேன்' என்று தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டுவிட்டார். மாமனார் அவசரமாக அவரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, ரகசியமாக என்னை வந்து பார்த்துச் சொன்னது இதுதான், "என் மருமகள் பாவம், படாதபாடுபடுகிறாள். ஒரு பெண்ணை இன்னொரு பெண்ணே இப்படித் துன்புறுத்துவதைச் சகிக்கவே முடியவில்லை. என் மனைவியை எந்தக் காலத்திலும் என்னால் அடக்க முடிந்ததே இல்லை. அழுகை, உண்ணாவிரதம், ஒப்பாரி, 'வீட்டைவிட்டுப் போறேன்', 'செத்துப்போறேன்' என்று ஏதோ ஓர் அஸ்திரத்தை வீசிக்கொண்டே இருப்பாள். நான் அவளை இங்கு அட்மிட் செய்ததே கொஞ்ச நாளைக்காவது நாங்கள் நிம்மதியாக இருக்கலாம் என்றுதான். இந்த இடைவெளியில் எப்படியாவது அவளைத் திருத்திவிடுங்கள்" என்றார்.

மாமியார்களைத் திருத்துவது ரொம்ப சுலபம் மாதிரி அவர் சொல்லிவிட்டுப் போனார். ஆனால், அது ரொம்பக் கஷ்டமான காரியம்.

பால் வடியும் முகமும், என்னைப்போலப் பாவமான பெண் உலகிலேயே இல்லை என்ற பாவ்லாவுமாகப் படுத்திருந்தார் மாமியார். தன் மகனைப் பெற்று வளர்க்க அவர் பட்ட பாடுகளை அடுக்கி, இப்படியெல்லாம் பாடுபட்டு வளர்த்துஆளாக்கிய தன் மகனை, "அந்தச் சிறுக்கி தலையணை மந்திரம் ஓதி கைக்குள் போட்டுக்கொண்டாள்" என்று ரீ-மிக்ஸ் கதை சொன்னார். கடைசியாக, "அவனுக்கு ஆயிரம் பொண்டாட்டி கிடைப்பா டாக்டர். ஆனா, இன்னொரு அம்மா கிடைப்பாளா?" என்று பஞ்ச் டயலாக் வேறு!

கடைசியில் நான், "இவ்வளவு பாடுபட்டு பையனை வளர்த்து ஆளாக்கினதுக்கு, பிரயோஜனமே இல்லாமப்போச்சு போங்க!" என்றதும் மாமியார் யோசிக்க ஆரம்பித்தார்.

Join / Telegram : @Tamil_Books_Library

புழு, பூச்சியில் தொடங்கி... சிங்கம், புலி, கரடி, மனிதன் வரை எல்லா ஜீவராசிகளிலும் தாய் என்பது குட்டிகளுக்காக மெனக்கெடத்தான் செய்கிறது. எந்தக் குட்டியும் `என்னைப் பெற்றுக்கொள், எனக்காகச் சிரமப்படு' என்று தாயிடம் வேண்டிக்கொண்டு பிறப்பது இல்லை. தாயிடம் இருந்து இயல்பாகவே இந்த `ப்ராசஸ்' நடக்கிறது. தன் உடலை வருத்தி தாய் ஏன் வம்சவிருத்தி செய்ய வேண்டும்? காரணம், அவள் மரபணுக்களைப் பரப்பிக்கொள்ள இருக்கும் ஒரே வழி அது மட்டும்தான். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மனித இனம் தொடர்ந்து நிலைத்து இருப்பதற்கான சுயநல ஏற்பாடுதான் இனவிருத்தி. அது மனித சித்தத்துக்கு அப்பாற்பட்டு தன்னியல்பாகவே நடக்கிறது.

இந்த இனவிருத்தியை மனிதத் தாய் மட்டும் செய்யவில்லை. உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளும் செய்யும் அனிச்சைச் செயல் இது. மனுஷிக்காவது பிரசவிக்க, டாக்டர், பயிற்றுவிக்க வாத்தியார், கட்டுப்படுத்த சட்டம் என எத்தனையோ ஊன்றுகோல்கள் உள்ளன. ஆனால், பிற ஜீவராசிகள் எல்லா வேலைகளையும் தானே செய்துகொள்ள வேண்டும். ஆக, தாய்மைச் சுமை என்று பார்த்தால், மனிதத் தாயைவிட பிற ஜீவராசிகளுக்குத்தான் அதிக பளு. ஆனால், பிற ஜீவராசிகள் தங்களின் கஷ்டத்தைச் சொல்லிக்காட்டி, அதற்குப் பிரதி உபகாரம் எதிர்பார்ப்பது இல்லை. பிற ஜீவராசி குட்டீஸும் இதை ஓவர் சென்டிமென்ட்டலாக அணுகுவது இல்லை. பிறந்தோமா, வளர்ந்தோமா, இனப்பெருக்கம் செய்தோமா, அடுத்த தலைமுறை எனும் தொடர் சங்கிலியை உருவாக்கினோமா என்று மிக கேஷுவலாக வாழ்கின்றன. காரணம், இயற்கையைப் பொறுத்தவரை குட்டி வெற்றிகரமாக இனப்பெருக்கம் செய்து, தன் முந்தைய தலைமுறையிடம் பெற்ற மரபணுக்களைச் சேதாரம் இன்றி, அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதே தாய்க்கு ஆற்றும் உதவியும் நன்றியும் ஆகும். இதை மீறி குழந்தை, தாய்க்குச் செய்ய வேண்டிய வேறு கடமைகள் இல்லை. கூட்டமாக வாழும் யானை, டால்ஃபின், குரங்கு மாதிரியான ஜீவராசிகளில் முதுமையில் குட்டிகள், பெருசுகளைப் பராமரிக்கும். ஆனால், அதில் பாசம் இருக்குமே தவிர, கண்மூடித்தனமான அம்மா சென்டிமென்ட் இருக்காது.

Join / Telegram : @Tamil_Books_Library

மற்ற ஜீவராசிகளில் எந்தத் தாயும், 'நான் உன்னைப் பெற்றேனே, வளர்த்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய்?' என்று பேரம் பேசி, தாய்ப் பாசத்தைப் பண்டமாற்றுப் பொருளாக்குவதும் இல்லை. மனிதத் தாய் மட்டும்தான் கொஞ்சமும் சங்கோஜப்படாமல், மிக வெளிப்படையாகத் தன் பதவியைத் துஷ்பிரயோகம் செய்கிறாள். சில சமயம், தன் குட்டியின் இனப்பெருக்கமே தடைபடும் அளவுக்கு!

மற்ற ஜீவராசி எவற்றிலுமே இல்லாத இந்த விசித்திரம், மனிதத் தாய்களில் மட்டும், அதிலும் சிலருக்கு மட்டும் நிகழ்வது ஏன்?

Join / Telegram : @Tamil_Books_Library




# பெண் இனத்தின் 'பவர்'!

மோசமான மாமியார்கள் ஏன் உருவாகிறார்கள்? அது எப்படி இந்திய ஆண்களுக்கு மட்டும் தன் அம்மாவின் குறைகள் எதுவும் கண்ணில் தெரிவதே இல்லை? என்று பலர் கேட்கிறார்கள். ஆண்களைவிடுங்கள். பெண்களுக்கேகூடத் தெரியாத ஓர் அறிவியல் ரகசியம் என்ன தெரியுமா? ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் பவர் வேட்கை அதிகம்!

உலகெங்கும் இருக்கும் சர்வ ஜீவராசிகளின் பெண் பாலினத்தைக் கூர்ந்து கவனித்தால், வெட்டவெளிச்சமாகத் தெரிந்துபோகும் உண்மை... the female of the species is deadlier than the male. அதாகப்பட்டது, எல்லா உயிரிலும் பெண்பாலே மிக ஆபத்தானது. காரணம், பெண்பாலுக்குத்தான் ஆணைவிட அதிகபட்ச வேட்டுவக் குணமும், பிழைக்கும் திறனும் இருக்கிறது. அவர்கள் இப்படி இருந்தாகவும் வேண்டும். காரணம், குட்டிகளுக்கு இரை தேடுவதும், அவற்றுக்கு வேட்டையைக் கற்றுத்தருவதும் பெண்ணின் வேலைதானே. இவள் சிறந்த வேட்டுவச்சியாக இருந்தால்தானே, அவள் குட்டிகளும் பிழைக்க முடியும்? அதனாலேயே, இயற்கை பெண்களைப் பிறவி வேட்டைக்காரிகளாகப் படைக்கிறது. மனிதர்களிலும் அப்படித்தான். ஆனால், ஒரு சின்ன வித்தியாசம், பிற பெண் பாலினம் நேரடியாக தன் வல்லமையை வெளிப்படுத்தும். தனக்கு வேண்டிய பவரை தானே போராடிப் பெற்றுக்கொள்ளும்.

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

ஆனால், மனிதப் பெண்கள் தங்கள் பவர் தேவைகளை இப்படி நேரடியாகவோ பகிரங்கமாகவோ தீர்த்துக்கொள்வது இல்லை. எல்லாமே மறைமுகத் தாய் வழி ஆதிக்கம்தான். காரணம், பிற ஜீவராசித் தாய்கள் யாரையும் அண்டிப் பிழைக்காமல் சுயமாக வாழ்கின்றன. ஆனால், மனிதத் தாய்க்கு மட்டும் சமீபத்திய சில காலம் வரை யாரையாவது அண்டிப் பிழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. காரணம், நம் சமூக அமைப்பில் எல்லா அதிகாரங்களும் ஆண்களிடமே இருந்தன. அதனால், யாராவது ஓர் ஆணைப் பிடித்து, அவன் மேல் ஓர் ஒட்டுண்ணியாக வாழ்ந்தால் ஒழிய, தங்களுக்கு என்று ஒரு வாழ்க்கை இல்லை என்கிற நிலைதான் பெண்களுக்கு.

ஆக, இயற்கையின் விதிப்படி வேட்கையில் சிறந்தவளாக பெண் இருந்தாக வேண்டும். ஆனால், மனித சமூக அமைப்பில் அவளுடைய வேட்டுவ குணம் வெளியே தெரிந்தால், ஆண்கள் ஆட்சேபிப்பார்கள். இந்த முரண்பாட்டைச் சரிசெய்யவும் பெண்கள் பல வழிகளை வைத்திருந்தார்கள்.

1. மற்ற பெண் மிருகங்களைப்போல தானே வேட்டைக்குப் போய் நேரத்தை விரயம் செய்யாமல், ஓர் ஆணைத் தேர்ந்தெடுத்து, அவனுக்கு பதி/புருஷன்/பிராணநாதா/பிரபோ என்கிற பதவிகளைக் கொடுத்து, அவனுக்குக் கொம்பு சீவிவிட்டு, அவனை வேட்டைக்கு அனுப்பி, அவன் மூலமாக உணவு, ஆதாயம், ஆற்றல் என்று பல வசதிகளைப் பெற்றுக்கொள்வாள்.

இந்த ஆணும் லொங்கு லொங்கு என்று இவளுடைய ஆசைகளை நிறைவேற்றத் தன் ஒட்டுமொத்த வாழ்நாளையே அர்ப்பணித்துவிடுவான். தன் பங்குக்கு இந்தப் பெண் அவனுடைய மரபணுக்களை மட்டும் பரப்பித் தர தன் கர்ப்பப்பையைப் பயன்படுத்துவாள். இந்தக் கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாக இருந்தால் எல்லாம் ஓ.கே. ஏதோ காரணத்துக்காக, இந்தப் பெண் எதிர்பார்த்த அளவுக்கு ஆண் வேட்டையாடி வெற்றியைக் குவிக்கவில்லை என்றால், அடுத்து அந்தப் பெண் என்ன செய்வாள் தெரியுமா?

2. முன்பு தேர்ந்தெடுத்த ஆணை டீலில் விட்டுவிட்டு, இன்னொரு புதிய ஆணை அந்தப் பதவிக்கு உயர்த்திவிடுவாள். இப்படிப் பகிரங்கமாக இன்னொரு ஆணுடன் கூடுவதற்கு

Join / Telegram : @Tamil_Books_Library

தைரியம் இல்லாத பெண் என்ன செய்வாள்?

3. கள்ளத்தனமாக, ரகசியமாக வேறு ஓர் ஆணுடன் கூடி, அவன் மூலமாக தன் காரியங்களைச் சாதித்துக்கொள்வாள்.

4. இப்படிப் பகிரங்கமாகவோ ரகசியமாகவோ தன் தேவைகளைத் தீர்த்துக்கொள்ள வாய்ப்புகள் அமையாத பெண், என்ன செய்வாள்? தன் மகனை வைத்தே தன் எல்லா nonsexual தேவைகளையும் தீர்த்துக்கொள்வாள். பல இந்தியக் குடும்பங்களின் நிலை இதுதான்.

'இந்த மனுஷனைக் கட்டிக்கிட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்? இந்த ஆள் சுத்த வேஸ்ட். நீயும் அப்படி இருந்துடாதேடா. அம்மா உன்னை நம்பித்தான் இருக்கேன். என் பிள்ளைதான் என்னைக் கரை சேர்க்கணும்' என்று புலம்பி, அழுதுவைத்தால் போதும். பையனுக்குத் தாய்ப் பாசம் பொத்துக்கொண்டு வந்துவிடும். 'அம்மா கஷ்டப்படும்போது நான் மட்டும் எப்படி என் பொண்டாட்டியோடு தனியா ஹனிமூன் போறது?' என்று அங்கேயும் அம்மாவை மடியில் கட்டிக்கொண்டு அழும் ஆண்களும் நம் ஊரில் உண்டு.

இந்த ஆடவர் குலத் திலகங்களுக்குத் தெரிவதே இல்லை, இவர்கள் இப்படி அரும்பாடுபட்டு வீடு, வசதி, புடவை, நகை, உணவு, ஊருலா என்று ஆற்றுவது எல்லாம் ஒரு மகன் தன் தாய்க்குச் செலுத்தும் நன்றி அல்ல; ஒரு கணவன் கொண்டவளுக்குச் செய்யும் கடமை என்று.

இப்படி, தன் ஆண் குழந்தையை கணவன் ஸ்தானத்துக்கு உயர்த்தி, அவன் மூலமாக தன் பவர் தேவைகளைத் தீர்த்துக்கொள்ளும் பெண்கள் இந்தியாவில் ஏராளம். காரணம், மறுமணம் செய்துகொள்ளும் சுதந்திரமோ, கள்ள உறவு வைத்துக்கொள்ளும் தைரியமோ, நம் பெண்களுக்குப் பெரும்பாலும் இருப்பது இல்லை. அதனால், தங்கள் மகனை வைத்தே தங்கள் ஆட்டத்தை ஆடி முடிக்கப் பார்க்கிறார்கள்.

5. சரி, மகனே பிறக்கவில்லை அல்லது, பிறந்ததும் உதவாக்கரையாகிவிட்டது என்றால், அடுத்து அந்தத் தாய் என்ன செய்வாள்? தனக்குப் பிறந்த மகளையே மகன் மாதிரி வளர்த்து, அந்தப் பெண்ணை 'the man of the family' என்கிற அந்தஸ்துக்கு உயர்த்தி, ஒட்டுண்ணி மாதிரி மகளை உறிஞ்சி வாழ்வாள் தாய்.

Join / Telegram : @Tamil_Books_Library

6. இதில் எந்த வழியும் வேலை செய்யவில்லை என்றால் கடைசி கட்டத்தில் பெண்ணே கோதாவில் குதித்து, சுயமாகப் போராட ஆரம்பித்துவிடுவாள். தங்கள் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தி, பவர் தேவையை தானே சுயமாகப் பூர்த்திசெய்துகொள்ளும் பெண்களைக் கண்டு வியப்போம் அல்லது, 'சே, பொம்பளையா இவ..? அடக்க ஒடுக்கமா இருக்க வேண்டாமா?'னு மிகத் துச்சமாக விமர்சிப்போம்.

ஆனால், அம்மா சென்டிமென்ட் என்னும் பிரம்மாஸ்திரத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் பெண்களைப் பார்த்தால் கை எடுத்துக் கும்பிடுவோம்.

இதில் பெரிய வேடிக்கை என்ன தெரியுமா? பெண்கள் எல்லாக் காலத்திலும் இந்த ஆறு வழிகளையும் பயன்படுத்திக் கொண்டேதான் இருக்கிறார்கள். ஆனால், நம் கண் முன்னாலேயே இது நடந்தாலும் நமக்கு இது புரிவது இல்லை. அதுவும் இந்த ஆட்டத்தை ஆடுவது நம் அம்மா என்றால், நம்மால் அதை உணரவே முடிவது இல்லை. லேசாகப் பொறி தட்டினாலும், 'சே... சே, எங்கம்மா அப்படி இல்லப்பா' என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம்.

ஏன் தெரியுமா?

Join / Telegram : @Tamil_Books_Library




# அம்மா சென்டிமென்ட்!

க லைஞர் மு. கருணாநிதி எப்போது தொலைக்காட்சியில் தோன்றினாலும், அவருக்கு வலது பக்கமாக ஆளுயரப் பெண் சிலை ஒன்று தெரியும். அவருடைய அம்மா அஞ்சுகத்தின் சிலை அது. அவருக்குத் தாய்ப் பாசம், அதனால் அம்மாவின் நினைவாக தத்ரூபமான சிலையை தன் பக்கத்திலேயே வைத்திருக்கிறார். ஆனால் ஒன்று கவனித்தீர்களா? முதல்வர் அவருடைய அப்பாவுக்கு ஒரு சிலையை வைக்கவே இல்லையே? ஏன்? மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்கூட அன்னை சத்யாவின் பெயரில் அத்தனை ஸ்தாபித்தார். ஆனால், அப்பா கோபாலனின் பெயரை எந்த நிறுவனத்துக்கும் வைக்கவில்லையே, ஏன்? சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் `அம்மா என்று அழைக்காத உயிரில்லையே' என்று உருகி உருகிப் பாடினாரே, அப்பாவைப்பற்றி ஒரு வரிகூடப் பாடவில்லையே, ஏன்? இவர்கள் என்ன? அனைவ ருக்குமே அவர்கள் அம்மாதான் தெய்வம். அம்மா சென்ட்டி மென்ட்தான் உலகின் உச்சகட்ட சென்ட்டிமென்ட்!

Join / Telegram : @Tamil_Books_Library



உலகம் எங்கும் மனிதர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். ஏன்? இந்தக் கேள்விக்குப் பலர் பல பதில்களை முன்வைக்கிறார்கள்.

சிக்மென்ட் ஃப்ராய்ட் சொன்ன பதில்தான் உலகை உலுக்கிய முதல் பதில்... எல்லா ஆண் குழந்தைகளுக்குமே தன் தாய்தான் முதல் காதலி. இரண்டு, மூன்று வயதில் இவளை ரசித்து, இவள் எனக்கே எனக்குத்தான் என்று உரிமை கொண்டாடுகிறார்கள் ஆண் குழந்தைகள். இதை 'எடிபெஸ் காம்ப்ளெக்ஸ்' என்றார் ஃபிராய்ட். 'அநேகமான ஆண்கள் ஐந்து ஆறு வயதிலேயே இந்த எடிபெஸ் காம்ப்ளெக்ஸில் இருந்து மீண்டுவிடுகிறார்கள். அம்மா என்பவள் அப்பாவின் மனைவி, நான் வளர்ந்து அப்பாவைப் போல பெரியவன் ஆன பிறகு எனக்கே எனக்கென்று வேறு ஒருத்தி வருவாள் என்கிற புரிதலுக்கு மாறுகிறார்கள். ஆனால், சில ஆண்கள் இப்படி மீளாமல் தொடர்ந்து அம்மாவையே ஓவராக நேசிக்கிறார்கள். எடிபெஸ் காம்ப்ளெக்ஸில் சிக்கிக்கொள்கிறார்கள்' என்றார் ஃபிராய்ட்.

அடுத்த பதிலைச் சொன்னவர் ஹாரி ஹார்லோ என்கிற

Join / Telegram : @Tamil_Books_Library

அமெரிக்க விஞ்ஞானி. இவர் குரங்குகளை வைத்து, தாய் - சேய் உறவு பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்தவர்.

இவர் தன் ஆராய்ச்சியில், குட்டிக் குரங்கு பிறந்த உடனே, அதை தன் தாயிடம் இருந்து பிரித்து வளர்த்தார். ஆனால், வேளாவேளைக்கு உணவையும் விளையாட்டுப் பொருட்களையும் கொடுத்து ஊக்குவித்தார். இப்படி, தன் தாயைச் சந்திக்காமலேயே தனிமையில் வாழ்ந்த இந்தக் குரங்கு, பிற்காலத்தில் பிற குரங்குகளுடன் எப்படிப் பழகுகிறது என்று சோதித்துப் பார்த்தால், ஊஹூம்... மற்ற குரங்குகளின் பக்கத்திலேயே போகவில்லை. சரி, மற்ற குரங்குகளுடன்தான் விளையாடவில்லை. குறைந்தபட்சம் பெண் குரங்கைக் கண்டால் அதனிடம் கூடவாவது தோன்றுகிறதா என்று பார்த்தால், ஊஹூம், பெண்ணை சீண்டக்கூட விரும்பவில்லை இந்த விசித்திரக் குட்டி.

இதில் இருந்து ஹார்லோ கண்டு பிடித்த விஷயங்கள்... தாய் - சேய் உறவுதான் குழந்தையின் சமூகப் பழக்க வழக்கங்களுக்கும், எதிர் கால காம உறவுக்கும் ஆதாரம். அப்பா இல்லை என்றால் நஷ்டம் இல்லை. ஆனால், அம்மா இல்லை என்றால் முதலுக்கே மோசமாகி விடும். அதனால், குரங்குகளில் மட்டுமல்ல, எல்லா உயிரினத்திலும் தாய் வழியாகத்தான் சமூகம் அமைகிறது. மனிதர்கள் உட்பட. இதுதான் இயற்கையின் விதி.

Join / Telegram : @Tamil_Books_Library



இதை நிரூபிப்பதுபோல லண்டன் ஜூவில் ஒரு சம்பவம் நடந்தது. அந்த ஜூவின் காப்பாளர் டெஸ் மண்ட் மோரிஸுக்கு அப்போது குழந்தை இல்லை. அதனால் அவர் மனைவி அங்கே இருந்த காங்கோ என்கிற குட்டி சிம்பன்ஸியை தன்னுடனேயே வைத்து, வளர்க்க ஆரம்பித்தார்.

காங்கோ சட்டை போட்டுக்கொள்ளும், ஸ்பூனில் சாப்பிடும், கழிப்பறையைப் பயன்படுத்தும். அவ்வளவு ஏன்... மிக அற்புதமாக ஓவியம் வரையும். காங்கோ வரைந்த ஓவியங்களை ஒரு கண்காட்சியில் வைத்தார் மோரிஸ். பிகாசோவின் ஓவியத்தைவிட அதிக விலை கொடுத்து இதை வாங்கினார்கள் கலை ஆர்வலர்கள். அத்தனை சுட்டியாக, சமர்த்தாக இருந்த காங்கோ கடைசி வரை இனப்பெருக்கமே செய்யவில்லை.

ஏன் என்று ரொம்ப காலம் சோதித்துப் பார்த்தார் மோரிஸ். கடையில்தான் அவருக்குப் புரிந்தது... காங்கோ மனிதப் பெண்ணால் வளர்க்கப்பட்டபடியால், அது தன்னையும் மனிதன் என்றே நினைத்திருந்தது. அதனால், திருமதி மோரிஸ் மாதிரியான பெண்களைத்தான் அதற்குப் பிடித்தது. சிம்பன்ஸி

Join / Telegram : @Tamil_Books_Library

பெண்களை அதற்குப் பிடிக்கவில்லை.

ஆக, " 'நீ இந்த இனம்' என்கிற ஜீவ அடையாளத்தைத் தருவதே தாய் - சேய் உறவுதான். அதனால், தாய் எந்த இனமோ, அந்த இனத்திலேயே துணை தேடுவதுதான் உயிரினங்களின் கலவியல் லாஜிக்" என்று விளக்கினார் டெஸ்மெண்ட் மோரிஸ்.

இதற்கு ரொம்ப வருடங்கள் கழித்து மைக்கேல் மீனி என்பவர், எலிகளின் தாய் - சேய் உறவு பற்றி ஆராய்ச்சி செய்யும்போது, இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கவனித்தார். தாய் எலிகள் குட்டி எலிகளை நாவால் தடவி சுத்தம் செய்யும். அதிலும் ஆண் குட்டி என்றால், கூடுதல் நேரத்துக்கு இப்படித் தடவிக்கொண்டு இருக்கும்.

ஏன் என்று அந்த ஆண் குட்டிகளின் மூளையைப் பரிசோதித்துப் பார்த்ததால் தெரிந்த திடுக்கிடும் தகவல்...

தாயால் இப்படி வருடப்பட்ட ஆண் எலிகளுக்கு மூளையில் புதிய இணைப்புகள் உருவாகி இருந்தன. ஆனால், தாய் வருடாமல் விட்ட ஆண்களுக்கு இந்த இணைப்புகள் ஏற்படவே இல்லை. இந்த இணைப்புகள்தான் எலிக் குட்டியின் எதிர்காலக் கலவியல் தேர்வுகளை முடிவுசெய்கின்றன. ஆக, ஆண் குட்டியின் கலவியல் விசையை உருவாக்குவதே அம்மாதான்.

ஃபிராய்ட், ஹார்லோ, மோரிஸ், மீனி ஆகிய எல்லோருமே ஒன்றையே திரும்பத் திரும்ப நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லா ஜீவராசியிலும் ஆண் குட்டிக்கும் அதன் தாய்க்கும் ஒரு பிரத்தியேகமான பாசப் பிணைப்பு இருந்து வருகிறது. இந்த பந்தம்தான் சுய அடையாளம், எதிர்பாலின அடையாளம், சமூக நடத்தை, கலவியல் தேர்வுகள் ஆகிய அனைத்து முக்கியமான விஷயங்களையும் நிர்ணயிக்கிறது. அதனால், இயற்கை இந்தத் தாய் - சேய் பந்தத்தை மேலும் அழுத்தமாக வலியுறுத்துகிறது. இதனால்தான் எல்லா ஜீவராசிக் குட்டிகளும் அம்மா சென்ட்டிமென்ட்டுக்கு ஆட்படுகின்றன.

இப்படிக் கண்மூடித்தனமாக அம்மாவை நேசிப்பது பிள்ளைப் பிராயத்தில் இந்தக் குட்டியின் பிழைப்புத் திறனை அதிகரிக்கும். ஆனால், வயதுக்கு வந்து இனப்பெருக்கப் பருவத்தை அடைந்துவிட்டால், ஆட்ட விதிகள் அப்படியே மாறிவிடும். அதன் பிறகு அம்மாவைக் கட்டிக்கொண்டு இருப்பது மரபணு

Join / Telegram : @Tamil_Books_Library

முன்னேற்றத்தையும் பிழைப்பையும் பாதித்துவிடும். அதனால், குட்டிகள் அம்மாவை மறந்து அடுத்த தலைமுறையை நோக்கிப் போயாக வேண்டும். இப்படிப் போவதை அம்மாவே ஊக்குவிக்கும்.

மற்ற எல்லா உயிரினத்திலும் இயற்கையின் இந்த இரட்டை நிலை அமைப்பு மிகக் கச்சிதமாக வேலை செய்கிறது. ஆனால், மனிதர்களில் மட்டும் இது மக்கர் செய்கிறது.

ஏன் தெரியுமா?

Join / Telegram : @Tamil_Books_Library



# முழுமைபெற்ற ஆண்!

இயற்கையின் அமைப்பில் மிருகங்களின் எண்ணிக்கை அதிகமாகும்போது, அதில் யார் பிழைப்பார்கள் என்பதில் கடும் போட்டி நிலவுகிறது. Struggle for survival எனும் இந்தப் போட்டியில் அதிகம் சாப்பிடுவது, அதிகம் சம்பாதிப்பது, அழகு மிளிர்வது எல்லாம் வெற்றிக்கான காரணங்கள் இல்லை. அதிக எண்ணிக்கையில் மரபணுக்களைப் பரப்பிக்கொள்பவருக்கே வெற்றி!

இந்த வெற்றியைப் பெற வேண்டுமானால், ஒவ்வொரு தாயும் தன் குட்டிகளுக்கு நல்ல ஜீன்களை (மரபணுக்களை) மட்டும் கொடுத்தால் போதாது. இந்த மரபணுக்களை வைத்து சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி தன்னை மாற்றிக்கொண்டு, தொடர்ந்து ஆட்டத்தில் ஜெயிப்பது எப்படி என்ற வாழ்வியல் உத்திகளையும் கற்றுத்தர வேண்டும். இதை அறிவியலில் 'மீம்' (meme) என்ற சொல்லால் குறிப்பிடுவோம்.

ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு வெறும் மரபணு மட்டும் பரப்பப்படுவது இல்லை. மதம், மொழி, உடை, கலாசாரம், உணவு என்பதைப் பற்றிய பல கருத்துகளும் பரப்பப்படுகின்றன. இந்தக் கருத்துகள் ஒவ்வொன்றும் ஒரு 'மீம்'. இப்படி ஆண்களுக்கு வேறு 'மீம்ஸ்'களையும், பெண்களுக்கு வேறு 'மீம்ஸ்'களையும் கற்பித்தாக வேண்டும்!

பொதுவாக, பெண் எப்போதும் துணையைத் தேடிப் போகாது. தானாக வரும் துணையோடு சேர்வது மட்டும்தான் அதன்

Join / Telegram : @Tamil_Books_Library

வேலை. ஆனால், ஆண் ஒரு பெண்ணைத் தேடிப் போயாக வேண்டும். அதுவும் ஏதோ ஒரு பெண்ணோடு சேர்ந்துவிட முடியாது. தன் இனத்தைச் சேர்ந்த பெண்ணோடு கூடினால் மட்டும்தானே குட்டி பிறக்கும்? ஆக, தன்னினம் என்பது எது? அதில் பெண் என்றால் எப்படி இருப்பாள்? அவள் உடலை எப்படிக் கையாள வேண்டும் என்பது எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அந்தக் குட்டி வெற்றிகரமாக தன் மரபணுக்களைப் பரப்பிக்கொள்ள முடியும்.


அதேபோல, பெண் குட்டிக்குப் பிள்ளை வளர்ப்பு, பராமரிப்பு, வேட்டுவ வித்தைகள், அதை அடுத்த தலைமுறைக்குச் சொல்லித்தரும் உத்திகள் ஆகிய மீம்ஸ்களை தாய் சொல்லித்தர வேண்டும். இதை எல்லாம் அவள் சொல்லித்தரத் தவறினால், அவளது குட்டிகள் மரபணுக்களைப் பரப்பாது. அப்புறம் வம்சம் பெருகாது. இந்த துரதிர்ஷ்டம் நிகழக்கூடாது என்றுதான் எல்லா ஜீவராசிகளிலும் தாய் மிக உஷாராக இயங்குகிறது.

ஆண் குட்டி பருவம் அடையும் பிராயம் வந்ததுமே, அதைத் தன் கூட்டத்தை விட்டு வெளியேற்றி, வெளிப் பிரதேசப் பெண்களைத் தேடிப் போகத் தூண்டுகிறது. இதனால் புதுப் புது பிரதேசங்களில் இந்தத் தாயின் மரபணுக்களைக் கொண்டுசென்று பரப்பி, அதிக மகசூல் பெற்றுத் தருகிறது இந்த ஆண் குட்டி. ஆக, பிள்ளைப்பிராயம் முழுக்கக் குட்டியைத் தன்னுடனேவைத்து வித்தைகளைச் சொல்லித்தரும் தாய், அது பருவம் அடைந்து விட்டால், தான் விலகிக்கொண்டு அதைச் சுயேச்சையாக இயங்க அனுமதிப்பதன் மூலம் தன் மரபணுக்களைப் பரப்பிக்கொள்கிறாள். இதுதான் ஒரு தாயின் இயல்பு.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மனிதன் காட்டுவாசியாக வாழ்ந்தபோது, மனிதத் தாயும் மற்ற விலங்கினத் தாயைப் போலத்தான் செயல்பட்டாள். அதனால், தன் குட்டி... காடு, மலை, பள்ளத்தாக்கு என்று பிழைப்பு/துணை தேடிப் போவதை அவள் தடுக்கவில்லை. மாறாக ஊக்குவித்தாள். இன்றும் காட்டுவாசிகளாக வாழும் பழங்குடி மனிதர்களில் இப்படி மகனை அம்மாவிடம் இருந்து பிரித்துக் காட்டு வாழ்வுக்குத் தயார்ப்படுத்தும் சடங்குகள் நடப்பது உண்டு. இதை coming of age ceremony (வயதுக்கு வருதல் சடங்கு)

Join / Telegram : @Tamil_Books_Library

என்கிறார்கள்.



ஆப்பிரிக்கப் பழங்குடி மனிதர்கள், பருவ வயதை அடைந்த ஆண்களை அம்மாவிடம் இருந்து பிரித்துக்கொண்டு போய், ஒரு தனிக் கூடாரத்தில் அடைத்து, அந்தப் பையன்களின் தோலைச் சிறு கத்தியால் கீறி காயங்களை ஏற்படுத்துகிறார்கள். இந்த வலி, வேதனை, இதனால் ஏற்படும் இன்ஃபெக்ஷன், அது ஏற்படுத்தும் காய்ச்சல், தனிக் கூடாரத்தின் இருட்டு... எல்லாவற்றையும் தாண்டி அந்தப் பையன் பிழைத்தால் அவன் காட்டு வாழ்வுக்கு உகந்தவன். அதுவே, குழந்தை மாதிரி அம்மாவைக் கட்டிக் கொண்டு அவளைவிட்டுப் பிரிய மறுத்தாலோ, உடல் வலியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் பாதியில் ஓடிப்போனாலோ, உயிர் பிழைக்கத் தவறினாலோ, அவனை முழு ஆண் என்று ஏற்க மாட்டார்கள்.

கிட்டத்தட்ட இதேபோன்ற மரபு, தமிழ்நாட்டிலும் அந்தக்

Join / Telegram : @Tamil_Books_Library

காலத்தில் இருந்து வந்ததை நம் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. தாயைவிட்டுப் பிரிந்து போர், வேட்டை, வியாபாரம், கல்வி, துறவு என்று வெளிப் பிரதேசங்களுக்குப் போன ஆண்கள்தான் நிஜ ஆண்கள் எனக் கருதப்பட்டார்கள். அதிலும் தன் உடம்பில் காயமே இல்லாத ஆண்களை முழு ஆண்கள் என்று ஆதித் தமிழர்கள் ஏற்றுக்கொண்டது இல்லை. அதனால் பிறந்த சின்ன குழந்தை ஏதோ காரணத்துக்காக இறந்துவிட்டால்கூட, அதை அப்படியே புதைக்காமல் அந்த குட்டி உடம்பை வாளால் கீறி அவனை 'முழுமைபெற்ற ஆணாக' மாற்றிப் புதைத்தார்கள்.

அந்தக் காலத் தமிழ்ப் பெண்களும் ஆண் குழந்தைகளைத் தங்களின் தனிச் சொத்தாகவோ, முதுமைக் காலத்துக் காப்பீடுகளாகவோ கருதவில்லை. புறநானூற்றுத் தாய் ஒருத்தி தன் கடமைகளும் எதிர்பார்ப்புகளும் என்ன என்பதை தெள்ளத் தெளிவாகத் தெரியப்படுத்துகிறாள்.

'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒளிறு வால் அருஞ்சமம் முருக்கிக்

களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!'


ஆக, அந்தக் காலத்துத் தமிழ்த்தாய் தன் மகனிடம் எதிர்பார்த்தது எல்லாம், காளை மாதிரி போய் போரில் யானைகளைத் தோற்கடித்து, வென்று வரும் வீரத்தை மட்டுமே! அப்போ மரபணுக்கள் என்கிறீர்களா? இவ்வளவு வீரம் இருக்கும் வெற்றியாளன் மரபணுக்களைப் பரப்பாமலா இருப்பான்?!

இந்தக் காலத்துத் தமிழ்த்தாய் எப்படி இயங்குகிறாள் என்பதற்கு இந்தப் புதுக் கவிதை ஓர் உதாரணம்...

மழையில் பையன் நனைந்துவிட்டானாம். 'ஏன் குடை எடுத்துட்டுப் போகலை, சளி பிடிக்கப்போகுது, ஜுரம் வரப்போகுது, கொஞ்சம்கூடப் பொறுப்பே இல்லை' என்று அப்பா, அண்ணா, தங்கை எல்லோருமே பையனைத் திட்டினார்களாம். அம்மா மட்டும், 'என் பையன் வெளியே போற

Join / Telegram : @Tamil_Books_Library

நேரத்துலயா வந்து தொலைக்கணும் இந்த சனியன் பிடிச்ச மழை' என்று மழையைத் திட்டினாளாம். என்னே தாய்ப்பாசம்? என்பதாக அமையும் இந்தத் தற்கால புதுக் கவிதை!



இந்தக் கவிதையில் வரும் அம்மா, பையனுக்குப் புத்தி சொல்ல மாட்டாள். அவனுடைய தப்பு என்று வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தாலும், பிறர் மீது பழி போட்டு தன் பிள்ளைக்குப் பரிந்து பேசுவாள். அவனுக்கு வீரத்தைப் புகட்டாமல், அவனை வெறும் குழந்தையாகவே கடைசி வரை பாவிப்பாள். இவை எல்லாம்தான் ஓர் ஆதர்ச தாய்க்கு உண்டான அடையாளங்கள் என்று இந்த புதுக் கவிதை சொல்கிறது.

இந்த இரண்டு கவிதைகளுக்கும் உள்ள கால இடைவெளி 2000 ஆண்டுகள் மட்டுமே. அதற்குள் தமிழ்த்தாயின் சிந்தனையும் செயல்பாடும் இப்படித் தலைகீழாக மாறிவிட்டனவே, ஏன்?

Join / Telegram : @Tamil_Books_Library




# பெண்ணை அடக்கினால்...

என்ன ஆகிவிட்டது இந்தத் தமிழ்ப் பெண்களுக்கு? புறநானூற்றுக் காலத்தில் மிகத் தெளிவாக இயற்கையின் விதிகளுக்கு உட்பட்டு வாழ்ந்த இதே பெண்கள், போஸ்ட் மார்டன் யுகத்தில் மட்டும் ஆண் குழந்தைகளை முந்தானையிலேயே முடிந்து வைத்துக்கொள்ள முயல்கிறார்களே, ஏன்?

இதற்கு மிக முக்கியக் காரணம், புறநானூற்றுக் காலத்துப் பெண்களுக்கு, குறைந்தபட்சம் தமிழ்நாட்டில் நிறைய அதிகாரம் இருந்தது. அதில் முக்கியமானது, தன் துணையைத் தானே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் சுதந்திரம். இந்தச் சின்ன விஷயம் மனித குணத்தை எப்படி இந்த அளவுக்கு மாற்றும் என்கிறீர்களா?

ஆச்சர்யமான உண்மை தெரியுமா? உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளிலும் பெண் மிருகம்தான் ஆணை கலவிக்குத் தேர்வு செய்கிறது. ஆண், பிற ஆண்களோடு போட்டியிட்டு, `தான் பெரிய கொம்பன்' என்பதை நிரூபிக்கும். அந்தப் போட்டியில் ஜெயிக்கும் ஆணை மட்டும் தன்னோடு இணைய பெண் அனுமதிக்கும். இப்படி மிகக் கவனமாக ஜெயிப்பவனையே தேர்வு செய்து பெண் இனம் சேருவதைத்தான் செக்ஷுவல் செலெக்ஷன் (sexual selection) என்றார் சார்லஸ் டார்வின். இந்த மரபணுப் போட்டியில் ஜெயிக்கவே உலகெங்கும் உள்ள ஆண் விலங்குகள் கொம்பு, பிடரி, கொண்டை, சிறகு, தோகை, தந்தம் என்று பலவிதங்களில் `என் மரபணு எவ்வளவு உசத்தியானது

Join / Telegram : @Tamil_Books_Library

பார்!' என்று விளம்பரப்படுத்தும் உடல் பாகங்களைக் கொண்டு இருக்கின்றன.

ஆதிகால மனிதர்களும் இந்த இயற்கை வழியில்தான் செயல்பட்டார்கள். ஆண் தன் வீரம், பராக்கிரமம், விளையாட்டு, கலை, பேச்சு, சாகசம், திறமை என்று வெளிப்படுத்துவான். அல்லது மற்ற மிருகங்களின் கவர்ச்சி பாகங்களைக் கடன் வாங்கி அதை அணிந்துகொண்டு பெண்களை அசத்தப் பார்ப்பான். இப்படி எல்லாம் தன் கவர்ச்சியைக் கடை பரப்பிக் காட்டுபவனைப் பெண் லபக் என்று பிடித்துக்கொள்வாள். அவனது மரபணுக்களைக் கொண்டு வலிமையான பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வாள்.

'சேச்சே, இதெல்லாம் அபாண்டம். பெண்கள் இப்படி எல்லாம் செய்யவே மாட்டார்கள்' என்று நம்ப மறுக்கிறீர்களா? ராமாயண சீதை ராமனை எப்படித் தேர்ந்தெடுத்தாள்? 'கௌசல்யா சுப்ரஜா ராமா, இதோ சீதை நான் உனக்குத்தான்' என்று உடனே அவன் மடியில் விழுந்துவிட்டாளா? 'மஹா விஷ்ணுவின் அவதாரமாகவே இருந்தாலும், இந்த வில்லை உடைத்து உன் வலிமையை நிரூபி' என்று சொல்லவில்லையா? ராமன் மட்டும் அன்று வில்லை உடைக்காமல் இருந்திருந்தால், அண்ணலும் நோக்கி அவளும் நோக்கியதெல்லாம் உட்டாலக்கடி ஆகியிருக்குமே!

ஆக, மனிதர்களிலும் அந்தக் காலத்தில் பெண்தான் ஆணைத் தேர்வு செய்தாள். அதனால், அந்தக் காலப் பெண்களுக்கு ஆண்களின் மேல் கொஞ்சம் அதிகாரம் இருக்கத்தான் செய்தது. இந்த ஏற்பாடு யானைக்கும், சிங்கத்துக்கும், புலிக்கும் சரிப்பட்டு வந்தாலும், மனித ஆணுக்கு இது கொஞ்சம் நெருடலாக இருந்தது. 'இவள் என்ன நம்மைத் தேர்வு செய்வது? அதற்குப் பதில் இவளை நாம் தேர்வு செய்துவிட்டால், அப்புறம் எல்லா பவரும் நமக்குத்தானே?' அதனால் பெண்ணின் கலவியல் தேர்வு முறையை முறியடிக்க ஆண்கள் பல ஐடியாக்களைப் பிரயோகித்தார்கள். அதில் முக்கியமானது, ஆணைத் தேர்வு செய்யத் தனக்கு அதிகாரம் இருப்பதாக இவள் நினைத்தால்தானே வம்பு? அப்படி ஓர் அதிகாரமே பெண்ணுக்கு இல்லை என்னும் அளவுக்கு அவள் மனதை மாற்றிவிட்டால்? அதன் பிறகு அவளை அடக்கி ஆள்வது சுலபமாகிவிடுமே?!

Join / Telegram : @Tamil_Books_Library

ஒருவரையோ, ஒரு பாலினத்தையோ, ஓர் இனக் குழுவையோ அடக்கி ஆளச் சில சுலபமான உத்திகளை மட்டும் பயன்படுத்தினால்போதும். காலம் காலமாக மனிதர்கள் பிறரை அடிமைகளாக்க இப்படியான உத்திகளைத்தான் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

* 'பிறவியிலேயே நீ தாழ்த்தி... கடவுள் உன்னை அப்படி ஈனமாகவே படைத்தார். அதனால், இயல்பிலேயே பெண் மட்டம். ஆண்தான் உசத்தி' என்ற தாழ்வு மனப்பான்மையைப் பெண் மனதில் அழுத்தமாகப் பதியவைப்பது.

* ஏதோ ஒரு காலத்தில் அவர்கள் நன்றாக வாழ்ந்த சரித்திரம் இருந்தால், அதை அப்படியே இருட்டடித்து, 'உலகம் தோன்றிய காலத்தில் இருந்தே நீ அடிமையாக இருக்க மட்டுமே படைக்கப்பட்டவள்' என்று மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லாதபடி சொல்லிவைத்து விடுவது. அப்போதுதான் அவளுக்கு சுயமரியாதையே ஏற்படாது. தனக்கு நடக்கும் இழிவுகளை இயல்பு என்று ஏற்றுக்கொள்ளும் அடிமை மனநிலை ஏற்படும்.

* நாம் இப்படி சொல்லிவைத்தது எல்லாம் சரியா - தவறா என்று தானே யோசித்து ஆராய்ந்து கண்டுபிடிக்க அவள் முற்பட்டுவிட்டால் நம் குட்டு வெளிப்பட்டுவிடுமே. அதனால், 'உனக்கு அறிவே இல்லை. உனக்குப் படிப்பே வராது' என்றும், 'நீ புத்தகத்தைத் தொட்டாலோ, பாடத்தைக் கேட்டாலோ, அது மகா பாவம். அப்புறம் நரகத்தில் உன்னை எண்ணெய்க் கொப்பரையில் போட்டு வறுத்து எடுப்பார்கள்' என்று பயமுறுத்தி வைப்பது. கல்வி வாய்ப்புகளே தராமல் அவளை முட்டாளாக வைத்திருப்பது. இதெல்லாம் அவள் சுய அறிவை ஆஃப் செய்துவிடும் என்பதால், அதன் பிறகு, அவளை நம் இஷ்டப்படி ஆட்டுவிக்கலாம்.

* இப்படி எல்லாம் நாம் மூளைச் சலவை செய்துவைத்தும், அவள் நமக்கு ஊழியம் செய்யாமல், வேறு எவனிடமாவது ஓடிவிட்டால்? அதனால், 'நான் எவ்வளவு மோசமாக இருந்தாலும், நீ எனக்கு மட்டுமே விசுவாசமாக இருந்து பதிபக்தியோடு என்னைக் கவனித்துக்கொண்டால், சொர்க்கத்தில் உனக்கு ஒரு சீட்டும், வரலாற்றில் ஒரு நல்ல பெயரும், பீச் ஓரமாக ஒரு

Join / Telegram : @Tamil_Books_Library

சிலையும் கிடைக்கும்' என்று வாக்குறுதிகளை அள்ளித் தெளிக்க வேண்டும். ஏற்கெனவே அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்று இருக்கும் இந்த அற்பப் பெண்ணுக்கு நம் உத்திகள் புரியவா போகிறது? அது பாட்டுக்கு அடிமையாக இருப்பதில் ஆனந்தம் காணும். இவளைப்போல இன்னும் பல அடிமைகளைச் சேர்த்துவைத்து, மரபணுக்களை மடமடவென்று பரப்பிக்கொண்டால், மரபணுப் போட்டியில் இந்த ஆணுக்குத்தானே வெற்றி?



ஆனால், இதில்தான் பிரச்னையே ஆரம்பித்தது. பவரே இல்லாத சூழ்நிலையிலும் தனக்கு என்று ஒரு பவரை

Join / Telegram : @Tamil_Books_Library

உருவாக்கிக்கொண்டாள் பெண்!

அது எப்படி?

Join / Telegram : @Tamil_Books_Library




# யாருக்கு யார் அடிமை?

மரபணுப் போட்டியில் ஜெயிக்க ஆண், 'பெண்ணடிமைத்தனம்' என்ற காயை நகர்த்தி பெண்களை நிராயுதபாணி ஆக்கினான். இதனால் பெண், ஆண்களைத் தரத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து, கலவிகொண்டு, உயர் ரக மரபணுக்களை மட்டும் பரப்பிய காலம் மலையேறிப்போனது.

கல்வி, அறிவு, சொத்து, வருமானம், தனி நபர் சுதந்திரம், சுய மரியாதை, தனக்கென ஓர் அடையாளம் என்று எதுவுமே இல்லாமல், வெறும் பிரசவ இயந்திரமாகப் பெண்கள் மாறிவிட, இந்த இயந்திரங்களை அபகரித்து, அவற்றினுள் தம் மரபணுக்களை விதைத்து, மானாவாரி சாகுபடி செய்ய ஆரம்பித்தார்கள் ஆண்கள். இப்படி இவர்கள் ஆதிக்கம் செலுத்திக்கொண்டு இருக்க, பெண்கள் மட்டும் சும்மா இருந்துவிடுவார்களா?

பெண் என்பவள் பிறவி வேட்டுவச்சி ஆயிற்றே! ஆண் நகர்த்திய அதே காயை அவனுக்கு எதிராக நகர்த்தி, அவனுக்கே தெரியாமல் அவனை மீண்டும் தனக்கு அடிமையாக்கிக் கொண்டாள். எப்படி என்கிறீர்களா?

1. அவள் உடம்பின் மீது ஆணுக்கு இருந்த மோகம்தான் அவளுக்குத் தெரியுமே. அதனால், தன் உடல் பாகங்களை இன்னும் இன்னும் கவர்ச்சியாக வெளிப்படுத்தி, ஆணை வசப்படுத்த முயன்றாள். ஆனால், இதில் ஒரு சிக்கல் இருந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

எல்லா பெண்களுக்குமே அதே உடல் பாகங்கள்தானே இருக்கின்றன? ஒருத்தியின் கவர்ச்சியைவிட இன்னொருத்தி அதிக கவர்ச்சியைக் காட்டிவிட்டால் போச்சு. ஆண் கட்சி மாறிவிடுவானே... அப்புறம் எப்படி அவனை அடிமைப் படுத்துவதாம்?

2. சமையல், சேவை, உபசரணை என்றெல்லாம் அவனுக்குப் பிடித்தபடி நடந்து, சோப்பு போட்டுவைத்தால், அவன் இவள் துணையை அதற்காகவாவது மீண்டும் மீண்டும் நாடுவானே. ஆனால், இதிலும் ஒரு பிரச்னை. சமையலை ஆண்கள்கூட வெகு ஜோராகச் செய்ய முடியுமே! வேலையாள்கூட அவன் மனைவியைவிட அதிக கீழ்ப்படிதலுடன் சேவை, உபசரணை மாதிரியான சமாசாரங்களைச் செய்து அசத்திவிட முடியுமே!

3. படுக்கையில் அவனுக்குப் பிடித்த மாதிரி எல்லாம் நடந்து, அவனை அசத்தோ அசத்து என்று அசத்தினால், 'என் மனைவி மாதிரி வருமா?' என்று இவள் முந்தானையிலேயே விழுந்துகிடக்க மாட்டானா என்றால், ம்ஹூம். இவன் நினைத்தால் எத்தனை முறை வேண்டுமானாலும் படி தாண்டி, மாற்றான் தோட்டத்து மல்லிகைகளை முகர்ந்துவிடுவானே. ஆண், பெண், அரவாணி என்று யாரிடமும் சுகம்கொள்ளும் தன்மைதான் அவனுக்கு இருந்ததே. ஆக, வெறும் கலவி சுகம் தந்து ஓர் ஆணைக் கட்டிப்போடுவது என்பது முடியாத காரியமாகிவிடுமே!

4. அந்த ஆணின் மரபணுக்களைக்கொண்ட குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டால், தன் ரத்தம் என்கிற பாசப் பிணைப்பில், 'என் குழந்தையைப் பெற்றவள் ஆயிற்றே' என்கிற தனி சலுகை தருவானே! இப்படிக் குழந்தையை வைத்துக் கொஞ்சம் பவரைச் சம்பாதித்துக்கொள்வதுதான் பெரும்பாலான பெண்களின் ஆட்ட உத்தியாக இருக்கிறது. உதாரணத்துக்கு, ராமாயண தசரத சக்ரவர்த்தியை எடுத்துக்கொள்வோம். கோசலை, சுமத்திரை, கைகேயி மூவருமே தங்கள் குழந்தைகளை வைத்துத்தானே காய் நகர்த்தினார்கள்?!

Join / Telegram : @Tamil_Books_Library



ஆனால், இதிலும் ஒரு பிரச்னை. குழந்தை என்றால் எந்தக் குழந்தை? பெண் குழந்தை என்றால், அது இன்னொருவர் வீட்டுக்குப் போய்விடும். காலம் முழுக்க அந்தக் குழந்தையைவைத்துக் காய் நகர்த்த முடியாது. ஆனால், ஆண் குழந்தை? அப்பாவுக்குப் பிறகு அவன்தான் குடும்பப் பெயர், வருமானம், ஆஸ்தி, அந்தஸ்து என்று எல்லாவற்றையும் கட்டிக்காக்கப் போகிறவன். பெற்றோருடனே இருந்து, அவர்கள் மறைவுக்குப் பிறகும் பித்ரு கடன்களைச் செய்யக் கடமைப்பட்டவன். அதனால், ஆண் குழந்தையைப் பெற்றால், பெண்களுக்குக் கையில் ஒரு ரெடிமேட் ஆயுதம் கிடைத்த திருப்தி.

இதிலும் ஒரு பிரச்னை. ஒருவேளை, அவள் கணவனுக்குப் பல

Join / Telegram : @Tamil_Books_Library

தாரங்கள் இருந்து எல்லோருமே ஆண் குழந்தைகளாகப் பெற்றிருந்தால், அப்புறம் எல்லா மனைவியருக்குமே சமமான பவர் என்றாகிவிடுமே. இப்படி இருந்தால் ஒருத்தி மட்டும் தன் பிழைப்பு விகிதத்தை எப்படி அதிகரித்துக்கொள்ள முடியும்?

5. கொண்டவனை நம்பினால் தானே இப்படிக் கண்டவளோடு போட்டியிடும் நிலைமை. தானே பெற்றெடுத்த தன் மகனைத் தனக்குச் சாதகமாக வளர்த்து, கடைசி வரை அவனையே தனக்குத் துணையாக வைத்துக்கொண்டால், எப்படியும் ஒருகாலத்தில் தந்தையின் எல்லா பவரும் அவனுக்குத்தானே வந்து சேரும். அட, தந்தையின் பவர் இல்லாவிட்டாலும், தனக்கென்று உள்ள ஆற்றலினால் மகன் சாதித்துவிட்டால் அது தாய்க்குச் சாதகமான அம்சம்தானே? அவனுக்கு ஆயிரம் மனைவியர் கிடைக்கலாம். ஆனால், தாய் என்றால் இவள் ஒருத்தி மட்டும்தானே?

ஆக ஆண், பெண்ணை அடிமைப்படுத்தி, அவளை வெறும் ஒரு பிரசவ இயந்திரமாகப் பயன்படுத்தினான். ஆனால், பெண்ணோ, தன் பிரசவ சக்தியையே ஓர் எதிர் உத்தியாகப் பயன்படுத்தி, ஆண் குழந்தையைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டாள்.

Join / Telegram : @Tamil_Books_Library



பெண்ணுக்கு கல்வி அறிவு இல்லை. ஆனால், ஆண் அறிவில் சிறந்தவன், உலகம் அறிந்தவன், பெண்ணைக் காட்டிலும் பல விதங்களில் வலிமையானவன்.

இப்பேர்ப்பட்ட ஆண் எப்படிப் பெண்ணுக்கு அடிமையாகிப்போனான், எப்படி இதை அனுமதித்தான்?

Join / Telegram : @Tamil_Books_Library

என்றெல்லாம் உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கிறதா?

இவ்வளவு வலிமையான இந்த ஆணை அடக்கும் பல அங்குசங்கள் பெண்ணின் கையில் இருந்ததுதான் காரணம். அதுவும் தான் பெற்றெடுத்து வளர்த்த பிள்ளையை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது அவளுக்குத் தெரியாதா? யாரோ ஒருத்தி பெற்ற ஆணான தன் கணவனையே தன் கட்டுபாட்டுக்குள் கொண்டுவரும் அவளால், தான் பெற்ற தன் மகனைத் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொள்வது பெரிய காரியமா என்ன?

ஆணின் மிகப் பெரிய தவறே, 'போயும் போயும் பெண்தானே, இவளால் என்ன செய்ய முடியும்?' என்ற குறைந்த மதிப்பீடுதான். அவளிடம் அவன் 'அலர்ட்' ஆகவே இருப்பது இல்லை. அதிலும் தன்னைப் பெற்ற தாய் என்றால், அவனுக்கு சந்தேகமே வருவது இல்லை.

பெண்கள் எல்லாம் சுத்த மோசம் என்று பொத்தாம் பொதுவாகப் பாடி வைத்த பட்டினத்தார் மாதிரியான ஆசாமிகள்கூட, தன்னைப் பெற்ற தாய் என்று வரும்போது, 'தாயிற் சிறந்த கோயில் இல்லை' என்று போற்றத்தானே செய்தார்? ஆண்களுக்கு இயல்பிலேயே இருக்கும் இந்த எடிபெஸ் காம்ப்ளெக்ஸ்தான் அவர்களின் மிகப் பெரிய பலவீனம். இந்த ஒரு பலவீனம் போதாதா? இதை வைத்தே, தன் மகனைக் கடைசி வரை தனக்கு அடிமையாகவே வைத்திருக்கப் பெண்கள் பல ரகசிய உத்திகளை மிகப் பகிரங்கமாகவே பயன்படுத்துகிறார்கள்!

அவை என்னென்ன என்று உங்களால் யூகிக்க முடியுமா?

Join / Telegram : @Tamil_Books_Library




# துணை தேடி இனம் சேரும்!

ஆ ண், பெண்ணை அடிமைப்படுத்திய கதை நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் பெண், ஆணைப் பதிலுக்கு அடிமைப்படுத்திய கதை ரொம்பவே சுவாரஸ்யமானது. லேசில் வெளியே தெரியாத ரகசிய உத்திகள் இதில் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைப் பற்றி சொல்வதற்கு முன்னால், மார்கரெட் மேலர் என்பவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

மார்கரெட் மேலர், ஹங்கேரியில் பிறந்து, அமெரிக்காவில் பணியாற்றிய ஒரு மனநல மருத்துவர். குழந்தைகளின் சமூக வளர்ச்சிபற்றி நிறைய ஆராய்ச்சிகள் செய்தவர். தாய்-சேய் உறவில் பல நிலைகள் இருப்பதை அவர் கவனித்தார்.

முதல் நிலை:

பிறந்த குழந்தைக்குப் புற உலகம் புரியாது. அது பெரும்பாலான நேரத்தைத் தூக்கத்திலேயே செலவிடுகிறது. ஆனால், மூன்று மாதம் தாண்டிய பின், அதற்குத் தன் தாயை மிக நன்றாகத் தெரியும். ஆனால், தாய் என்பவள் வேறு... நான் என்பது வேறு என்பது குழந்தைக்குத் தெரியாது. 'நான் என்றால், அது நானும் என் அம்மாவும்' என்கிற அளவில்தான் அந்தக் குழந்தையின் செயல்பாடு இருக்கும். அம்மா தன்னுடன் இருந்தால்தான் தன்னால் இயங்கவே முடியும் என்று நினைப்பதால், வெளியாட்கள், அம்மா இல்லாத தனிமை என்றால், குழந்தை உடனே பயந்து அழும். அம்மா பக்கத்து

Join / Telegram : @Tamil_Books_Library

அறையில் இருந்தாலும், தன் கண் எதிரே இருந்தால்தான் அவள் தன்னுடன் இருப்பதாக அர்த்தம் என்று எப்போதுமே தாயின் நேரடிப் பாதுகாப்பை நாடிக்கொண்டே இருக்கும்.

இரண்டாம் நிலை:

ஆனால், இதே குழந்தை இன்னும் கொஞ்சம் வளர்ந்தால், பள்ளிக்கூடம், பக்கத்து வீடு, உறவினர்கள், நண்பர்கள் என்று வெளி உலக மனிதர்கள் பலரை அது சந்திக்கும். ஆக, அம்மாவைத் தவிரவும் இந்த உலகில் பல மனிதர்கள் இருக்கிறார்கள், அவர்களும் என்னைப் பாதுகாப்பவர்கள்தான் என்பதைக் குழந்தை உணரும். அதே சமயம், குழந்தையின் மூளையும் லேசாக முதிர்வதால், அம்மா என் பார்வை வளைவில் இப்போது இல்லை என்றாலும், என் வட்டாரத்தில் எங்கேயோ இருக்கத்தான் செய்கிறாள், தேவையானபோது அவள் பாதுகாப்புக்குள் தஞ்சம் புகுந்துகொள்ளலாம் என்கிற நம்பிக்கை குழந்தைக்கு வரும். இப்படித் தாயைக் கண்ணால் பார்க்க முடியாவிட்டாலும், அவளை மனதில் ஒரு பிம்பமாக உருவகப்படுத்தி, அவள் எப்போதும் என்னுடனேதான் நிரந்தரமாக இருக்கிறாள். அதனால், அவளைத் தேடிக்கொண்டே இருக்க வேண்டாம் என்கிற முதிர்ந்த நிலைக்கு குழந்தை வந்துவிடுகிறது. இதை ஆப்ஜெக்ட் கான்ஸ்டென்சி object constancy என்பார் மேலர்.

மூன்றாம் நிலை:

குழந்தை மேலும் அதிகமாக வளர்ந்து அதன் மூளை இன்னும் கொஞ்சம் முதிரும்போது, அதற்கு 'நான் என்பது வேறு. என் அம்மா என்பது வேறு' என்பது புரிந்துபோகும். தன்னை ஒரு தனி உயிரியாகக் கருதி, தனக்கெனத் தனி அபிப்ராயம், தனி நம்பிக்கைகள், பிரத்தியேகமான ஒரு வாழ்க்கை என்றெல்லாம் குழந்தை யோசிக்க ஆரம்பிக்கும். அதனால், அது தாய் - தந்தையோடு முரண்படும். இப்படி தாயிடம் இருந்து பிரிந்து, தனக்கு என்று ஒரு தனி சுய அடையாளத்தைக் குழந்தை ஏற்படுத்திக்கொள்வதைத்தான் Separation-Individuation என்பார் மேலர். இப்படிப் பிரிந்து, தனித்துவமாவதுதான் எல்லா ஜீவராசிக் குட்டிகளுக்கும் இயல்பு. இந்த நிலையை அடைந்தால்தான், குட்டி எங்கு சென்றாலும், பிழைத்துக்கொள்ளும் பக்குவத்தைப்

Join / Telegram : @Tamil_Books_Library

பெறும்.



மார்கரெட் மேலர் சொன்ன இந்தச் சங்கதி எல்லா உயிர்களுக்கும் பொது. பருவ வயதை அடையும்போதே எல்லாக் குட்டிகளும், 'எனக்கு என்று ஒரு தனிப் பிரதேசத்தைக் கண்டு பிடித்து, என் தனி ராஜ்யத்தை அமைத்துக்கொண்டு, எனக்கு ஒரு துணையைத் தேடிக் கொண்டு, இனி என் மரபணுக்களைப் பரப்பும் வேலையைப் பார்க்கிறேன்' என்கிற அணுகுமுறைக்கு மாறிவிடுகின்றன. அதாவது... இந்தக் காலகட்டத்தில்தான்,எதிர் பாலின ஈர்ப்பு மிக அதிகமாகிவிடுவதால், துணை தேடி, இனம் சேரும் உந்துதலும் தலை தூக்கிவிடுகின்றன.

இதெல்லாம் இயற்கையின் அமைப்பு. காலங்காலமாக மனிதர்களும் இதற்கு உடன்பட்டார்கள். அவ்வளவு ஏன், இன்றும்கூட பெண்கள் அதிக சுதந்திரமாக இருக்கும் மேற்கத்திய நாடுகளில் இந்த முறையே பின்பற்றப்படுகிறது.

Join / Telegram : @Tamil_Books_Library

ஆனால், எங்கெல்லாம் பெண்கள் இன்னும் அடிமைகளாக, இன்செக்யூராக இருக்கிறார்களோ, அங்கெல்லாம் தம் பிழைப்பை அதிகரித்துக் கொள்ள, பெண்கள் இந்த விதியை அப்படியே மாற்றிவிடுகிறார்கள். தனக்கு அதிக பாதுகாப்பு தரும் குழந்தையை, எந்த வயதிலும்பிரியவிடாமல் தன்னுடனேயே தக்கவைத்துக் கொள்கிறார்கள்.



அம்மா இப்படிச் செய்தால், அவள் குழந்தைக்கு எங்கே போச்சாம் அறிவு?

ஆடு, மாடு, புலி, சிங்கம், எலி, அணில் மாதிரியான ஐந்தறிவு ஜீவன்கள்கூடச் சரியான பருவத்தில் தனித்துவமாகி, சுயமாக இயங்கும்போது, ஆறறிவு இருப்பதாக அலட்டிக்கொள்ளும் மனிதர்கள், இப்படி இன்னும் ‘அம்மாவும் நானும் ஒண்ணு. அம்மாவை விட்டுப் பிரியமாட்டேன்’ என்று முதிராத நிலையிலேயே நிற்கும் மாயம் என்ன?

Join / Telegram : @Tamil_Books_Library

விஷயம் இதுதான்... மனிதத் தாய் மட்டும் தன் குழந்தையின் மனதை முழுமையாக வளரவிடுவது இல்லை. தனக்குச் சேவை செய்ய ஒரு பணியாள், ஏவல் புரிய ஒரு தொண்டன், ஆபத்துகளில் இருந்து பாதுகாக்க ஓர் ஆயுதம், சம்பாதித்துத் தர ஓர் ஊழியன், பெருமைப் பட்டுக்கொள்ள ஒரு பொக்கிஷம், முதுமைக் காலத்துக்கு ஒரு காப்பீட்டுத் திட்டம்... என்கிற அளவில் இயங்க மட்டுமே தன் மகனைப் பழக்கி வைக்கிறாள். மற்றபடி, தாயிடம் இருந்து பிரிந்து தனித்துவமாகி என்கிற சமிக்ஞை லேசு பாசாகத் தென்பட்டாலும் உடனே, தன் அனைத்து அஸ்திரங்களையும் பயன்படுத்தி, அதை எப்படியாவது தடுத்துவிடுகிறாள்!


'எல்லா அம்மாக்களுக்கும் அப்படி இல்லை. எல்லா மகன்களும் அப்படி இல்லை' என்று ஆட்சேபிக்கத் தோன்றினால், நல்லவேளையாக அது உண்மைதான். எல்லா அம்மாக்களும் இப்படிச் சுயநலமாக இருப்பது இல்லை. எல்லா மகன்களும் இப்படி முட்டாளாக இருப்பதும் இல்லை. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக இன்றும் இந்தியத் திருமணங்கள் பல முறிய, பெரும் காரணமாக இருப்பது இப்படிப்பட்ட அப்நார்மல் அம்மாக்களும், முதிராத அவர்களின் மகன்களும்தான்.

அது சரி, இந்த அம்மாக்களிடம் அப்படி என்ன அஸ்திரங்கள் இருக்கின்றன? இப்படி மகன்களை விசித்திரமாகப் பழக்கிவைக்க அவள் என்னென்ன உத்திகளைப் பயன்படுத்துகிறாள்?

பெண்கள் பயன்படுத்தும் அஸ்திரங்கள் எல்லாமே மனம் சம்பந்தப்பட்டவை. அவை கண்ணுக்குத் தெரிவதே இல்லை. இயற்கையாகவே அமைந்த சில அம்சங்களை இவள் அஸ்திரங்களாகப் பயன்படுத்துவதால், அவை அஸ்திரங்கள் என்பதே மகன்களுக்கு ரொம்ப காலத்துக்குப் புரிவது இல்லை!

இயற்கைக்கு விரோதமான இப்படிப்பட்ட அதிசய அம்மா - மகன் உறவுகள் எப்படி உருவாகின்றன என்பதை அலசாமல் விடுவது ஆபத்துதானே?

Join / Telegram : @Tamil_Books_Library




# அம்மாக்களின் அஸ்திரங்கள்!

பெண்கள், ஆண் குழந்தைகளை அடக்கி ஆளும் அஸ்திரங்கள் ரகசியமானவைதான். ஆனால், அவற்றை அவர்கள் மிக பகிரங்கமாகவே பயன்படுத்துகின்றனர். அப்படி என்ன அஸ்திரங்கள் அவை?

அஸ்திரம் 1:

பிரசவிக்கும் பெண்ணின் தன்மை. 'பத்து மாசம் சுமந்து பெற்ற தாய்!' என்று ஒரு தாய் ஆரம்பித்தாளே போதும், சப்த நாடியும் அடங்கி மகன் உடனடி சரண்டர். பெண் குழந்தையிடம் இந்த பாச்சா பலிக்காது. காரணம், அவளும் பின் ஒருநாள் இதேமாதிரி பிரசவிக்கத்தானே போகிறாள். அதனால், அம்மாவால் இந்த விஷயத்தில் மகளை அதட்ட முடியாது. ஆனால், மகன் மட்டும் 'எனக்கு இந்தப் பிறவியைத் தந்த தாய்க்கு என்ன செய்தாலும் தகும்!' என்கிற தியாகி மனப்பான்மைக்கு மாறிவிடுவான். கொஞ்சம் துடுக்கான பையன் என்றால், 'யானை 22 மாதம் சுமக்குது... 10 மாதத்தைப் பெரிதாய் பேசுகிறீர்களே?' என்றோ, 'நானா பெத்துக்கச் சொன்னேன்?' என்றோ கேட்டு அம்மாவின் வாயை அடைத்துவிடுவான். ஆனால், பெரும்பாலான ஆண்களுக்கு அம்மா சென்டிமென்ட் அதிகம் என்பதால் அதை மீறி இப்படி எல்லாம் அறிவியல்பூர்வமாக அவர்களால் யோசிக்க முடிவது இல்லை!

Join / Telegram : @Tamil_Books_Library



அஸ்திரம் 2:

அப்பாவின் விந்து அணுக்களில் சரிபாதி X வகை குரோமோசோம்கள், மீதி Y வகை குரோமோசோம்கள். அம்மாவின் கரு முட்டையில் இருப்பது எல்லாமே X வகை குரோமோசோம்கள்தான். அப்பாவின் X அம்மாவின் X உடன் சேர்ந்தால் XX என்றாகி, பெண் குழந்தை பிறக்கும். அப்பாவின் Y அம்மாவின் X உடன் சேர்ந்தால் XY என்றாகி, ஆண் குழந்தை பிறக்கும்.

ஆக, பிள்ளை ஆணா... பெண்ணா என்று முடிவு செய்வதே அப்பாதான். ஆனால், ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பது, என்னவோ அவளே சுயமாகச் செய்த மிகப் பெரிய சாதனை என்கிற மாதிரிதான் சில பெண்கள் நடந்துகொள்கிறார்கள். இதனால், தங்கள் ஆண் குழந்தையை ஓர் அந்தஸ்து அறிகுறி status symbol என்கிற மாதிரியே நடத்துகிறார்கள். அதிக விலையுள்ள பொருளைப் பொத்திப் பாதுகாத்து, தான் மட்டும்வைத்து விளையாடி மகிழ்வதுபோல, தங்கள் மகனை யாருடனும் பகிர்ந்துகொள்ள விரும்பாமல், தான் மட்டும் சொந்தம் கொண்டாடுகிறார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

இப்படி பிரசவத்துக்குப் பிறகும் தொப்புள் கொடியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இருந்தால், பையன் எப்படி வளர்வான்? கொடி சுற்றிய பிள்ளை மாதிரி, இந்த சிக்கலிலேயே மாட்டி அவன் முதிர்ச்சி அடையாமல் போய்விடத்தானே வாய்ப்பு அதிகம்?! இப்படி ஒரு இன்செக்யூர் அம்மா, தன் மகனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, அவனை வளரவிடாமல் தடுப்பதைத்தான் persistent umbilical cord syndrome என்கிறோம்.

அஸ்திரம் 3:

பிள்ளைகளுக்குக் கதைகள் சொல்லி வளர்ப்பதும் அம்மாவின் பணிகளில் ஒன்று. இதை மிக சாதுர்யமாகப் பயன்படுத்தி, தனக்கு சாதகமான கதைகளை சொல்லி, பையனின் மனதில் தனக்கு ஒரு மையப் பகுதியை அபகரித்துக்கொள்கிறார்கள் சில பெண்கள்.

உதாரணம்... புத்லிபாய்.

தன் மகன் மோகன்தாஸுக்கு அவர் சொன்ன கதை என்ன தெரியுமா? கண் இல்லாத பெற்றோரை கூடையில் வைத்து ஊர் ஊராகச் சுற்றிய ஷ்ரவணின் கதை. ஷ்ரவண் தன் பெற்றோர் மேல்வைத்த பாசத்துக்கு ஒரு பளிச்சிடும் உதாரணமாக இருக்கலாம். ஆனால், இதனால் அவன் மரபணுக்கள் பரவவில்லையே. ஆக, ஷ்ரவண் ஒரு geneticloser. இவன் கதையைப்போய் தன் மகனுக்கு சொல்லித்தருவாளா ஒரு தாய்? சொல்லித் தந்துகொண்டேதான் இருக்கிறார்கள், நம் கண் எதிரிலேயே! ஆனால், அது குழந்தைக்கு உபயோகமான கதை இல்லை என்றும், அது தாய் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள செய்யும் ஒரு long term உத்தி என்றும் நமக்குத்தான் புரிவது இல்லை!

அஸ்திரம் 4:

எத்தனை வீடுகளில் ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் ஒரே மாதிரி வளர்க்கிறார்கள்? ஆண் என்பதாலேயே, அவனுக்கு அதிக முக்கியத்துவம், சலுகைகள், சொகுசுகள் என ஓரவஞ்சனையாக வளர்க்கும் அம்மாக்கள்தான் நம் ஊரில் ஏராளம்.

ஏன், ஆண் குழந்தைகளை மட்டும் அம்மாக்கள் இப்படி விழுந்து, விழுந்து கவனிக்கிறார்கள்?

Join / Telegram : @Tamil_Books_Library

காட்டில் வாழும் குரங்குக் கூட்டங்களில் பெண்களும் குட்டிகளும் டாமினென்ட். அவை ஆண் குரங்கைத் தொட்டுத் தடவி, பேன் பார்த்து தாஜா செய்துகொண்டே இருக்கும். இப்படி தன்னை தாஜா செய்யும் குரங்குகளை அந்த ஆண் பாதுகாக்கும். ஆக, அதிக தாஜா = அதிகப் பாதுகாப்பு. இதே விதியைத்தான் பெண்கள் தங்கள் இஷ்ட ஆண்களிடம் பயன்படுத்துகிறார்கள். இவள் தன் பாதுகாப்பை அதிகரித்துக்கொள்ள என்னை இப்படி எல்லாம் தாஜா செய்கிறாள் என்று புரிந்துகொள்ளும் விவஸ்தை பல ஆண்களுக்கு இருப்பது இல்லை என்பதால், ‛என்னை என்னமா கவனித்துக்கொள்கிறாள். இவளுக்கு என் மேல் எவ்வளவு ஆசை… இவளுக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேனோ?’ என்று மிகச் சரியாக வலையில் விழுகிறார்கள்.

அஸ்திரம் 5:

பெரும்பாலான தாய்மார்கள், ஆண்களுக்கு சமையல், சலவை, வீட்டு துப்புரவு பணிகள் மாதிரியான வேலைகளை சொல்லித்தருவதே இல்லை. கேட்டால், இது எல்லாம் பெண்களின் வேலை என்று சொல்லிவிடுவார்கள். பிரசவிப்பது ஒன்றைத் தவிர, பெண்கள் மட்டும் செய்யும் வேலை என்று ஒன்று கிடையவே கிடையாதே! ஆனால், அம்மாக்கள் இப்படி ஓர் அப்பட்டமான பொய்யை ஏன் சொல்கிறார்கள்? இந்த வேலைகளை எல்லாம் அவனே சுயமாக செய்து பழகிவிட்டால் பிறகு அம்மாவின் தயவு அவனுக்குத் தேவைப்படாதே! அதனால், ஆண் குழந்தைகளுக்கு சுய பராமரிப்பு சம்பந்தமான சூட்சுமங்களைச் சொல்லியே தராமல், அவர்களை நிரந்தரமாக தன்னையே நம்பி வாழ வேண்டியவர் ஆக்கிவிடுகிறார்கள் சில தாய்மார்கள்.

மிகக் கவனமாக யோசித்தால், உங்களுக்கே புரியும். பெற்று, பாலூட்டி, பாதுகாத்து, கதைகள் சொல்லி, திறமைகளை வளர்த்து, அவனுக்கு என்று ஒரு வாழ்வை அமைத்துக்கொள்ள வழிகாட்டுவதுதான் ஒரு தாயின் கடமை. ஆனால், இந்த ஒவ்வொரு பணியையுமே தனக்குச் சாதகமாக இருக்கும்படியே மாற்றி செய்து, அன்பெனும் ஆயுதத்தைப் பயன்படுத்தி மகனை தனக்கு மட்டுமே விசுவாசமாக இருக்கும் அடிமையாக்கிவிடுகிறார்கள் பல தாய்மார்கள். இப்படி தாங்கள்

Join / Telegram : @Tamil_Books_Library

அடிமையாக்கப்பட்டது தெரியாமல், ‘எங்க அம்மா மாதிரி வருமா?’ என்று கண்மூடித்தனமாக நம்பிக்கொண்டே இருக்கிறார்கள் ஆண்கள்!

Join / Telegram : @Tamil_Books_Library

# 11

## அன்பு எனும் அங்குசம்!

அம்மாக்கள் தங்களுக்கு அதிகப் பாதுகாப்பு தரும் ஆண் குழந்தையை (சில வீடுகளில் பெண் குழந்தையையும்) அன்பெனும் அங்குசத்தைப் பயன்படுத்தித் தனக்கு அடிமையாக்கிக் கொள்கிறார்கள். வலிமையான, புத்திசாலித் தனமான யானையை அடக்கி, பழக்கி, ஒரு தேங்காய் முடிக்காக கோயில் வாசலில் பிச்சை எடுக்கவைக்கிறார்களே, கிட்டத்தட்ட அதேபோல!

செய்தால், செய்துவிட்டுப் போகட்டுமே, அதனால் யாருக்கு என்ன நஷ்டம் என்கிறீர்களா?

சரி, இந்தக் கதையைக் கேளுங்கள்...

ஜெயம் ஒரு சராசரி இந்தியப் பெண். டாக்டர் மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்துகொண்டு, மிக வசதியாக வாழலாம் என்பதுதான் அவள் இளவயதுக் கனவு. அவளது துரதிர்ஷ்டம், எந்த டாக்டரும் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை.

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

ஒரு ரயில்வே குமாஸ்தாவுக்கு அவளை மணம் முடித்தார்கள். ஏதோ ஒரு குக்கிராமத்தில் கூட்டுக்குடித்தன வாழ்க்கைதான் அமைந்தது. அவள் கணவனின் சொற்ப மாத வருமானத்தை கவர் பிரிக்காமல் அப்படியே மாமனாரிடம் கொடுத்துவிட வேண்டும். அதனால், தன் தனிப்பட்ட தேவைகளுக்குத் தன் பெற்றோரையும் சகோதரர்களையும் எதிர்பார்க்க ஆரம்பித்தாள் ஜெயம். எப்படியாவது ஒருநாள் பெரிய பணக்காரி ஆகியே தீருவது என்கிற வைராக்கியம் இதனாலேயே அதிகரித்தது.

ஆனால், அவள் கணவனோ சல்லாபப் பிரியன். மனைவியோ சதா பூஜை, விரதம் என்று இருந்த பரமபக்தை. இருவருக்கும் ரசனை அலைவரிசை பொருந்தாததால், கணவன் தன் சக ஊழியைகளிடம் நைஸாகப் பேசியே தன் தேவைகளைத் தீர்த்துக்கொள்ள ஆரம்பிக்க, விஷயம் விபரீதமானது.

வேறு ஒரு பெண்ணோடு மனிதருக்குக் காதல் ஏற்பட்டு, அவள் கர்ப்பமாகி விட்டாள். விஷயம் தெரிந்தபோது, ஜெயத்துக்கு உலகமே திடீரென்று தலைகீழாகப் புரண்டது. அதுவரை பணம் மட்டுமே பிரதானம் என்று இருந்தவள் இப்படித் தடம் தவறும் கணவனை எப்படியாவது தன் வசப்படுத்த வேண்டுமே என்கிற இக்கட்டுக்கு ஆளானாள்.

பெரியவர்கள் தலையிட்டு இருவரையும் அரும்பாடு பட்டுச் சேர்த்து வைத்தார்கள். ஆனால், ஏற்கெனவே காமத்தில் பெரிய ஈடுபாடே இல்லாமல் இருந்த ஜெயத்துக்கு அதற்கு மேல் கணவனின் மேல் நம்பிக்கையும் இல்லாமல் போக, அவர்களுடைய இல்வாழ்க்கை பிள்ளைகளை வளர்க்க மட்டுமே அதற்கு மேல் பயன்பட்டது.

கணவனை நம்பிப் பயன் இல்லை என்று புரிந்துகொண்ட ஜெயம், தன் ஒட்டுமொத்த கவனத்தையும் தன் இரண்டு மகன்களின் மேல் குவித்தாள். டாக்டருக்கு மனைவியாகத்தான் முடியவில்லை... டாக்டருக்குத் தாயாகிவிட வேண்டும் என்று தீவிரமாக இருந்தாள்.

மகன்களிடம் தன் பரிதாபக் கதையைச் சொல்லி அழுது, 'அம்மா இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த மனுஷனோடு வாழுறதே உங்களுக்காகத்தான்!' என்று சொல்லிச் சொல்லியே வளர்த்தாள். பையன்கள் இருவருக்கும் அம்மாவின் மேல் அதிக பாதுகாப்பு

Join / Telegram : @Tamil_Books_Library

உணர்வும், அப்பாவின் மேல் அருவருப்பும் ஏற்பட ஆரம்பித்தது.

வீட்டில் பணப் பற்றாக்குறை ஏற்பட்டுவிட, அம்மா வேலைக்குப் போய் மகன்கள் இருவரையும் படிக்கவைக்க உதவினாள். ஒருவழியாக இரண்டு மகன்களுமே டாக்டர் ஆனார்கள். அதற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல், ஜெயம் வேலையை விட்டாள். மகன்களின் சம்பாத்தியம் பெருக ஆரம்பித்தது. மகன்களின் முயற்சியால் அது வரை வாழ்ந்த சின்ன வீட்டைவிட்டு, ஓர் ஆடம்பர பங்களாவுக்கு மாறினாள். அதற்குள் கணவரும் ரிட்டயராகிவிட, ஜெயம் முழுக்க முழுக்கத் தன் மகன்களின் வருமானத்தை நம்பியே வாழ வேண்டிய நிலை.

முதல் மகனுக்கு 35 வயது தாண்டிய பிறகும், 'சரியான பொண்ணே அமையலைடா!' என்று சொல்லிக்கொண்டே இருந்தாள் ஜெயம். அம்மா நமக்கு நல்லதுதான் செய்வார் என்று ஆணித்தரமாக நம்பிய முதல் மகனுக்கு வருடங்கள் உருள உருள... லேசாக சந்தேகம் தலை தூக்கியது. அது எப்படி இத்தனை கோடிப் பெண்கள் இருக்கும் இந்தியாவில் இவனுக்கு மட்டும் ஒருத்தி கிடைக்காமல் இருப்பாள்? கடைசியில் பையன் ஒரு பெண்ணைப் பார்த்து ரொம்பவும் பிடித்துப்போனதாகச் சொல்ல, 'அந்தப் பொண்ணோட அப்பாவுக்குத் தப்பான வழியில் பிறந்த பெண்ணாம் அது, போயும் போயும் கூத்தியாளுக்குப் பிறந்தவளையா உனக்குக் கட்டிவைப்பேன்?' என்று அதற்கும் ஒரு வெடி வைத்தாள் அம்மா. 'இனி மேல் முடியாது... எனக்கு வயதாகிறது. இவளைக் கட்டி வைக்காவிட்டால், என் ஹாஸ்பிடலில் ஒரு விதவை நர்ஸுக்கு வாழ்க்கை தந்துவிடுவேன்!' என்று மகன் மிரட்டல் விடுக்க, வேறு வழி இல்லாமல் முதல் மகனுக்குத் திருமணம் செய்துவைத்தாள் ஜெயம்.

ஆனால், மருமகளைக் கண்டால் அவளுக்கு என்னமோ பிடிக்கவில்லை. மருமகளையும், அவள் அம்மா - அப்பாவையும் எல்லா சமயத்திலும் ஜெயம் அவமானப்படுத்திக்கொண்டே இருக்க, மிரண்டுபோன அந்தப் பெண் தன் கணவனிடம் முறையிட்டாள். மகன் சொன்னான், 'எங்கம்மா எனக்குத் தெய்வம். குடும்பத்துக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டு எங்களைப் படிக்கவெச்சவங்க. அவங்களைப்பத்தி ஏதாவது பேசினேன்னா,

Join / Telegram : @Tamil_Books_Library

இதோ இதுதான் கதவு... வெளியே போயிடு!'

எது நியாயம் என்று யோசிக்கக்கூட முடியாத கண்மூடித்தனமான அம்மா சென்டிமென்ட்டில் சிக்கிக்கொண்டவனை என்னவென்று சொல்வது? என்னவோ இந்த உலகில் இவன் மட்டும்தான் அதிசயமான ஒரு டாக்டர் என்பது மாதிரி, இவன் அர்த்த ராத்திரியில் குடை பிடித்து, அராஜகம் செய்ய, பிறந்த வீட்டுக்கு அவமானம் வரக் கூடாதே என்று அவன் மனைவி பொறுத்துக்கொண்டே போனாள். குழந்தைகள் பிறந்தார்கள். அதன் பிறகு, இவளுக்கும் கொஞ்சம் அந்தஸ்து உயர்ந்தது. இனிமேல் அவளை, 'வெளியே போ' என்று சொல்ல முடியாதே! தனக்கென்று ஒரு குடும்பம் என்றான பிறகு, முதல் மகனால் அதற்கு மேல் தன் அம்மாவுக்குச் செலவழிக்க முடியவில்லை.

முதல் மகன், தான், தன் குடும்பம் என்று திசை திரும்பிவிட, ஜெயம் தன் இரண்டாம் மகனையே சார்ந்து வாழ ஆரம்பித்தாள். வருமானமே இல்லாத அவளுடைய எல்லா செலவுகளையும் இரண்டாவது மகனே கவனித்துக்கொள்ள, கணவனை வெறும் ஒரு காரோட்டி என்கிற லெவலுக்குப் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தாள் ஜெயம்.

இது இப்படி இருக்க, ஜெயம் தன் இரண்டாவது மகனுக்கும் திருமணத்தைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தாள். அவன் எதிரில் தட்சிணாமூர்த்திக்குக் கொண்டைக்கடலை மாலை சாற்றி வேண்டிக்கொள்வாள். ஆனால், 'அந்தப் பொண்ணுக்கு இது நொட்டை... இது நொள்ளை!' என்று தள்ளிப்போட்டுக்கொண்டே போனாள். எப்படியும் பெற்ற தாய் தனக்கு தீங்கா செய்துவிட போகிறாள் என்கிற நம்பிக்கையில் இருந்தான் மகன். வசதியான வீடு, சொகுசான கார், தேவைக்கு அதிகமாகப் பணம் என்று அவன் அம்மாவின் ஆசைகளை எல்லாம் நிறைவேற்றினான். பையனுக்கு 40 வயது தாண்டிவிட்டது. இன்னும் ஒரு நல்ல பெண்ணை அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை!

மகன் காத்துக்கொண்டே இருக்க, அவன் காசில் பெண் பார்க்கப் போகிறேன் என்று எல்லா ஊர்களுக்கும் போய்விட்டு, வெறும் கையோடு திரும்பி வந்தாள்.

Join / Telegram : @Tamil_Books_Library

இப்போது சொல்லுங்கள், இந்த ஆட்டத்தில் ஜெயித்தது யார்... தோற்றது யார்?

Join / Telegram : @Tamil_Books_Library




# ஆண் தோற்பது எப்போது?

மகனுக்குத் திருமணமே செய்யாமல், அவனுக்கு 40 வயது கடந்த பிறகும் வேடிக்கை பார்த்த அம்மா, மகனுடைய முதலிரவின்போது 'நெஞ்சு வலிக்குதே' என்று மயங்கி விழுந்த அம்மாக்கள், முதலிரவு தாண்டி தேன் நிலவுக்கு மகனைத் தனியாக அனுப்ப முடியாது என்று தானும் உடன் போன தாய்கள், தப்பித் தவறி மகன் தனியாக மனைவியுடன் தேன் நிலவுக்குப் போனாலும் நிமிடத்துக்கு ஒரு முறை போன் செய்து குடைச்சல் கொடுக்கும் தாய்கள்... எனப் பல வகையினர் இங்கு உண்டு.

சரி, அம்மாவுக்குத்தான் இன்செக்யூரிட்டி. இந்தியப் பாரம்பரியம் பெண்களுக்கு எந்த பவரையுமே தராததால், மகனைத் தன் வசப்படுத்தி, அவன் மூலமாகக் காரியங்களைச் சாதித்துக்கொள்கிறார்கள். ஆனால், பையனுக்குப் பகுத்தறிவு வேண்டாமோ? எங்கெல்லாம் அம்மாக்கள் பையனை வைத்துப் பரமபதம் ஆடுகிறார்களோ, அங்கெல்லாம் தோற்றுப்போகிறவர்கள் சாட்சாத் அந்தப் பையன்களேதான்.

உதாரணம்... ஒமரை எடுத்துக்கொள்வோம். ரொம்பவும் ஆசைப்பட்டு தன் உறவுப் பெண் நர்கீஸைத் திருமணம் செய்துகொண்டான் ஒமர். பேரழகியான அவள் பணக்கார வீட்டுப் பெண். இவன் மேல் பைத்தியமாகக்கிடந்தவள். இவனுக்கும் அவளை ரொம்பவே பிடிக்கும். இருவரும் ரொம்பவே மகிழ்ச்சியாக வாழ்ந்திருக்கலாம். ஆனால், ஒமர் வேலைக்குப் போன பிறகு, அவன் அம்மா தினமும் அவனுக்கு போன் செய்து,

Join / Telegram : @Tamil_Books_Library

`உன் பொண்டாட்டி என்னை மதிக்கிறதே இல்லை. மத்தியானமே சப்பாத்தி சுட்டு ஹாட் பேக்ல வைக்காதே, அவன் ராத்திரி வந்த பிறகு சூடா சுட்டுக்கலாம்னு சொன்னா, என் பேச்சைக் கேட்காம, நான் மத்தியானம் கொஞ்சம் கண் அசந்த நேரத்துல எல்லா சப்பாத்தியையும் சுட்டுவெச்சுட்டா. இதுதான் நீ கட்டின பொண்டாட்டி என்னை மதிக்கிற லட்சணமா?' என்று அழுதுவைக்க, ஒமருக்கு உடனே கோபம் பொசுக்கென்று தலைக்கேறியது.

கணவன் வீட்டுக்கு வரும்போது சப்பாத்தி சுடுவதில் நேரத்தை வீணடிக்க வேண்டாமே... எல்லா வேலைகளையும் முதலிலேயே முடித்துக்கொண்டால், அவனுடன் அதிக நேரம் செலவிடலாமே என்பது நர்கீஸின் திட்டம். அவள் மாலை அழகாக ஒப்பனை செய்துகொண்டு, அவனுக்காக ஆசையாகக் காத்திருக்க, வந்ததும் வராததுமாக அவளை உதாசீனப்படுத்தினான் ஒமர். என்ன காரணம் என்று சொல்லாமல் அவன் நெற்றிக்கண்ணைத் திறந்து, `அப்படி என்ன சோம்பேறித்தனம்... என்ன வளர்த்துவெச்சிருக்காங்க உன் வீட்டுல?' என்று சரமாரியாக அர்ச்சனை செய்ய, மனக் கசப்பினால் அன்று இரவு இருவரும் கட்டிலின் கோடிகளில் படுத்துக்கொண்டு இருக்க, இப்படியாக சப்பாத்தி மாதிரி சின்ன விஷயங்கள் அவர்கள் திருமண வாழ்க்கையைச் சலிப்புக்கு உள்ளாக்கின.

இதற்கிடையில், ஒமருக்கு ஒரு குழந்தையும் பிறந்துவிட, நர்கீஸ், இனியாவது அவன் தன்னைப் புரிந்துகொண்டு பிரியமாக இருக்க மாட்டானா என்று ஆசைப்பட்டாள். ஆனால் ஒமரோ, தொடர்ந்து தன் அம்மா, அக்கா, சித்தி என்று எல்லோர் பேச்சையும் கேட்டுக்கொண்டு, மனைவியைக் குறை சொல்லிக் கொண்டே இருந்தான். நொந்துபோனாள் மனைவி. ஒரு சண்டையில் இவன் தன் வசமிழந்து அவளைப் போட்டு அடித்துவிட, அவள் தகப்பனார் விஷயம் கேள்விப்பட்டு ஓடி வந்தார். "இந்தக் காட்டுமிராண்டியோடு என் மகளை நான் விடவே மாட்டேன்!" என்று அழைத்துப்போய்விட்டார்.

"அவளாதானே போனா, அவங்க அப்பன் பெரிய பணக்காரன்கிற திமிர்லதானே போனா... அவளாத் திரும்ப வரட்டும். நீ அவளுக்கு போன்கூடப் பண்ணாதேடா!" என்று தாய்க்குலம் ஓதிவைக்க, ஒமரும் அடி பிறழாமல் அப்படியே

Join / Telegram : @Tamil_Books_Library

இருந்தான்.

இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன. "வீட்டுல ஒரு நாய் வளர்த்தாகூட... அது சாப்பிட்டுச்சா, நல்லா இருக்கான்னு கவலைப்படுவோம். கட்டின பொண்டாட்டியும், பெத்த பிள்ளையும் எப்படி இருக்காங்கனு ஒரு போன்கூட பண்ணிக் கேட்காத இவனெல்லாம் ஒரு மனுஷனா, அவனை மறந்துடு" என்று நர்கீஸுக்கு எல்லோரும் அறிவுரை கூறினார்கள். அவள் படித்த பெண், அதனால், சும்மா வீட்டில் உட்கார்ந்துகொண்டு கவலைப்படுவதற்கு ஏதாவது வேலைக்குப் போகட்டுமே என்று அப்பா அவளுக்கு ஓர் பிசினஸ் ஏற்படுத்தித் தந்தார்.

பலரைத் தினமும் சந்திக்கும் சந்தர்ப்பம் பெற்றாள் நர்கீஸ். அப்படி அவள் சந்தித்த நபர்களில், ரியாஸ் என்பவனுக்கு அவள் மேல் ஆசை, காதல், இரக்கம் எல்லாம் வந்தது. அவன் அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்பி, அவள் பெற்றோரிடம் விண்ணப்பிக்க, ஆரம்பத்தில் ஆட்சேபித்த நர்கீஸும், போகப்போக இணங்க ஆரம்பித்தாள். இருவருக்கும் திருமணம் முடிவானது.நர்கீஸ் அவனை தலாக் செய்துவிட்டு, ரியாஸைத் திருமணம் செய்துகொள்ளப்போகிறாள் என்பது தெரிந்ததும், ஒமருக்குப் பதற்றம் ஆரம்பித்தது. அவள் தன்னைவிட்டு நிரந்தரமாகப் போய்விடப் போகிறாள் என்றதும்தான் அவனுக்குத் தன் இழப்பின் தீவிரம் புரிய ஆரம்பித்தது. நர்கீஸோடு அவன் சந்தோஷமாக இருந்த நாட்கள் நினைவுக்கு வர, தன் மனைவியை இன்னொருத்தன் தொடப்போகிறானே என்கிற தவிப்புஅவன் தூக்கத்தைக் கெடுத்தன. வீட்டில் இதுபற்றிப் பேச்சு தலை தூக்கியபோது, "பொம்பளை அவளுக்கே இன்னொரு புருஷன் கிடைக்கும்போது, என் பையனுக்கு நான் இன்னொரு திருமணம் பண்ணிவைக்க மாட்டேனா?" என்று ஆரம்பித்தாள் அவன் அம்மா.

"ஆமா, முதல் பொண்டாட்டியோடு ரொம்ப வாழவிட்டுட்டே... இன்னொரு பொண்ணு வந்து இந்த வீட்ல கஷ்டப்படணுமா? நான் ஒருத்தன் உன்கிட்ட மாட்டிக்கிட்டு கஷ்டப்படுறது போதாதுன்னு இப்ப என் பையன் வாழ்க்கையையும் கெடுத்துட்டியே!" என்று அப்போது மட்டும் திருவாய் மலர்ந்தார் ஒமரின் அப்பா. அப்போதுதான் ஒமருக்குச் சட்டெனப் பொறி தட்டியது.

Join / Telegram : @Tamil_Books_Library



அதுவரை அம்மாவை மீறி எதுவும் சிந்தித்தும் பார்த்திராத ஒமருக்கு அப்போதுதான் அம்மா என்கிற உறவை மறந்து ஒரு தனி மனுஷியாக அவளை எடை போட முடிந்தது.

நினைவு தெரிந்த நாளில் இருந்தே யாருடனும் அனுசரித்துப்போகாமல் எப்போதுமே இன்செக்யூர்டாக அம்மா இருந்தது அவன் நினைவுக்கு வந்தது. தங்கை தன் கணவனுடன் தங்க வந்தால், தன் படுக்கை அறையை அம்மா காலிசெய்து தந்ததும், இவன் தன் மாமியார் வீட்டுக்குப் போனால் மட்டும், "அங்கெல்லாம் போய் ராத்திரி தங்காதேடா, அப்புறம் நம்மளை மதிக்க மாட்டாங்க" என்று தடுத்ததும், நர்கீஸ் போனதில் இருந்து அம்மா அவன் சம்பளத்தை வைத்து தங்கை குழந்தைக்கு நகை செய்து போட்டதும், இன்னும் இதுபோன்ற பல சம்பவங்களும் நினைவுக்கு வந்தன.

அதற்குள் நர்கீஸ், ஜமாத்தில் சொல்லி விவாகரத்து வாங்கி ரியாஸை திருமணம் செய்துகொண்டாள். அடுத்த ஆண்டு அவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் அதற்கு அடுத்த ஆண்டு இன்னொரு பெண் குழந்தையும் பிறந்தன. அப்போதும் ஒமருக்கு

Join / Telegram : @Tamil_Books_Library

இன்னொரு திருமணம் செய்து முடிக்கவில்லை அவன் அம்மா. தன் அறையின் தனிமையில் தன் இழப்பை நினைத்து ஓமர் எவ்வளவோ வருந்தினான். ஆனால் அவன் அம்மா, "அந்த ராட்சசிகிட்டே இருந்து என் பையனைக் காப்பாத்திட்டேன்" என்று எல்லோரிடமும் பெருமைப்பட்டுக்கொண்டாள்.

ஆக, எப்போதெல்லாம் ஆண்கள் தங்கள் அம்மாக்களுக்கு அடிமைகளாக இருக்கிறார்களோ, அப்போதெல்லாம் அவர்கள் தங்கள் மரபணு அபிவிருத்தியில் தோற்றுத்தான் போகிறார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library



# பெண்கள் விரும்பும் ஆண்கள்?

தொ ல்காப்பியர் ஏன் அப்படி எழுதினார்? அடிமையாக இருப்பவன் பாட்டுக்குத் தலைவனாக அதாவது, ஹீரோவாக இருக்க முடியாது என்று ஒரு விதியை அவர் முன் வைக்கக் காரணம் என்ன? சிம்பிள்... சுய சிந்தனா சக்தியும் சுதந்திரமும் இல்லாதவன், ஏவல் செய்ய மட்டுமே லாயக்கானவன். இப்படிப்பட்டவனை ஆண்களும் மதிக்கமாட்டார்கள், பெண்களும் காதலனாகவோ கணவனாகவோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

உலகில் உள்ள எல்லா பெண் பாலின உயிரினங்களுக்கும் ஒரு பொது சுபாவம் உண்டு. அவை எல்லாமே தலைமைக் குணங்களைக் கொண்ட உயர் அந்தஸ்து ஆல்ஃபா ஆண்களைத்தான் இனப் பெருக்கத்துக்காகத் தேர்வு செய்கின்றன. தன் வாழ்வைச் சுயமாக நிர்ணயிக்க முடியாத அடிமை நிலையில் இருக்கும் ஒமேகா ஆண்களை பெண்கள் ஒரு பொருட்டாகக் கருதுவதே இல்லை.

இதில் ஒரு பெரிய மரபணுவியல் சூட்சுமமே இருக்கிறது. சமூகக் கூட்டங்களாக வாழும் யானை, குரங்கு, ஓநாய் மாதிரியான விலங்குகளில் என்னதான் நாம் எல்லோரும் ஒரே இனம், எல்லோரும் ஒரே தரம் என்று சமத்துவம் பேசினாலும், இவற்றுக்குள் ஒரு சமூக அடுக்கு நிலை social hierarchy இருக்கத்தான் செய்கிறது.

அதிக பவர் இருக்கும், பேரந்தஸ்து பெருந்தகை, ஆல்ஃபா என்கிற தலைமைப் பதவியை வகிக்கும். அதற்கு அடுத்த

Join / Telegram : @Tamil_Books_Library

அந்தஸ்தில் இருக்கும் பீட்டா, காமா, டெல்டா வகையறாக்கள்... மந்திரி, செயலாளர் மாதிரியான நிலைகளை நிரப்பும். இந்த எல்லா நிலைகளுக்கும் கீழே மிகக் குறைவான சமூக அந்தஸ்தில் இருக்கும் ஒமேகா, ஏவலுக்குக் கட்டுப்பட்டு இருக்கும்.

எப்படிப் புரட்டிப் போட்டாலும், கம்யூனிசம், சோஷலிசம் பேசினாலும், எல்லா மனிதர்களும் சமநிலை வகித்தாலும், இந்த பவர் அணி வரிசை பின்புலத்தில் இயங்கிக்கொண்டேதான் இருக்கும்.

இப்படி இயங்கும் இந்தத் தர வரிசையில் ஒரு பெண், ஆல்ஃபா ஆணைத் தேர்ந்தெடுத்தால்தானே அவனுடைய உச்சகட்ட அந்தஸ்து, வளங்கள் ஆகியவற்றைக்கொண்டு அவள் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்க முடியும்? அப்படியே ஒரு வேலை இந்த ஆல்ஃபா ஆண் தோற்றுப்போனாலும், முன்பு அவன் ஒரு ஆல்ஃபாவாக இருந்ததை வைத்துக் காலத்தை ஓட்டலாம். எதுவுமே இல்லாவிட்டாலும், அவனுடைய மரபணுக்கள் ஆல்ஃபா தனம் ததும்புபவை என்பதால், அவனுக்குப் பிறந்த குழந்தைகள் பிற்காலத்தில் தாமும் ஆல்ஃபா ஆகிவிடலாமே.

ஆனால், ஒமேகா?

ஒமேகா ஆண்களின் மரபணுக்களை உள்வாங்கிக்கொள்வதால், அவளுடைய குழந்தைகளுக்குப் பெரிய ஆதாயமே இல்லையே. இதனால்தான் சமூக அடுக்கு அமைப்பில் வாழும் எல்லா உயிரினப் பெண்களுமே ஆல்ஃபா என்றால், உடனே இசைந்துவிடுகின்றன. ஒமேகாவை ஓரங்கட்டிவிடுகின்றன.

தன் எதிரில் இருக்கும் ஆண், ஒரு ஆல்ஃபாவா... இல்லையா என்று கண்டுபிடிக்கும் திறமை பெண்களுக்கு இயல்பிலேயே அமைந்திருக்கிறது. பிரச்னை வரும்போது பயப்படாமல், அசகாயசூரனாக எதிர்த்துப் போராடி ஜெயிக்கிறானா? தன்னைவிட வறியவர் என்றால், உடனே தன் பலத்தைக்கொண்டு ரட்சிக்க முன்வருகிறானா? ஏவல் செய்பவனாக இல்லாமல், தானே சுயமாக யோசித்து கெட்டிக்காரத்தனமாகச் செயல்படுகிறானா? அவனுக்கு மேல்

Join / Telegram : @Tamil_Books_Library

தலைவர்கள் யாருமே இல்லை, அவன்தான் எல்லோருக்கும் மேல் என்பதை நிரூபிக்கிறானா? அவ்வளவுதான், பெண்கள் உடனே அவன் பக்கம் சாய்ந்துவிடுவார்கள்.

இதுவே, சாஸ்திர சம்பிரதாயப்படி திருமணம் செய்துகொண்ட அவளுடைய சொந்தக் கணவன், ஆல்ஃபாவாக இல்லை... அட, ஏதோ ஒரு பீட்டா, காமா, டெல்டாவாக இருந்தால்கூட, அவள் பொறுத்துக்கொள்வாள். ஆனால், அவனே ஒரு ஒமேகா என்றால், அவ்வளவுதான். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பெண்கள் இந்த ஆண்களைப் புறக்கணித்துவிட்டு, வேறு ஆண்களை நோக்கித் திரும்புகின்றனர். என்னதான் தாலி சென்டிமென்ட், கற்பு சென்டிமென்ட் என்று தடுப்புகள் போட்டாலும், இயற்கையின் உந்துதல்களை இவற்றால் தடுக்கவே முடிவது இல்லை.

அந்தக் காலத்திலாவது பெண்களின் இந்த வேட்டுவ இயல்பை மதம், சாஸ்திரம், சம்பிரதாயம், சமூக மரபு, குல வழக்கம், கிராமத்துக் கட்டுப்பாடு என்று பல விதங்களில் கட்டுப்படுத்த முடிந்தது. ஆனால் இன்று, உலகமே ஒரு சின்ன உருண்டையாகிக்கொண்டு இருக்கும் நிலையில், சுயகட்டுப்பாடு ஒன்றைத் தவிர, பெண்களைக் கட்டுப்படுத்த வேறு எந்த சக்தியும் இல்லை.


ஓர் ஆண், தன்மானத்தையும் மரபணுக்களையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், அவன் ஆல்ஃபா தனங்களைக் காட்டிக்கொள்கிறானோ இல்லையோ, கட்டாயமாக ஒமேகா அறிகுறிகளைத் தவிர்த்தே ஆக வேண்டிய சூழலில் இருக்கிறான்.

பிறக்கும்போது எல்லோருக்குமே எல்லைகள் அற்ற விசால மனசுதான். வளர... வளர... அம்மா சென்டிமென்ட், அப்பா சென்டிமென்ட், சகோதர சென்டிமென்ட் எனப் பலவித கட்டுப்பாடுகள் எல்லைகளைச் சுருக்குகின்றன. எஜமானர் விசுவாசம், அலுவலகப் பற்று என நம் வேலை நம்மை அடிமைப்படுத்துவது போலவே, மதப் பற்று, சாதிப் பற்று, மொழிப் பற்று, தேசப் பற்று என பல மாயைகளால் சமுதாயம் நம் மனதை முடக்கிவிடுகிறது. இவற்றை முக்கியம் என்று நம்பிக்கொண்டு, இவற்றுக்காக நாமும் மெனக்கெட

Join / Telegram : @Tamil_Books_Library

ஆரம்பித்துவிடுகிறோம். நம் நம்பிக்கையே நம் மனதை அடிமைப்படுத்திவிடுவதால், நம்மையும் அறியாமல் ஒமேகா மனநிலைக்குத் தள்ளப்படுகிறோம்.

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

ஆனால், இயற்கைக்கு இதெல்லாம் கிடையாதே... கடைசியில், only the fi ttest shall survive என்பதுதான் வெல்கிறது.

இயற்கையின் நியதி, சிலரது மரபணுக்களை வடிகட்டி ஒதுக்கித்தள்ளுகிறது. வேட்டையின்போது வறிய உயிர்களை வடிகட்டும் வேலையை ஆணும் செய்யலாம். ஆனால், கலவி வழியாக வடிகட்டும் வேலையைப் பெண்ணால் மட்டும்தான் செய்ய முடியும். அதனால்தான் இந்த sexual selection கலவியல் தேர்வில், பெண்கள் பாகுபாடோடு நடந்துகொள்கிறார்கள். அம்மாவுக்காக, அக்காவுக்காக, அலுவலகத்துக்காக, தாய்நாட்டுக்காக, தாய் மொழிக்காக, யாரோ ஒரு தலைவனுக்காக, ஏதோ ஒரு போதைக்காக... என்று அடிமையாகிப்போகும் ஆண்களை எல்லாம் ஓரங்கட்டிவிட்டு, தனக்காகவும் தன் மக்களுக்காகவும் தன்னை அர்ப்பணிக்கும் ஆல்ஃபா ஆண்களை மட்டுமே தேர்வு செய்து அவன் மரபணுக்களைப் பரப்பித் தருகிறார்கள் பெண்கள்.

இதுதான் இயற்கையின் அமைப்பு என்றால், ஒரு புத்திசாலி ஆண் என்ன செய்ய வேண்டும்?

Join / Telegram : @Tamil_Books_Library




# மரபணு ஆட்டம்!

கலவியல் தேர்வு (Sexual selection) என்கிற முறையில்தான் ஆண்களை எல்லாம் சலித்து, புடைத்து, தரம் பிரித்து, சிறந்த மரபு அணுக்களை மட்டுமே தேர்ந்தெடுத்து, அடுத்த தலைமுறைக்கு பேக்-அப் செய்கிறார்கள் பெண்கள். `இதைப் பெண்கள்தான் செய்ய வேண்டுமா? ஏன், ஆண்கள் செய்தால் ஆகாதா?' என்றால், சபாஷ்! சரியான கேள்விதான். இதற்கான பதிலும் ரொம்ப விவகாரமானதே!

ஆண், பெண் இருவருமே கலவியல் பங்கேற்பில் ஈடுபட்டாலும்கூட, இதில் பெண்ணின் பங்குதான் அதிகம். கலவியல் செல்கள் என்பவை இரண்டு பாலினருக்குமே பொது. இரண்டிலுமே 23 குரோமோசோம்கள்தான் இருக்கின்றன என்றாலும், இவற்றின் எண்ணிக்கையிலும் வடிவமைப்பிலும் எக்கச்சக்க வித்தியாசங்கள்.

ஓர் ஆண், ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 80 முதல் 100 மில்லியன் வரை விந்து அணுக்களை உற்பத்தி செய்கிறான். அவன் வயதுக்கு வந்த அந்தக் கணம் முதல், அவன் வாழ் நாள் முழுவதுமே இப்படி மில்லியன் கணக்கில் விந்து அணுக்களை உற்பத்தி செய்ய வல்லவன்.

ஆனால், ஒரு பெண், ஒரு மாதத்துக்கு ஒரே ஒரு கரு முட்டையைத்தான் உற்பத்தி செய்கிறாள். அதுவும் வயதுக்கு வந்த பிறகு ஆரம்பித்து, மெனோபாஸ் ஆகும் வரை. கூட்டிக் கழித்துப்பார்த்தால், கிட்டத்தட்ட 30 - 35 ஆண்டுகளுக்கு மட்டும்.

Join / Telegram : @Tamil_Books_Library

வருடத்துக்கு 12 கரு முட்டைகள் என்றால், தன் வாழ்நாள் முழுவதுமே சேர்த்து ஒரு பெண் உற்பத்தி செய்வது, மொத்தமே சுமார் 400 கரு முட்டைகளைத்தான்!

கரு முட்டையின் சைஸையும், விந்து அணுவின் சைஸையும் ஒப்பிட்டுப் பார்த்தால், விந்து அணு ஒரு சின்ன புள்ளி மாதிரியும் கரு முட்டை அதைவிட 1,000 மடங்கு பெரிதாக, ஓர் உலக உருண்டை மாதிரியும் இருப்பதைக் காணலாம். காரணம், விந்து அணுவில் வெறும் 23 குரோமோசோம்களும் அவற்றை நீந்த வைக்க ஒரு வாலும், அந்த வாலுக்கு நீந்தும் சக்தியைத் தர ஒரு குட்டி இன்ஜினும்தான் உள்ளன.

கரு முட்டையிலும் அதே 23 குரோமோசோம்கள் என்றாலும், அந்த குரோமோசோம்களைச் சுற்றிலும் சக்தி கொடுக்க நிறைய கொழுப்பும் புரதமும் திரண்டு இருக்கும். காரணம், கரு முட்டை என்பது ஒரு சக்திப் பிழம்பு. கருவுக்கு போஷாக்கு அளிக்க வேண்டிய அளவு எரிபொருளும், ஆற்றலும் அதில் நிறைந்து இருக்கின்றன.

Gene economics மரபு அணுப் பொருளாதாரத்தின் அடிப்படையில் பார்த்தால், ஆணின் விந்து அணுவைத் தயாரிக்க அதிக செலவு ஆவது இல்லை. அதனால், ஒரே நாளில் பல மில்லியன் கணக்கில் உற்பத்தி செய்து தள்ள முடியும். ஆனால், பெண்ணின் கரு முட்டையோ, ரொம்பவே காஸ்ட்லியான ஒரு படைப்பு. அதனால்தான், அது மாதத்துக்கு ஒன்று என்று தயாராகிறது. அதனால், எரி பொருள் இருப்பை வைத்து மதிப்பிட்டால், விந்து அணு மலிவானதாகவும், கரு முட்டை விலை உயர்வானதாகவும் ஆகிவிடுகிறது.

ஆணின் விந்து அணுக்களுக்குச் செய்கூலி மிகக் குறைவு. அதனால், அது விரையம் ஆனாலும் பெரிய நஷ்டம் ஏற்படாது. அதனால்தான் ஆண் மிருகங்கள், பெண்ணின் சாயலில் இருக்கும் பிற வஸ்துகளைக் கண்டாலும், உடனே விந்து அணுக்களை வெளியேற்றிவிடுகின்றன. அதனால், அந்த மிருகத்துக்கு எந்தப் பெரிய இழப்பும் இல்லை. ஆனால், பெண் தயாரிப்பதே மாதத்துக்கு ஒரே ஒரு கரு முட்டை என்பதால், அதை விரையம் செய்யும் பேச்சுக்கே இடம் இல்லை. அதனால், பெண் தன் காஸ்ட்லியான முதலீட்டை மிகுந்த

Join / Telegram : @Tamil_Books_Library

எச்சரிக்கையுடனே அணுக வேண்டி இருக்கிறது.

தன் மரபு அணுக்களைப் பரப்பிக்கொள்ள ஆண் அதிகம் மெனக்கெட வேண்டி இருப்பது இல்லை. ஒரு தகுந்த பெண்ணைத் தேடிப் பிடித்து, அவளை இசையவைத்து, உடல் பாகங்களைப் பொருத்தி, விந்து அணுக்களை முதலீடு செய்துவிட்டால்போதும். சில நிமிட அசைவுகள், சில துளி விந்து அணுக்கள்... இந்த சொற்ப முதலீட்டிலேயே அவன் மரபு அணுக்கள் எளிதாகப் பரவிவிடும். அதன் பிறகு, அந்தப் பெண் இருக்கும் திசை பக்கமே அவன் வரவில்லை என்றாலும், அவன் மரபு அணுக்கள் மிக ஷேமமாகப் பரவித்தான் இருக்கும்.

ஆனால், பெண் தன் மரபு அணுக்களைப் பரப்பிக்கொள்வது இத்தனை எளிது இல்லை. இவள் மாதம் முழுக்க முயன்று, எத்தனையோ கிலோ எரிபொருளைக் கொட்டிக் குவித்து, ஒரே ஒரு கரு முட்டையை உருவாக்குகிறாள். அந்தக் கரு முட்டையை விந்து அணுக்களோடு கலந்து, கருவைத் தன் உடம்பிலேயே உருவாக்குகிறாள். இந்தக் கருவை மாதக்கணக்கில் தன் உடலில் தக்கவைத்து, போஷாக்கு அளித்து, பிரசவத்தின் பெரும் துயர்களை எல்லாம் அனுபவித்து, குட்டியை ஈன்றும் புறம் தந்து, அதற்குப் பாலூட்டி, பத்திரப்படுத்தி, வாழ்வியல் வித்தைகள் சொல்லித் தந்து... ஆக, பெண் தன் ஒட்டுமொத்த உடலையும் வாழ்வையும் பணயம் வைத்தால் ஒழிய, அவளுடைய மரபு அணுக்கள் செம்மையாகப் பரவாது.

ஆக, இனப் பெருக்க ஆட்டத்தில் ஆணின் முதலீடு மிக சொற்பமே. ஆனால், பெண் செய்யும் முதலீடு மிக மிக அதிகம். இவ்வளவு அதிகமான முதலீட்டை சும்மா ஏதோ ஒரு சோப்ளாங்கியின் மரபு அணுக்களைப் பரப்புவதற்குச் செலவழித்தால், அதைவிட முட்டாள்தனம் வேறு என்ன இருக்க முடியும்? இதே சிரமங்களை ஏதோ ஒரு சூப்பர்மேனின் மரபு அணுக்களைப் பெற்றுத்தர மேற்கொண்டால், அதில் இருக்கும் அர்த்தமே அலாதிதானே!

அதனால்தான், ஆண்களை எடைபோட்டு, 'இவன் தேறுவானா... மாட்டானா? இவன் மரபு அணுக்கள் தேறுமா... தேறாதா' என்று மிகத் துல்லியமாகக் கணக்கிடும் ஆற்றலை இயற்கை பெண்களுக்குப் பிறவியிலேயே படைத்து இருக்கிறது. எல்லா

Join / Telegram : @Tamil_Books_Library

ஜீவராசிகளிலும் பெண்பால் மிக மிகக் கறாராகத்தான் துணையைத் தேர்வு செய்கிறது.

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

மனிதர்களிலும் பெண்கள் எப்போதுமே மிகக் கணக்காகத்தான் துணைத் தேர்வில் (mate selection) ஈடுபடுகிறார்கள். அவர்கள் வாழும் காலம், பருவம், சூழல் எல்லாவற்றையும் சரிபார்த்து, எந்த மரபு அணுக்கள் இருந்தால், தன் குட்டி சுலபமாகப் பிழைக்க முடியும் என்பதை உணர்ந்து, அந்த மரபு அணுக்களைச் சுமக்கும் ஆண்களாகத் தேர்வு செய்கிறார்கள்.

இந்த செக்ஸுவல் செலெக்ஷனைப் பெண்கள் செய்யும் விதம் ரொம்பவே சுவாரஸ்யமானது. மனித வரலாற்றின் வெவ்வேறு கால நிலைகளில், வெவ்வேறு தேர்வு வரையறைகளை வைத்து ஆண்களைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள் பெண்கள்.

இப்படி மாறிக்கொண்டே வரும் பெண்ணின் ரசனையைப் புரிந்துகொண்ட புத்திசாலி மனித ஆணும், காலத்துக்கு ஏற்பத் தன்னைத்தானே மாற்றிக்கொண்டே வந்திருக்கிறான். அதனால்தான், மானுடம் மற்ற எல்லா ஜீவராசிகளையும் முந்தி வந்திருக்கிறது. தன்னை மாற்றிக் கொள்ளாமல் பின்தங்கிப்போன மக்கு ஆண்களையும், அவர்களது மரபு அணுக்களையும் பெண்கள் வடிகட்டிக்கொண்டே வந்திருக்கிறார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library




# பெண் எப்படி தலைவியானாள்?

பெண்கள் காலத்துக்கு ஏற்ப வரையறைகளை மாற்றி கலவியல் தேர்வு செய்தார்கள். இதை அனுசரித்து கெட்டிக்கார ஆண்களும் தங்கள் தன்மையை மாற்றிக்கொண்டே வந்தார்கள். இப்படி மாறி வந்த ஆண்களின் மரபு அணுக்கள் பரவின. மாறாத ஆண்களின் மரபு அணுக்கள் மறைந்துபோயின. 'இவை எல்லாம் கேட்க கோவையாகத்தான் இருக்கிறது. ஆனால், என்ன ஆதாரம்' என்கிறீர்களா? அதில் ஒளிந்திருக்கிறது சுவாரஸ்யம்!

குரங்கில் இருந்து மனிதர்கள் தோன்றிய ஆரம்ப காலத்தில், பெண்கள் வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டு இருந்தார்கள். பெண்கள் வேட்டைக்குப் போனார்களா? அது ஆண்களின் வேலை அல்லவா? என்று ஆச்சர்யம் எல்லாம் படக்கூடாது. எல்லா விலங்குகளிலும் ஆணைவிடப் பெண்தான் அதிக வேட்டுவத் தன்மைகொண்டு இருக்கும். கொசுவை எடுத்துக்கொள்ளுங்கள், ஆண் அனோஃபிலீஸ் அப்பிராணி, கடிக்காது. ஆனால் பெண், துரத்தித் துரத்திக் கடித்து ரத்தத்தை உறிஞ்சும். காரணம், பெண்ணுக்குத்தான் தன் குட்டிகளைக் கட்டிக் காக்க வேண்டிய கடமை இருக்கிறது. இதனாலேயே இயற்கை, பெண்களுக்கு அதிக மோப்பத் திறன், அதிக பார்வைக் கூர்மை, அதிக சுவை உணர்வு, அதிக கூரான செவித்திறன், அவ்வளவு ஏன்... துரித கதியில் ஸ்பரிசத்தை உணரும் தன்மை ஆகியவற்றைத் தகவமைத்து இருக்கிறது. இந்தப் புலன் நுணுக்கத்தினாலேயே ஆணைவிட, பெண் அதிக திறமையுடன் வேட்டையாட முடிகிறது.

Join / Telegram : @Tamil_Books_Library

மனிதர்களுக்கும் இந்தப் பொது விதி பொருந்தும் என்பதால், ஆதிகால மானுடப் பெண்களும் வேட்டையில் சிறந்து விளங்கினார்கள். மக்கள் எல்லோருமே நாடோடிகளாக இரை தேடி அலைந்தார்கள். இப்படி அலைந்த மானுடக் கூட்டங்களைப் பெண் தலைவிகளே வழிநடத்திச் சென்றார்கள். ஆக, பெண்கள் எதற்குமே ஆண்களை நம்பி வாழாத காலம் அது. அப்படி ஒரு காலம் இருந்ததா? இதற்கு என்ன ஆதாரம்?

ஆதாரம்-1: காங்கோ நதிக்கரை ஓரமாக இன்றும் வாழ்ந்து வருகிறது 'பொனோப்போ' என்ற வானர இனம். இந்த 'பொனோப்போ'க்கள் அச்சு அசல் மனிதர்களைப்போலவே நடந்துகொள்ளும். இவை தமக்குள் பேசிக்கொள்கின்றன. பயிற்றுவித்தால், சைகை மொழியில் மனிதர்களுடனும் உரையாடுகின்றன. இவற்றுக்கு சிரிப்பு, அழுகை, வேடிக்கை, விளையாட்டு எல்லாமே உண்டு. இவற்றைவிட விசேஷம், இவை கலவிகொள்ளும் விதம் அப்படியே மனிதர்களைப் போலவே இருக்கிறது.

மனிதர்களைப்போலவே என்றால் என்ன அர்த்தம்? மிருக கலவிக்கும், மனித கலவிக்கும் பல முக்கியமான வித்தியாசங்கள் உண்டு. எல்லா மிருகங்களும் முகமே பாராமல்தான் கூடிப் புணரும். அதுவும் இனப்பெருக்க காலத்தில் மட்டும். எந்தவித சுகமும் உணராமல், வெறுமனே குட்டி போட மட்டும் நடக்கும் ஒரு உப்புச்சப்பு இல்லாத சம்பிரதாயமாக இருக்கும். ஆனால், முகம் பார்த்து, இன்னாருடன் உறவுகொள்கிறோம் என்று அறிந்து, பருவ காலம் மட்டும் அல்லாமல், தனக்குப் பிடிக்கும்போது எல்லாம் ஆசைக்காக உறவுகொள்ளும் தன்மை, இந்த உலகில் இரண்டே ஜீவராசிகளுக்குத்தான் உண்டு. ஒன்று, மனிதன். இன்னொன்று, பொனோப்போ. நடத்தையிலும் மரபுகளிலும், இத்தனை ஒற்றுமை இருக்கிறது என்றால், மரபு அணுக்களில்? பரிசோதனை செய்துபார்த்தால் ஆச்சர்யம். ஆனால், உண்மை. பொனோப்போக்களின் மரபு அணுப் புரதங்கள் 98 சதவிகிதம் மனிதர்களைப்போலவே இருப்பதைக் கணக்கிட்டார்கள் விஞ்ஞானிகள். ஆக, மரபு அணுரீதியில் பார்த்தால் மனிதர்களும், பொனோப்போக்களும் சகோதர இனங்கள். இவற்றுக்குள் இனக் கலப்பு செய்தால், குழந்தைகள் பிறக்கக்கூட வாய்ப்பு

Join / Telegram : @Tamil_Books_Library

இருக்கிறது.



ஆனால், இதை எல்லாவற்றையும்விட மிகப் பெரிய ஆச்சர்யம் என்ன தெரியுமா? இந்த பொனோப்போக்கள் இன்றும் தாய்வழி சமூக அமைப்பில்தான் வாழ்கின்றன. இவை மட்டும் அல்ல; நமக்கு அடுத்து நெருங்கிய சகோதர இனமான சிம்பன்சிகளும் தாய்வழி சமூக அமைப்பில்தான் வாழ்கின்றன. அப்படியானால், மனிதர்களும் ஆரம்ப காலத்தில் தாய்வழி சமூக முறையைத்தான் கடைபிடித்து இருப்பார்கள் என்றுதானே அர்த்தம்!

ஆதாரம்-2: இன்றும் மனிதர்களுக்கு அம்மா சென்டிமென்ட்தான் பலமாக இருக்கிறது. அப்பா சென்டிமென்ட் அத்தனை ஸ்ட்ராங்க் இல்லை!

ஆதாரம்-3: தொல்காப்பியம் மாதிரியான பண்டைய இலக்கண நூல்களும், மனிதர்கள் ஆரம்ப காலத்தில் தாய்வழி சமூகமாகத்தான் வாழ்ந்தார்கள் என்கிறது!

ஆதாரம்-4: தொன்மையான எல்லா கலாசாரங்களிலும் ஆரம்ப காலத்தில் தாய் தெய்வங்களே இருந்து உள்ளன. இவற்றுக்கு நிகரான தந்தை தெய்வங்கள் இருந்தது இல்லை.

Join / Telegram : @Tamil_Books_Library

உதாரணம்: தமிழர்களின் ஆரம்ப கால தெய்வமான கொற்றவை, வன தெய்வமாகவும் வேட்டுவ தெய்வமாகவும் வணங்கப்பட்டாள். சிலப்பதிகார காலம் வரை இவள்தான் பிரதான கடவுள். அதன் பிறகு, இவள் வனகாளியாக மாறி, வேலனுக்குத் தாய் ஆகி, அப்புறம் சிவனின் மனைவி ஆனது எல்லாம் காலப்போக்கில் ஏற்பட்ட பரிணாமம்!

அது எல்லாம் சரி... நம்ம சங்கதிக்கு வருவோம். கொற்றவை காலத்துப் பெண் ஒருத்தியை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இவள், தானே வேட்டைக்குச் செல்வாள். பெண் வழி சமூகமாக வாழ்ந்ததால் இவள் பாதுகாப்புக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. இவளுக்கு சொத்துகள் எதுவும் கிடையாது. ஆக, எதற்காகவும் ஓர் ஆணை அண்டிப் பிழைக்க வேண்டிய நிர்பந்தத்தில் இவள் இல்லை.

இப்படி வாழும் இந்தப் பெண் எதற்காக ஓர் ஆணை நாடுவாள்?

சிம்பிள்... அந்த ஆணால் அவளுக்கு ஏற்படும் கலவியல் கிளர்ச்சிக்காக மட்டுமே. அந்தக் காலத்தில் தனிச் சொத்து என்கிற சமாசாரமே இல்லை. அதனால் கற்பு என்கிற நம்பிக்கையும் இல்லை. அதனால் பெண்கள் தமக்குப் பிடித்த ஆண்கள் பலரோடு கூடி மகிழ்ந்தார்கள். இப்படி ஒரு பெண் பல புருஷர்களோடு கூடிக்கொள்ளும் இந்த முறையைத்தான் பாலி ஆண்ட்ரி (poly andry) என்போம்.

இப்படி பாலி ஆண்ட்ரி புரியும்போது, பல ஆண்களோடு கூடி தனக்கு அதிக சுகத்தைத் தருகிறவன் யார் என்பதைக் கண்டுகொள்ள பெண்களுக்கு வாய்ப்பு இருந்ததால், அவளை மகிழ்விக்கத் தெரிந்தவனையே அவள் மீண்டும் மீண்டும் கூடினாள்.

இதனால், பெண்களை மகிழ்விக்கத் தெரிந்தவனின் மரபு அணுக்கள் மட்டுமே பரவின. மகிழ்விக்கத் தெரியாதவர்கள் மரபு அணு ஆட்டத்தில் இருந்து நீக்கப்பட்டனர்.

ஆனால், ஒரு கூட்டத்தில் பல ஆண்களுக்குப் பெண்ணை மகிழ்விக்கத் தெரிந்து இருந்தால், இவர்களுக்குள் போட்டி ஏற்படுவது இயல்புதானே. அதனால், ஒருவரை அடுத்தவர் மிஞ்சிவிட ஆண்கள் முயல, காலப்போக்கில் மனித ஆண்களின்

Join / Telegram : @Tamil_Books_Library

உடலில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

Join / Telegram : @Tamil_Books_Library




# எது பேராண்மை?

மனிதப் பெண்கள் தமக்கு அதிக சுகம் தரும் ஆண்களை மட்டும் தேர்ந்தெடுக்க ஆரம்பிக்க, ஆண்களுக்குள் எக்கச்சக்க போட்டி தலை தூக்கியது. 'அதிக சுகத்தைத் தர வல்லவன் நான்' என்பதை விளம்பரப்படுத்த வேண்டிய நிர்பந்தம் ஆண்களுக்கு ஏற்பட, அதற்கு உண்டான கருவியின் வளர்ச்சி விகிதத்தில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது.

நீளமான தந்தத்தைக்கொண்ட ஆண் யானையை மட்டுமே தேர்ந்தெடுத்து பெண் யானைகள் கூடும். இதனாலேயே ஆண் யானைகளுக்குள் தந்தத்தின் அளவை வைத்து ஒரு போட்டி நடைபெறுகிறது. அதேபோலத்தான் மயில். மிக நீளமான தோகைகொண்ட ஆண் மயிலோடுதான் பெண் மயில் சேர விரும்பும். இதனால் ஆண் மயில்களுக்குள் 'யாருக்கு நீண்ட தோகை?' என்பதில் போட்டி. இப்படி உலகின் எல்லா ஜீவராசிகளிலும் பெண்ணைக் கவர ஆண் சில பாகங்களையோ, திறமைகளையோ விளம்பரமாக வெளிப்படுத்துவதைப்போலவே, மனித ஆண்களும் தங்கள் இனப்பெருக்க உறுப்பை ஒரு வீரிய விளம்பரமாக வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள்.

இதனால், மனித ஆண் உறுப்பின் நீளம் அதிகரிக்க ஆரம்பித்தது. இன்றுள்ள வானர இனங்களிலேயே மனித ஆணின் உறுப்புதான் மிகவும் நீளமாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டு உள்ளது. இத்தனைக்கும் மனிதப் பெண்ணின் ஜனனக் குழாய் நீளம் என்னவோ எல்லோருக்கும் 10 செ.மீதான். இதனுள் சென்றடைய அதே 10 செ.மீ நீளம் உள்ள கருவி


Join / Telegram : @Tamil_Books_Library

இருந்தாலே போதும். ஆனால், போட்டி என்று வந்துவிட்டால், வளர்ச்சி விகிதம் மாறித்தானே போகும்.

பெண்கள் இதை எல்லாம் சட்டை செய்கிறார்களோ, இல்லையோ... ஆனால், ஆண்கள் மத்தியில் யாரும் சொல்லித் தராமலேயே இந்த ஒப்பீடு ஆரம்ப காலம் துவங்கி இன்றுவரை நடந்துகொண்டேதான் இருக்கிறது. நீளத்தை நினைத்துக் கவலைப்படும் ஆண்கள் இன்றும் நிறையப் பேர் இருக்கிறார்கள். இதனால் தாழ்வு மனப்பான்மை வாட்டி, போலி வைத்தியர்களின் விளம்பரங்களில் சிக்கி, பணத்தையும் உடம்பையும் சீரழிப்பவர்கள் ஏராளமானோர்.

ஆடை இல்லாத அந்தக் காலத்தில், பெண்களும் அவர்களைவிட அதிக மும்முரமாக ஆண்களும் வெறும் பார்வையை வைத்தே எதிரில் இருக்கும் ஆணை மிகத் துல்லியமாக அளவிட முடிந்தது. அதனால், அதில் போலித்தனங்கள் இருந்திருக்க வாய்ப்பு இல்லை. ஆனால், ஆடை அணியும் கலாசார மாற்றம் ஏற்பட்ட உடனே, 'யாருக்குத் தெரியப்போகுது. பேராண்மை மிக்கவனாகத் தான் காட்டிக்கொள்வோமே!' என்ற போக்கு தலை தூக்க ஆரம்பித்தது. அவரவர் ஊரில் இவ்வடிவில் ஏதாவது வஸ்து தென்பட்டால், உடனே ஆண்கள் எல்லாம் அதைத் தேடிப் பிடித்து, எடுத்து வந்து இடுப்பில் சொருகிக்கொண்டார்கள். ஆரம்பத்தில் குச்சி, காய், கொம்பு, மரவுறி மாதிரியான phallic symbols-ஸை அணிய ஆரம்பித்த ஆண்கள், வேட்டையில் இன்னும் தேர்ச்சி பெற ஆரம்பித்ததும், பிற மிருகங்களின் பல், தந்தம், தோகை, நகம், உலர்ந்த உடல் பாகம் என்று பலவற்றையும் அணிய ஆரம்பித்தனர். உலோகம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு கத்தி, வாள், அரிவாள்... அப்புறம் துப்பாக்கி, ரைஃபில், பிஸ்டல் என்று இந்தச் சின்னங்களின் பட்டியல் மாறிக்கொண்டே இருந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

இந்தச் சின்னங்களை எல்லாம் கண்டு பெண்கள் உண்மையிலேயே மயங்கிப்போனார்களா என்பது கேள்விக்குறி தான். ஆனால், மிக வலிமையான சின்னங்களை அணிந்த ஆண்களைக் கண்டு பிற ஆண்கள் அடங்கிபோனது என்னவோ உண்மை. கலாசாரம் வளர வளர நார்மலான ஆண்கள் இப்படி அப்பட்டமாக வெளிப்படுத்துவது இல்லை. ஆண்கள், மிக நாசூக்காகத் தங்கள் திறமைகளைக் கொண்டு தங்கள் பேராண்மையை வெளிப்படுத்த முயல்வதை மனித வரலாறு முழுக்கக் காணலாம். கற்களைச் செதுக்கும் ஆற்றலைப் பெற்றதுமே ஆண், மிகப் பெரிய ஆணின் உறுப்பு வடிவங்களைச் செதுக்கி வைத்தான். இன்றும் இதுபோன்ற பல புராதன ஒபிலிஸ்க் சிற்பக் கற்களை எகிப்து, ரோமாபுரி, கிரேக்கம் மாதிரியான நாடுகளில் பார்க்கலாம்.

இதன் பிறகு, பெருமதங்கள் தோன்ற ஆரம்பித்தன. சமணத் துறவிகள், நிர்வாண கோலமாக இருப்பதையே ஒரு மகத்தான ஆன்மிக முக்தி நிலை எனக் கருதினார்கள். அதனால், ஆணின் நிர்வாணம் மீண்டும் அவன் பேராற்றலைப் பறைசாற்றுவதாகக் கருதப்படலானது. கிட்டத்தட்ட 700 ஆண்டுகளுக்குப் பிறகு, உலகின் பல்வேறு மூலைகளில் கிறிஸ்துவப் பெருமதம் பரவ ஆரம்பித்தது. சமணம், நிர்வாணத்தை மேம்பட்ட ஒரு சாதனையாகக் கருதிய காலம்போய், ஆடை இல்லாத நிலையை 'மஹாபாவம்' என்று கருதும் மன நிலைக்கு மனிதர்கள் மாறி இருந்தார்கள். அதனால், கிறிஸ்துவ தேவாலயங்கள் நிர்வாணத்தைத் தடை செய்தன. ஆனாலும், மனித ஆணின் ஆரம்ப காலக் குணம் மாறவில்லை.

அதற்குள் இந்தியாவிலும் சமய மாற்றம் ஏற்பட்டு இருந்தது. சமணம் தோற்று, சைவம் ஓங்க ஆரம்பித்தது. சமணத்தில் முழு ஆணின் நிர்வாணம் வணக்கத்துக்கு உரியதாகப் போற்றப்பட்டது. சைவத்திலோ இது இன்னும் நுணுக்கமாகி, ஆண் உடலில் மற்ற பாகங்களை நீக்கிவிட்டு, வெறும் அவனுடைய இனக் குறியை மட்டும் வழிபாட்டுக்கு உரியதாகக் கருதும் மனநிலை உருவானது. லிங்க வழிபாடு பிரபலமாகி அரசர்கள், மிகப் பெரிய அளவு ஆணினச் சின்ன லிங்கத்தை ஸ்தாபித்து, தங்கள் பேராண்மையை வெளிப்படுத்த முயன்றார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

இப்படி எல்லாம் ஆணினச் சின்னங்களை விஸ்தாரமாக விளம்பரப்படுத்தினால், மற்ற ஆண்கள் பயந்து போட்டியில் இருந்து விலகிக்கொள்வார்கள். பெண்கள் சுலபமாக மயங்கி மடியில் விழுவார்கள் என்று ஆண்கள் கணக்கிட... பெண்களோ இதற்கு ஒரு படி மேலே போய் யோசிக்க ஆரம்பித்தார்கள்!

Join / Telegram : @Tamil_Books_Library




# கலவி சுகம் - ஒரு போட்டி!

என்னதான் ஆண்கள் தங்கள் இனப்பெருக்க உறுப்பின் அளவை வைத்து, தமக்குள் நேரடியாகவும் மறைமுகமாகவும் போட்டி போட்டுக்கொண்டாலும், பெண்கள் மிகத் தெளிவாகவே இருந்தார்கள். ஆண்கள் ஒரு பக்கம் நீளம் குறித்த போட்டிகளில் நேரத்தை வீணடித்து, ஏமாற்றுத் தந்திரங்களில் ஈடுபட ஆரம்பிக்க, பெண்கள் சத்தமே இல்லாமல் தங்கள் தேர்வு வரையறையை மாற்றினார்கள். நீளம், அகலம் போன்ற வெளித்தோற்றத்தை விட்டுவிட்டு, செயல்பாட்டுத் திறனுக்கு முக்கியத்துவம் தர ஆரம்பித்தார்கள். அதனால், என்னதான் ஆண் இனச் சின்னங்களை அணிந்து பில்-டப் கொடுத்தாலும் செயல்பாட்டில் சோப்ளாங்கியாக இருந்ததால், அவன் மரபணுச் சங்கிலி ஆட்டத்தில் இருந்து கழட்டிவிடப்பட்டான்.

ஆண்களால் சுயமாகத் தங்கள் மரபணுக்களைப் பரப்பிக் கொள்ள முடியாதே, எப்படியும் பெண்ணுடல் தேவைப்படுமே! ஆக, பெண் விதிக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு, தன்னை மாற்றிக்கொண்டே ஆக வேண்டிய நிர்பந்தம் ஆண்களுக்கு. அல்லது மாற்றிக்கொண்டதாக ஒரு பாவ்லாவாவது செய்தாக வேண்டும். இல்லை என்றால், மரபணுப் போட்டியில் அவன் இல்லை. இதனால் பெண்களின் கறாரான 'நீடித்த சுகம்' என்கிற தேர்வு விதியை அனுசரித்து, ஆணின் மரபணுக்கள் மீண்டும் மாற ஆரம்பித்தன. இதனால், அவன் உடம்பில் ஒரு முக்கியமான மாற்றம் ஏற்பட்டது!

பொதுவாக, ஆண் விலங்குகள் அனைத்துக்கும், இனப்பெருக்க

Join / Telegram : @Tamil_Books_Library


உறுப்புக்குள் பாக்குலம் (baculum) என்கிற ஓர் எலும்பு இருக்கும். இந்த எலும்புதான் விறைப்புத் தன்மையை நீட்டிக்க உதவுகிறது. சிம்பன்சி மாதிரியான நம் நெருங்கிய உறவுக்கார வானரங்களுக்கும் இந்த பாக்குலம் இருக்கிறது.

ஆனால், மனித ஆண்களுக்கு மட்டும் பாக்குலம் இல்லை. ஏன்?

பல நூற்றாண்டுகளாக, பல தலைமுறைகளாக மனிதப் பெண், பாக்குலம் இல்லாத ஆண்களாகப் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்ததில்... கடைசியில் மனித ஆண், பாக்குலம் இல்லாதவனாகவே போய்விட்டான். எலும்பின் உபயத்தால் விறைப்பு ஏற்படுவதைவிட, எலும்பே இல்லாதபோதும் விறைப்புடன் இயங்குவதுதான் நிஜ வீரியத்தின் வெளிப்பாடு. அதனால் மனிதப் பெண்கள் எல்லோரும் எலும்பு இல்லாத ஆண்களுடன் கூடி, அவர்களின் தரத்தை வித்தியாசப்படுத்த ஆரம்பித்தனர். ஆணும் காலப்போக்கில் அது இல்லாமலேயே விறைப்புறும் தன்மையைப் பெற்றான்.

ஆண் விலங்குகளுக்கு பாக்குலம் இருப்பதில் ஒரு மிகப் பெரிய சௌகர்யம் இருந்தது. உதாரணத்துக்கு, நாயை எடுத்துக் கொள்வோம். ஆண் நாய், பெண்ணுடன் கூடிய பிறகும், கிட்டத்தட்ட அரை மணி நேரத்துக்கு அந்தப் பெண்ணை விடாமல் பற்றிக்கொண்டே இருக்கும். காரணம், பெண் நாய்க்கு ஒரே சமயத்தில் ஏழெட்டு கரு முட்டைகள் உற்பத்தி ஆகும். ஒரு ஆணுடன் சேர்ந்த பிறகு, உடனே அது இன்னொரு ஆணுடன் உறவுகொண்டுவிட்டால், அந்த இரண்டாவது ஆணின் விந்தணுக்கள் சில கருமுட்டைகளோடு கலந்துவிட முடியும். இன்னொருத்தனின் மரபணுக்கள் பரவிவிட்டால், தன் சந்ததியினருக்குப் போட்டி ஆகிவிடுமே என்றுதான், கிட்டத்தட்ட அரை மணி நேரம் பெண்ணைப் பிடித்துக்கொண்டே இருக்கிறது ஆண். இந்த அவகாசத்துக்குள் எல்லா கருமுட்டைகளையும் தன் விந்தணுக்களே அபகரித்துவிடும் என்பதுதான் ஆண் நாயின் கணக்கு.

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

மனித ஆண் பாக்குலம் இல்லாதவனாகவே மாறியது, பெண்களுக்குச் சாதகமான ஒன்றாகவே இருந்தது. ஆணின் நிஜ உடல்/உள்ள ஆரோக்கியத்தையும், அவை வெளிப்படுத்தும் மரபணு வீரியத்தையும் தரப் பரிசோதனை செய்ய இதுவே ஒரு சிறந்த வழியாக இருந்ததால், இதில் பெண்களை ஏமாற்றுவது முடியாத காரியமானது.

பெண்கள், இப்படிக் கறாராக மரபணுக்களைத் தேர்ந்தெடுப்பதுதான் ஒட்டுமொத்த சமுதாயத்துக்குமே நல்லது என்பதால்தான், உலகின் எல்லா மதங்களும், பல நாட்டுச் சட்டங்களும் விறைப்புறும் தன்மை இல்லாத ஆண்களை நிஜ ஆண் என்று கருதுவது இல்லை. அதனால், இப்படிப்பட்ட ஆணோடு திருமணம் நடந்தாலும், அந்தத் திருமணத்தை ஒரு நிஜ திருமணமாக இவை அங்கீகரிப்பதும் இல்லை.

இதைவிட, ஆண்களுக்குப் பெரிய சவாலாக அமைந்தது என்ன தெரியுமா?

ஆண், பெண் இருவருக்கும் கலவியல் செயல்பாட்டில் இருக்கும் வேறுபாடுகள். மனித ஆணால், ஒரு கலவி அனுபவத்தில் ஒரே ஒரு தரம்தான் உச்ச சுகத்தை அடைய முடியும். ஆனால், மனிதப் பெண்ணோ, ஒரே கலவி சேர்க்கையின்போது பல முறை உச்ச சுகத்தை உணர வல்லவள். அது மட்டுமல்ல; கலவி கொண்ட பிறகு, ஆண் அயர்ந்துவிடுவதுதான் இயல்பு. ஆனால், பெண் கொட்டக்கொட்ட விழித்துக்கொண்டு இருப்பாள். அவன் தூங்கிவிட்ட பிறகு, இவள் வேறு பக்கம் கவனம் செலுத்திவிட்டால்? மனித ஆணுக்குத்தான் பாக்குலமே இல்லையே. இவன் விந்தணுக்கள் எல்லாம் நீந்தியோடி அவள் கருமுட்டையைச் சென்று கலக்கும் வரை, அவளை அரை மணி நேரத்துக்கு அப்படியே பிடித்துப் பூட்டிவைக்க அவனால் முடியாதே!

ஆனால், ஆணின் மரபணுக்கள் அதையும் சமாளிக்காமல் இருக்குமா என்ன?

பாக்குலம் இல்லாமலேயே பெண்ணைத் தன் வசப்படுத்தி வைத்திருக்க புதுப் புது யுத்திகளை உருவாக்கின ஆணின மரபணுக்கள். அதனால், மூன்றாவது முறையாக மீண்டும் ஒரு முறை ஆணின் உடல் அமைப்பு மாற ஆரம்பித்தது.

Join / Telegram : @Tamil_Books_Library




# முகத்தோடு முகம் பார்த்து...

`ஆ ண் மரபணுக்கள் பல தடவை தம்மை மாற்றி, தம்மைச் சுமந்த உடம்பை மாற்றி, அதன் செயல்பாட்டையும் மாற்றி, அப்போதும் பெண் திருப்தி அடையவில்லையா?' என்று உங்களுக்கு ஆச்சர்யமாகக்கூட இருக்கலாம். ஆனால், இயற்கையின் லாஜிக் வேறு கணக்குகளைப் போட்டு வைத்திருந்தது!

தன் இணையை செக்ஸில் திருப்திப்படுத்தத் தெரிந்த ஒருவன், மனதளவில் நார்மல் மனிதனாக இல்லாவிட்டால்? அதாவது, மனிதநேய குணங்கள் இல்லாத, இயல்பான மனித உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத ஒருவனின் வாரிசினை சுமக்க நேர்ந்தால் என்ன ஆகும்? அப்படிப்பட்ட அசம்பாவிதம் ஏற்பட்டுவிடக் கூடாதென்றால், பெண்கள் உஷாராக ஆண்களைப் பதம் பார்த்துத் தரம் பிரிக்க வேண்டும் அல்லவா? வெறும் நீளம், நிமிர்வு, விந்தணு எண்ணிக்கையை வைத்து ஏதோ ஒரு வக்கிரக்காரனுக்கு பிள்ளைகளைப் பெற்றுக்கொடுத்து, சமூக அமைதிக்கு ஏன் கேடு விளைவிக்க வேண்டும்? `மோசமான ஆண் என்று தெரிந்த பிறகும், அவனுக்குப் பிள்ளைகள் பெற்றுத்தருவதுதான் ஒரு பெண் செய்யக்கூடியதிலேயே மிகவும் பாவச் செயல்' என்று, மனுஸ்மிருதியே சொல்கிறது. அதுசரி, இணைவதற்கு முன் அவன் மனிதனா, மிருகமா அல்லது ராட்சசனா என்பதை ஒரு பெண் எப்படித்தான் கண்டுபிடிப்பாளாம்?

வெரி சிம்பிள்... கலவியின்போது, மனிதப் பெண் பெரும்பாலும்

Join / Telegram : @Tamil_Books_Library

மதி மயங்கி, கண்களை மூடிக்கொண்டேதான் இருப்பாள். எத்தனை சினிமாவில் பார்த்திருப்போம்! ஏன், நிஜ வாழ்விலும் நீங்கள் உங்கள் இணையோடு இருக்கும் தருணங்களை நினைத்துப் பாருங்கள். முத்தமிடும்போதுகூட பெண்கள் கண்களை மூடிக்கொண்டுவிடுவார்கள். ஆனால், ஆண்? இரண்டு கண்களையும் அகல விரித்து வைத்து, அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்துக்கொண்டேதான் இருப்பான்.

பெண் ஏன் கண்களை மூடுகிறாள்? அப்போதுதான் அவளால் ஸ்பரிசத்தை இன்னும் துல்லியமாக உணர்ந்து மகிழ முடியும். இந்த ஆண் ஏன் இப்படி கொட்டக் கொட்ட கண்களைத் திறந்து வைத்திருக்கிறான்? ஆண்கள் அதிகம் பார்க்கும் பல போர்னோகிராஃபிக் (நீல) படங்களை அலசி, ஓர் ஆராய்ச்சி நடைபெற்றது. இதுமாதிரி படங்களில் பெண் உடலின் எந்தப் பாகம் மிக அதிக நேரத்துக்கு சித்திரிக்கப்படுகிறது என்று ஆராய்ந்ததில், மற்ற எல்லாக் கிளர்ச்சி பாகங்களையும்விட, பெண்ணின் முகமே மிக அதிகமாகத் திரையில் காட்டப்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது! போயும் போயும் பெண்ணின் முகத்தை இவ்வளவு உன்னிப்பாகப் பார்க்கிறானே இந்த மனித ஆண்! அதுவும் கலவியின்போது துணைவி முகபாவத்தில் சந்தோஷத்தைத் தெரிவிக்கவில்லை என்றால், ஆண்களுக்குக் கண்மண் தெரியாத கோபமும் ஏமாற்றமும் வருவது உண்டு, 'இப்படி ஜடமாட்டம் இருக்கியே!' என்று அலுத்துக்கொள்கிறார்கள்.

ஏன் தெரியுமா? மனித ஆணின் மூளை மற்ற மிருகங்களின் மூளையைப் போலச் செயல்படுவது இல்லை. பிற மிருகங்கள் பெண்ணின் முகத்தைப் பாராமல் அவள் சுகிக்கிறாளா இல்லையா என்பதை எல்லாம் கண்டுகொள்ளாமல், எந்திரகதியில் புணரும். ஆனால், மனித ஆணின் மூளையில் ஒரு முக்கியமான மாற்றம் ஏற்பட்டு இருந்தது. கலவியின்போது பெண் சுகப்படும் காட்சியைத் தன் கண்களால் கண்டால் ஒழிய, அவனால் தன்னிறைவு பெற முடியாது. இப்படி பெண் கிளர்ச்சி அடையும் காட்சியை உற்றுப் பார்ப்பதே ஆணுக்குப் பெரிய சந்தோஷத்தைத் தருகிறது. காரணம், பெண்ணின் கலவியல் தேர்வு விதி: 'நீ எவ்வளவு பெரிய கொம்பனா வேண்ணா இருந்துக்க. ஆனா, எனக்கு சுகம் தரத் தெரியலேன்னா, நீ சுத்த

Join / Telegram : @Tamil_Books_Library

வேஸ்ட்டுடா' என்பதாகவே இருந்தது. இப்படி, அவள் ரசனைகளை மதித்து, அவளை மகிழ்விக்கத் தெரிந்தவனையே அவள் மீண்டும் மீண்டும் நாடி கூடுவதால், அவளை நாசூக்காகக் கையாளத் தெரிந்த ஆணின் மரபணுக்கள் மட்டுமே பரவுகின்றன. இதுதான் சூட்சுமம் என்று ஆனபின், ஆணின் மரபணுக்கள் சும்மா இருக்குமா?



பெண்ணை லாகவமாகக் கையாளும் விசையை ஆணின் மூளையில் புதிதாக உருவாக்கின. பெண்ணை மகிழ்வித்தால், இந்த மூளை மையம் இன்ப ரசாயனங்களைச் சுரக்க ஆரம்பித்துவிடும். இதனால், ஆணுக்கு ஊக்கமும் கிளர்ச்சியும்,

Join / Telegram : @Tamil_Books_Library

தன் ஆண்மையின் மேல் கர்வமும் ஏற்படுகிறது. இவை அவனுக்குப் பெரும் நிறைவைத் தர, ஒலிம்பிக்ஸில் முதலிடம் பிடித்தவனுக்கு ஏற்படும் வெற்றிக்களிப்பை ஒவ்வொரு முறை புணரும்போதும் அவன் பெறுகிறான், பெண் முகத்தில் சுகத்தின் சுவடு தெரிந்தால் மட்டும்!

அதனால்தான் பெரும்பாலான ஆண்கள் கலவிகொண்ட உடனே, பெண்ணிடம், 'உனக்குப் பிடிச்சுதா? டிட் யூ என்ஜாய்ட் இட்?' என்று கேட்கிறார்கள். அவள் என்ஜாய் செய்தால் இவனுக்கு என்ன, செய்யாவிட்டால் இவனுக்கு என்ன? சிம்பிள், அவள் என்ஜாய் செய்யாவிட்டால், இவன் மூளைக்குப் போதை கிடைப்பது இல்லை. மாறாக, 'எவ்வளவு மெனக்கெட்டும் மரக்கட்டை மாதிரி கிடக்கிறாளே!' என்கிற இயலாமை, ஆத்திரத்தைத்தான் தூண்டும்.

ஆனால், எல்லா ஆண்களும் இப்படி இருப்பது இல்லையே! சமூகத்தில் பாலியல் குணக்கோளாறு (perversion) கொண்ட ஆண்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். பெண்ணைப் பலவந்தமாகக் கற்பழிக்கும் ஆண்களும் இருக்கிறார்களே! ஏன், அவர்கள் அப்படி இருக்கிறார்கள்?

அவர்கள் எல்லாம் பரிணாம வளர்ச்சியில் பின்தங்கிப் போனவர்கள். எந்தப் பெண்ணும் இப்படிப்பட்ட ஆண்களோடு கூட விரும்புவதே இல்லை. பலவந்தமாகப் புணரப்பட்டாலும், மருத்துவ வசதிகள் அதிகம் இல்லாத அந்தக் காலத்திலேயே பெரும்பாலான பெண்கள், இப்படி உருவாகும் கருக்களைக் கலைத்துவிடவே முயன்று இருக்கிறார்கள். காரணம், இப்படிப் பட்ட ஆண்களின் மரபணுக்கள் பரவுவதை இயற்கை அனுமதிப்பது இல்லை!

Join / Telegram : @Tamil_Books_Library




## கைகள் இரண்டால்... என் கைகள் இரண்டால்...

எ ங்கள் பேராசிரியர் ஒருமுறை கலவியல் பாடம் நடத்தும்போது எங்களைக் கேட்டார்: `மனித உடலில் செக்ஸுக்கு மிக அத்தியா

வசியமான பாகம் எது?' நாங்கள் `இதுவா, அதுவா?' என்று ஏதேதோ பதில் சொல்லிப் பார்த்தோம். எதுவுமே இல்லை. கடைசியில் பேராசிரியர், `மனிதக் கலவிக்கு மிகவும் அத்தியாவசிய பாகம், கை' என்றார்!

`கை'யா?! ஆச்சர்யமாக இருந்தாலும், உடனே எங்கள் மர மண்டைக்குள் பல்ப் எரிந்த எஃபெக்ட். `அட! ஆமாம். `தொட்டால் பூ மலரும்' என்று நம் ஊரில்தான் பாட்டே இருக்கிறதே!

தொடுகை உணர்வு மட்டும் இல்லை என்றால், காமம் அதன் சுவாரஸ்யத்தை இழந்துவிடுமே. தொட்டு, தடவி, வருடி, கிள்ளி என்று நிறைய கைவேலைப்பாடுகள் இருப்பதால்தானே மனிதக் கலவி இவ்வளவு கிளுகிளுப்பாக இருக்கிறது?!

மற்ற மிருகங்களுக்கு இந்தப் பிரச்னையே இல்லை. `பெண்ணைப் பார்த்தோமா? போட்டியிட்டு, மற்ற ஆண்களை விரட்டிவிட்டு அவளை ஓரம் கட்டினோமா? பின்னால் சென்று மடக்கிப் பிடித்து, மரபணுக்களை முதலீடு செய்தோமா!' மேட்டர் ஓவர்! ஆனால், மனிதர்களுக்கு இந்த முறை சரிவரவில்லை.

முதலில் மனிதப் பெண்ணைப் பின்னால் இருந்து


Join / Telegram : @Tamil_Books_Library

பிடித்தெல்லாம் உறவுகொள்ளவே முடியாத நிலை. காரணம், இவள் மற்ற ஜீவ ராசிகளைப்போல நான்கு காலில் நடப்பது இல்லையே. இவள்தான் மிகப் புதுமையாக இரண்டு காலில் நிமிர்ந்து நடக்கிறாளே. 'நடந்தால் நடந்துவிட்டுப் போகட்டும், அதற்கும் செக்ஸுக்கும் என்ன சம்பந்தம்?' என்றால், பிரச்னையே அதில்தான்!

நான்கு கால்களில் நடக்கும் விலங்குகளுக்கு கர்ப்பப் பை மல்லாந்த நிலையில் இருக்கும். அதனால், புவி ஈர்ப்பு சக்தியின் பாதிப்பு இருக்காது. இப்படிப் படிந்துகிடக்கும் கர்ப்பப் பையினுள் மரபணுக்களைச் செலுத்தினால், அப்படியே பத்திரமாக இருக்கும், வெளியேறாது. ஆனால், மனிதப் பெண்ணோ இரண்டு கால்களில் செங்குத்தாக நிற்கிறாள். இதனால் அவள் கர்ப்பப் பையும் புவி ஈர்ப்பு சக்திக்கு உட்பட்டு செங்குத்தாகவே இருக்கிறது. இந்த நிலையில், பெண் உடலில் மரபணுக்களை முதலீடு செய்தால், அவை தங்காமல் வெளியேறிவிடும். அப்புறம் எப்படி இனம் விருத்தியாவது?

ஆனால், இரண்டு கால்களில் செங்குத்தாக நிற்பதால் மனித குலத்துக்கு ஏகப்பட்ட ஆதாயங்கள் இருந்தன. கைகளை வேறு வேலைகளுக்குப் பயன்படுத்த முடிந்தது. இதனால் மற்ற மிருகங்களைவிட மிக வேகமாக முன்னேற முடிந்தது. ஆனால், கலவியின்போது இப்படி இரண்டு காலில் நிற்பது அனுகூலமாக இல்லை. அந்தச் சமயத்துக்கு மட்டுமாவது பெண் தன் செங்குத்தான நிலையை விட்டுக்கொடுக்க வேண்டி இருந்தது. அதுவும் விந்தணுக்கள் போய் கருமுட்டையோடு கூடும் அந்தப் பல நிமிடங்களுக்கு அவள் அப்படியே கிடந்தாக வேண்டும். 'அவ்வளவு நேரத்துக்கு எல்லாம் சும்மா படுத்துக்கிடக்க முடியாது... சுத்த போர்!' என்று பெண் முரண்டு பண்ணினால், மொத்த மரபணு ஆட்டமும் குளோஸ்! ஆக, பெண்ணை எப்படியாவது மதி மயக்கி சும்மாகிடக்கும் நேரத்தை சுவாரஸ்யமாக்கினால் ஒழிய, மனித மரபணுக்கள் பரவ வாய்ப்பு இல்லை.

Join / Telegram : @Tamil_Books_Library



மனித இனத்துக்கு மட்டும் இப்படி ஒரு விநோதத் தேவை இருந்ததால்தான், இயற்கை மனிதர்களுக்கு மட்டும் சில பிரத்தியேக மாற்றங்களைச் செய்துள்ளது.

உதாரணத்துக்கு, உங்களுக்குத் தெரிந்த ஏதாவது ஒரு மிருகத்தை எடுத்துக் கொள்ளுங்களேன். எலி, பூனை, நாய், சிங்கம், புலி என்று எந்த மிருகமாக இருந்தாலும், அவற்றின் தோலில் இருக்கும் ரோமம் இரண்டு பாலினத்துக்குமே ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஆண் எலிக்கு எவ்வளவு தோல் ரோமமோ, அதே அளவுதான் பெண் எலிக்கும். ஆனால், மனிதர்களில் மட்டும் அப்படி இருப்பது இல்லை. பருவம் அடைந்த பிறகு, மனித ஆணுக்கு பெண்ணைக் காட்டிலும்

Join / Telegram : @Tamil_Books_Library

அதிக மான உடல் ரோமம் முளைத்துவிடுகிறது. ஆக, மனிதர்களைப் பொறுத்தவரையில், பெண்ணுக்கு உடம்பில் முடி மிகக் குறைவு. ஏன் இந்த வித்தியாசம்? நம் நெருங்கிய உறவுக்கார இனமான சிம்பன்சியில்கூட இந்த ரோம வித்தியாசம் கிடையாது. பெண், ஆண் இருவருக்குமே ஒரே மாதிரியான தோல்முடிதான். மனிதர்களில் மட்டும், அதிலும் பெண்களுக்கு மட்டும் ஏன் இந்த வித்தியாசம்?

ரோமம் அடர்த்தியாக இருந்தால், தொடுதல் உணர்வைத் துல்லியமாகக் கிரகிக்க முடியாது. இதுவே ரோமம் குறைவாக இருந்தால், தொடுகை உணர்வு சுகமாகத் தோன்ற ஆரம்பிக்கும். ரோமம் குறைவான மனிதப் பெண்ணின் தோலைத் தொட்டுத் தடவி, வருடி, மென்மையாக உரசினால் போதும். அவளது நரம்புகளில் மின்சாரம் அதிகமாகப் பாய்ந்து, மூளை கிளர்ச்சிக்கு உள்ளாகும். அவள் மதி மயங்கி நீண்ட நேரத்துக்கு அரைத் தூக்கத்தில் படுத்தேகிடப்பாள். இந்த அவகாசத்துக்குள் அவளுக்குள் மரபணுக்களை முதலீடு செய்துவிட்டால், நிச்சயம் வம்சம் விருத்தியாகுமே!

ஆனால், இதிலும் ஒரு பிரச்னை. வெறுமனே பெண்ணின் உடல் ரோமங்களை நீக்கினால் மட்டும் போதாதே. அவள் தோலைப் பதமாகக் கையாளும் பக்குவம் ஆணுக்கும் இருந்தாக வேண்டும். இது ஒரு புதிய தேவையாக உருவாகிவிட, இதுவே கலவியல் தேர்வுக்கான ஒரு கோட்பாடாகவும் மாறியது.

தன்னை மென்மையாகத் தொட்டு, வருடி, களிப்புறச் செய்த ஆண்களையே பெண்கள் தேர்வு செய்ய ஆரம்பித்தார்கள். காட்டுமிராண்டி மாதிரி தன்னைக் கையாண்ட ஆண்களைப் பெண்கள் கழற்றிவிட ஆரம்பிக்க, கேட்க வேண்டுமா? கைப்பதம் இருந்த ஆண்களின் மரபணுக்கள் மட்டுமே பெரு வாரியாகப் பரவின!

இதனால், போகப்போக ஆண்களுக்கு கைகளின் லாகவம் அதிகரித்துக்கொண்டே போனது. இந்த லாகவம் எல்லாம் வெறுமனே பெண்களைத் தொட்டு ஸ்பரிசிப்பதற்காக மட்டும் இன்றி, மற்ற விஷயங்களுக்கும் பிரயோஜனப்பட்டது.

கைகளால் கல்லைத் தேய்த்துக் கருவிகளை உருவாக்க ஆரம்பித்தார்கள் மனிதர்கள். இந்த ஒரு சின்ன மாற்றம் மட்டுமே

Join / Telegram : @Tamil_Books_Library

பெரிய பரிணாம வளர்ச்சியைத் தூண்டிவிட, அதுவரை, குரங்காக இருந்தவர்கள் மனிதர்களாக மாற ஆரம்பித்தார்கள்.

இந்த நிலை மனிதர்களை நாம் இன்றும், ஹோமோ ஹேபிலிஸ் Homo habilis (கைக்கார மனிதன்) என்றே அழைக்கிறோம். இந்தப் பரிணாம வளர்ச்சிக்குக் காரணமே மனிதப் பெண்ணின் கலவியல் தேர்வுதான்!

Join / Telegram : @Tamil_Books_Library




# வேட்டையாடு... விளையாடு!

மனிதப் பெண் உடல் ரோமங்களை இழந்ததில் அதிக சுகத்தை உணர ஆரம்பித்தாலும், அதிலும் ஓர் அசௌகர்யம் இருந்தது. குரங்கு பாணியில் உடல் முழுக்க ரோமம் இருந்தபோது, அம்மாவைப் பற்றிக்கொள்ள குட்டிக்கு ரொம்பவே வசதியாக இருந்தது. இன்றும் குரங்குக் குட்டிகள் அம்மாவின் வயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இருக்கும். அம்மா மரத்துக்கு மரம் தாவினாலும் குட்டி விழுந்துவிடாமல் பத்திரமாகவே இருக்கும். ஆனால், மனிதப் பெண்ணுக்கு உடல் ரோமம் நீங்கியதால், அவள் குட்டியின் பாடு திண்டாட்டமாகிப்போனது. இதனால், அங்கே இங்கே தாவும் வேலையை எல்லாம் நிறுத்திக்கொண்டு, குழந்தை சுயமாக நடக்கும் வரை அம்மா அதன் பக்கத்திலேயே இருந்து பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இப்படி, பெண்கள் எல்லாம் பிள்ளைப் பராமரிப்புக்கு முதலிடம் கொடுத்து, ஒரே இடமாக இருக்க ஆரம்பிக்க... ஆண்களின் நிலை இதற்கு நேர்மாறாக இருந்தது. அவனுடைய கைகளுக்குப் புதிய நுணுக்கங்கள் சாத்தியமாகிவிட, அதை வைத்துக்கொண்டு அவனால் சும்மாவே இருக்க முடியவில்லை. அதனால் கை வேலைப்பாடுகள் பலவற்றைச் செய்ய ஆரம்பித்தான். சிப்பிகளையும் கற்களையும் தேய்த்து ஆயுதங்களை உருவாக்கினான். அவை, சிறு சிறு வேட்டைகளுக்கு உகந்ததாக அமைந்துவிட, வேட்டை என்பது மனித ஆணின் இஷ்டப் பொழுதுபோக்காக மாற ஆரம்பித்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

குரங்காக இருந்த வரை மனிதர்கள் அவ்வளவாக வேட்டையாடி இருக்கவில்லை. ஆனால், மனிதர்களாக மாற ஆரம்பித்தபோதோ, பெரிதாகிக்கொண்டே இருந்த அவர்களது மூளைக்குக் கூடுதல் போஷாக்கு தேவைப்பட்டது. அந்தச் சமயத்தில் உலகெங்கும் The Great Ice Age என்று சொல்லப்படும் கொடும் பனிக்காலம் பரவிவிட, தாவரங்கள் எல்லாம் பனியில் பட்டுப்போயின. தாவரப் பட்சிணியாக வாழ்வது சிரமமான காரியம் ஆனது. அதனால், மனிதர்களில் ஒரு பிரிவினர் மட்டும், மாமிசப் பட்சிணிகளாக மாறினார்கள்.

காய் கனிகளைப்போல, மாமிசம் மரத்தில் காய்த்துக்கொண்டு இருக்காதே, அவற்றை வேட்டையாடித்தானே கொண்டு வர வேண்டும்? கொடும் பனிக் காலத்தின் குளிர், பெரிதாகிக்கொண்டு இருந்த மனித மூளையின் எரிபொருள் தேவை, கொஞ்சமாகச் சாப்பிட்டாலும் நெடு நேரத்துக்கு சக்தி கொடுக்கும் மாமிசப் புரதத்தின் fuel economics இவை எல்லாமுமாகச் சேர்ந்து மாமிசத்தின் மவுசை அதிகரித்தன.

இந்தக் காலத்தின் கட்டாயத்துக்கு ஏற்ப, மனிதப் பெண்களும் தங்கள் துணைத் தேர்வு விதிகளை உருமாற்றினார்கள். அதுவரைஆணின் துணையை வெறும் சுகத்துக்காக மட்டுமே நாடிய பெண்களின் வரலாற்றில், முதல்முறையாக உணவுக்காக ஆண்களை அண்டிப் பிழைக்க ஆரம்பிக்க வேண்டிய அவசியம். இதனால், அதிக உணவை (மாமிசத்தை) வேட்டையாடத் தெரிந்த வனையே பெண்கள் விரும்பி உறவாட முயல, 'வேட்டுவ வீரியம்' ஆணின் கலவியல் வெற்றியை நிர்ணயிக்க ஆரம்பித்தது.

இன்றும் அந்தமானில் வாழும் ஜாரவா பழங்குடியினரிடையே இந்த மரபு நடைமுறையில் இருக்கிறது. ஜாரவா பெண்களை மணக்க விரும்பும் ஆண், தானே போய் வேட்டையாடிய கறியைத் தன் கையாலேயே பக்குவமாகச் சமைத்து, பெண்ணுக்குக் கொடுப்பானாம். அவன் கொண்டுவந்த கறி பிடித்து இருந்தால்தான் பெண் அவனைத் தேர்ந்தெடுத்து, கூடி வாழ்வாளாம். ஆனால், வேட்டை என்பது சாதாரணக் காரியம் இல்லையே... வெகு தூரம் நடந்து, தன்னைவிடப் பெரிய, வலிய மிருகங்களைக் கொன்று, அதன் கறியைச் சுமந்து, காடு, மேடு, மலைகளைக் கடந்து குகைக்குத் திரும்ப வேண்டும். இவ்வளவு

Join / Telegram : @Tamil_Books_Library

கடுமையான உழைப்பைச் செய்ய வேண்டுமானால், அவனுக்கு விளையாட்டு வீரர்கள் மாதிரி கட்டுமஸ்தான உடல் தேவை. இந்தத் தேவைக்கு ஈடு கொடுத்து, மனித ஆணின் மரபணுக்கள் மாறிக்கொண்டே இருக்க, அவன் உடல் டெஸ்டோஸ்டீரான் என்கிற ஆண் இன ஹார்மோனை அதிகமாக உற்பத்தி செய்ய ஆரம்பித்தது.



இந்த டெஸ்டோஸ்டீரான் இருக்கிறதே, அது ரொம்பவே சுவாரஸ்யமான ஒரு ஹார்மோன். இந்த ஹார்மோன்தான் ஆண்மைக்கே காரணம். சொன்னால் ஆச்சர்யப்படுவீர்கள்... ஜனிக்கும்போது, எல்லாக் கருக்களுமே பெண்ணாகத்தான் உருவாகின்றன. இன்றும் மனிதக் கருக்கள் அனைத்துமே ஆரம்ப காலத்தில் பெண் வடிவாகத்தான் இருக்கின்றன. ஆறு வாரங்கள் இப்படிப் பெண்ணாகக் கருவறை வாசம் செய்த பிறகுதான், Y குரோமோசோம் இருக்கும் கருக்கள், டெஸ்டோஸ்டீரானை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கின்றன. இந்த டெஸ்டோஸ்டீரான் அந்தக் கருவின் உடல் முழுக்கப் பரவி, ஏற்கெனவே பெண்ணாக

Join / Telegram : @Tamil_Books_Library

இருக்கும் இந்தக் கருவை, வேரில் இருந்து நுனி வரை rewiring செய்து ஆண்மைப்படுத்திவிடுகிறது. இப்படி masculinize செய்யப்படுவதால்தான் ஆண் உறுப்புக்கள், ஆண்மைத்தனமான உடல் அமைப்பு, ஆண் என்கிற பாலியல் அடையாளம் எல்லாம் ஏற்படுகின்றன.

இப்பேர்ப்பட்ட மகிமைகள் வாய்ந்த டெஸ்டோஸ்டீரானைத் தான் ஆதிகால ஆண்களின் உடல்கள் மிகவும் அதிகமாகச் சுரக்க ஆரம்பித்தன. இதனால் மனித ஆண், மனிதப் பெண்ணைவிட மிக உயரமாக, வலிமையாக, தேக உறுதிகொண்டவனாக மாற ஆரம்பித்தான். அதிக டெஸ்டோஸ்டீரான் ததும்பும் ஆணைத் தேர்ந்தெடுத்தால்தான் தனக்கும் தன் குட்டிகளுக்கும் உணவு, பாதுகாப்பு, எல்லாம் கிடைக்கும். அது மட்டும் இல்லாமல்,அதிக டெஸ்டோஸ்டீரான் இருக்கும் ஆணோடு கூடினால்தானே அதற்கு உண்டான மரபணுக்களை இவள் குழந்தைகள் பெற முடியும்? அப்போதுதானே அடுத்த தலைமுறையும் சுபிட்சமாக வாழ முடியும்?

ஆக, உணவு என்கிற அண்மைக் கால அனுகூலத்தைவிட, அடுத்த தலைமுறைக்கான மரபணுத் தேர்வு என்ற தொலைநோக்கு அனுகூலமும் இதில் ஒளிந்து இருந்ததால், பெண்கள் அதிகபட்ச டெஸ்டோஸ்டீரான் சுரக்கும் ஆண்களை தங்கள் வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

இதனால், ஆண்களுக்குள் ஒரு டெஸ்டோஸ்டீரான் போட்டி தலையெடுக்க ஆரம்பித்தது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இதற்குச் சில பக்க விளைவுகள் ஏற்பட, அதனால் மனித வரலாற்றில் பல புதுத் திருப்பங்கள் உருவாகின!

Join / Telegram : @Tamil_Books_Library




# பெண்ணைத் தாண்டி வருவாயா..?

இவன் வேட்டைக்கு உகந்தவனா? இவன் மரபணுக்கள் வேட்டுவ வீரியம்கொண்டவையா?’ என்று தரம் பிரித்து, பெண்கள் ஆண்களைத் தேர்ந்தெடுத்ததால், ஆண்களுக்கு வேட்டையில் தங்கள் திறமையை நிரூபித்துக்காட்ட வேண்டிய நிர்பந்தம் எழுந்தது.

ஆனால், அதிலும் ஒரு பெரிய பிரச்னை. புலி, சிங்கம், ஓநாய் போல மனிதன் பரம்பரை வேட்டுவன் இல்லையே! இவன் குரங்கு வம்சத்தில் இருந்து வந்தவன். குரங்குகள் பெரிதாக எதையும் வேட்டையாடுவது இல்லை. தவிர, எல்லா ஜீவராசிகளிலுமே ஆணைவிடப் பெண்தான் அதீதத் திறமையுடன் வேட்டையாடும். இவனோ ஆண்! ஆனால், வேட்டையில் சிறந்து விளங்கியாக வேண்டும். இப்படியான இக்கட்டான சூழ்நிலைகள் வரும்போது, அதற்கு ஏற்ப தன்னை மீட்டுருவாக்கம் செய்து ஜெயித்துக்கொண்டே இருக்க முயல்வது தான் ஆண் மரபணுவின் ஸ்பெஷாலிட்டி. அதனால், மீண்டும் தம்மைப் புதுப்பித்துக்கொண்டன ஆணின் மரபணுக்கள். எப்படி?

இயற்கையின் பொது விதி... ஆண்தான் பெண்ணைத் தேடிக் கண்டுபிடித்துக் கூட வேண்டும். அதனால், இயல்பிலேயே ஆண்களுக்குத் தொலை தூரம் துணை தேடிப் போகும் தன்மை உண்டு. இன்றும்கூட இளவட்ட ஆண்கள் வயசுக்கு வந்துவிட்டால், ஏதாவது வண்டி பிடித்து, அக்கம்பக்கத்து ஊர்களுக்குப் போய், அங்கு இருக்கும் பெண்களை எல்லாம்

Join / Telegram : @Tamil_Books_Library

தரிசித்துவிட்டு வருவதை ஒரு சுவாரஸ்யமான பொழுதுபோக்காக வைத்திருக்கிறார்கள். இதற்காகவே ஆணின் மூளையில் தூரம், திசை ஆகியவற்றை எடைபோட வல்ல பிரத்யேக மையங்கள் உள்ளன. இந்த மையங்கள் பெண் மூளையில் அவ்வளவு வலிமையாக இருப்பது இல்லை. அதனால்தான், இன்றும்கூடப் பெண்களால் திறந்த வெளிகளில் திக்குதிசை அனுமானிக்க முடிவது இல்லை. ஏதாவது நிலக் குறிகள் (land-marks) இருந்தால் அவற்றைவைத்து இடங்களை அடையாளம் கண்டுகொள்ள முயல்கிறார்கள் பெண்கள்.

இப்படி இயற்கை, துணை தேடலுக்காக ஆண்களுக்கு இயல்பாக அருளிய இந்த மூளை மையத்தைத்தான், ஆண்கள் மிக சாமர்த்தியமாக இரை தேடவும் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தனர். போகப் போக, இதில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் மாறினார்கள்.

இயற்கையின் அமைப்பில் ஆண்களின் மூளைக்கு 'உருவம் அறிந்து பொருத்தும் தன்மை' stereognosis உண்டு. கலவியின்போது பெண் பெரிதாக மூளையைப் பயன்படுத்த வேண்டி இருப்பது இல்லை. சும்மா வெறுமனே அசையாமல் இருந்தாலே போதும். ஆனால், ஆணின் பணியோ ரொம்பவே நுணுக்கமானது. உடல் பாகங்களை மிகச் சரியாக ஒருங்கிணைத்துப் பொருத்தினால் ஒழிய, இனவிருத்தி ஏற்படாது. ஆக, ஒரு ஜீவராசி தழைப்பதும், சுவடே இல்லாமல் மரிப்பதும் ஆணின் ஸ்டீரியோகுனோஸிஸ் என்கிற இந்தத் திறமையைப் பொருத்ததே. அதனால், ஆணின் மூளைக்கு மட்டும் இப்படி உருவங்களை உணரும் பிரத்யேக மையத்தை இயற்கை அமைத்து இருக்கிறது. குரங்காக இருந்தபோது, இந்த மையத்தை வெறுமனே துணை சேர்க்கைக்காகப் பயன்படுத்தியவன், மனிதனாக மாறி மாமிச வேட்டைக்குப் போகும்போது, இதே மையத்தை ஆயுதம் தயாரிக்கப் பயன்படுத்த ஆரம்பித்தான். இதனால், மனித குலமே கூடுதல் பிழைக்கும் திறனைப் பெற்றது.

Join / Telegram : @Tamil_Books_Library



ஆனாலும், வேட்டைக்கு உண்டான குறி பார்த்தல், வேகம் உணர்தல், திட்டமிட்டு கூடி வேட்டையாடுதல், சமிக்ஞையின் மூலமாக இரைக்குத் தெரியாமல் உரையாடிக்கொள்ளுதல் என்பது மாதிரியான மற்ற மையங்கள், ஆணின் மூளையில் இருந்திருக்கவில்லை. இந்த மையங்கள் இல்லாமல், வேட்டையாடவும் முடியாது. இதற்காகப் புதுப் புது மையங்களை மூளையில் உருவாக்கினாலோ, மூளையின் சுற்றளவு பெரிதாகி விடும். மூளையின் சுற்றளவு பெரிதாகிவிட்டால், மனிதப் பெண்ணின் இடுப்பு வழியாக இந்தப் பெரிய தலையைப் பிரசவிப்பது பெரும்பாடாகிவிடும். இதுவே பெரிய இக்கட்டானது. மூளையில் புது மையங்களும் வேண்டும். அதே நேரம், மூளையின் மொத்த சுற்றளவும் பெரிதாகாமல் பிரசவத்துக்குத்

Join / Telegram : @Tamil_Books_Library

தோதான அளவிலேயே இருக்க வேண்டும். அதற்கும் ஒரு வழியைக் கண்டு பிடித்தன ஆணின் மரபணுக்கள்.

பேச்சுக்கு உண்டான மையத்தை ஒரு வேட்டுவன் ரொம்பவும் பயன்படுத்த முடியாது. அவன் பல நாட்கள் அமைதியாகப் பதுங்கி இருந்துதான் வேட்டையாடவே செய்வான். ஆக, எப்படியும் பேச்சு அவனுக்கு உதவப்போவது இல்லை. அடுத்து, முகத்தைப் பார்த்து உணர்வைப் புரிந்துகொள்ளும் மையமும் வேட்டையின்போது ரொம்பவும் தேவைப்படாது. அப்புறம், இவன் பாட்டுக்கு 'ஐயோ பாவம், அந்தக் குட்டி மான்' என்று முகம் பார்த்து உருக ஆரம்பித்துவிட்டால், வேட்டையைக் கோட்டை விட்டுவிடுவான். அதனால், இந்த முகத்தைப் பார்த்து ஃஃபீல் செய்யும் மையமும் அவனுக்கு அவ்வளவாகத் தேவைப்படவில்லை.

ஒரே சமயத்தில், பல விஷயங்களைப் போட்டு மனதில் உழப்பிக்கொண்டே இருந்தாலும், அவனால் வேட்டையில் கவனம் செலுத்த முடியாது. அதனால், multi tasking மையமும் ஒரு வேட்டுவனுக்குத் தேவை இல்லை. ஆக, கூட்டிக் கழித்துப் பார்த்தால், மொழி மையம், முகபாவத்தைக் கிரகிக்கும் மையம், பல விஷயங்களை ஒரே சமயத்தில் ஒருங்கிணைத்து யோசிக்கும் மையம் ஆகியவை எல்லாம் வேட்டைக்குத் தேவைப்படவில்லை. அதனால், இந்த மையங்களுக்காக அதுவரை ஒதுக்கிய இடத்தைப் பெரும்பாலும் காலி செய்துவிட்டு, வேட்டைக்கு வேண்டிய புதிய தேர்ச்சிகளை வெற்றிடங்களில் நிரப்பின ஆண்களின் மரபணுக்கள்.

இந்த மாற்றங்களினால், மனித ஆண் கை தேர்ந்த வேட்டுவன் ஆனான். ஆனால், அதற்கு மேல் பெண்களின் மனதையோ, முக பாவத்தையோ புரிந்துகொண்டு இனிமையாகப் பேசும் தன்மையை அவன் இழந்துவிட்டான். இரை கிடைக்கிறதோ இல்லையோ, ஒரே இலக்கைத் துரத்திக்கொண்டு போய், தவமாய்த் தவம் கிடந்து, அதில் பெரிய சுவாரஸ்யம் உணரும் விசித்திரமான குணத்தையும் பெற்றான். அதனால், ஆண் - பெண் என்கிற இந்த இரண்டு பாலினத்துக்கும் பெரிய மன இடைவெளி உருவாக ஆரம்பித்தது. அதற்கு மேல் ஒருவரை மற்றவர் புரிந்துகொள்ளுவது கடினமாகிவிட்டது. ஆனால், புரிந்துகொள்வதைவிட, பிழைத்துக்கொள்ளுதல் அந்தக்

Join / Telegram : @Tamil_Books_Library

காலத்தில் முக்கியமாகப்பட்டதால், ஆணின் மூளை மாற்றங்களை பெண்கள் சட்டை செய்யவில்லை.

உணவு கொண்டுவரும் வரை எல்லாமே க்ஷேமம்தான் என்று இருந்துவிட்டார்கள். ஆனால், போகப் போக ஆணின் மூளை மாற்றத்தினால் பல பிரச்னைகள் தலை தூக்க ஆரம்பித்தன!

Join / Telegram : @Tamil_Books_Library

# 22

## ஆண் ஆதிக்கம்!

ஆ தி மனிதர்கள் பிறவி வேட்டுவர்கள் அல்ல. சிங்கம், புலி, கரடி மாதிரியான வம்சா வழி வேட்டுவ விலங்குகளைப்போல, நீண்ட நகம், கூரிய பற்கள், மின்னல் வேகம் போன்றவை மனிதர்களுக்கு இல்லை. அவர்களிடம் இருந்தது எல்லாம், ஏதோ கொஞ்சம் புத்தி, சின்ன கல் ஆயுதங்கள்... இவ்வளவுதான். இந்த சொற்ப ஆயுத பலத்தோடு, பெரிய பெரிய மிருகங்களை வேட்டையாட வேண்டும் என்றால், அறிவுள்ள யாராவது முன்வருவார்களா? 'ரொம்ப ஆபத்தாச்சே, ஆளை விடுங்கப்பா சாமி. நான் பாட்டுக்கு குகையிலேயே கிடக்குறேன்!' என்றுதானே அவன் நினைத்து இருக்க வேண்டும்? ஆனால், ஆதிமனித ஆண், இந்த சொற்ப ஆயுத பலத்தோடு வேட்டைக்குப் போகத் தயாராகவே இருந்தான். ஏன்?

இப்படி அவன் வேட்டைக்குப் போகாவிட்டால், பெண்கள் யாரும் அவனை மதிப்பதாக இல்லை + பிற ஆண்களும் அவனுக்கு மரியாதை தருவதாக இல்லை. ஆக, பெண்களின் ஆதரவு, ஆண்களின் அங்கீகாரம்... இரண்டும்தான் எல்லா காலத்திலும் ஆண்களை ஊக்குவிக்கும் அம்சங்களாக இருந்து உள்ளன. அதனால்தான், வேட்டை மாதிரியான கஷ்டமான காரியங்களில் ஈடுபட்டு, தன் fitness for survival-லை காட்டிக்கொள்ளத் துணிந்தார்கள் ஆண்கள்.

இதைத்தான் Handicap Principle என்கிறார் பரிணாம உயிரியல் நிபுணர் அமேட்ஸ் ஸஹாவி. இது என்ன விதி? உதாரணத்துக்கு மிகக் கனமான தந்தங்களைக்கொண்ட ஓர் கடா யானையை

Join / Telegram : @Tamil_Books_Library

எடுத்துக்கொள்வோம். அவ்வளவு கனமான தந்தத்தை வளர்த்துக்கொள்வதே ரொம்பக் கஷ்டம். அதைச் சுமந்துகொண்டு காடுகளில் பல மைல் தூரம் தினமும் நடப்பதும், பகைவர்கள் வந்தால் ஓடித் தப்பிப்பதும் ரொம்பப் பெரிய இம்சை. இப்படி தன்னை ஹாண்டிகேப் (ஊனப்படுத்தி) செய்து, பராமரிக்க அதிக எரிபொருள் செலவாகும். காஸ்ட்லியான தந்தத்தைப் பராமரிப்பதும் கஷ்டம். இத்தனை கஷ்டங்கள் இருந்தும் ஆண் யானைகள் தந்தத்தை வளர்த்துக்கொள்கின்றனவே... ஏன்?

'இவ்வளவு எரிபொருளைச் செலவழித்து, கஷ்டமான காரியத்தைத் தொடர்ந்து செய்து, இன்னும் பிழைத்துக்கொண்டு இருக்கிறேன் என்றால், என்னுடையவை எவ்வளவு ஃபிட்டான மரபணுக்கள் பாருங்கள்!' என்று காட்டும் ஒரு சான்றிதழ்தான் அந்தத் தந்தங்கள். சுலபமாகச் சாதிக்கக்கூடியவற்றில் நிறைய போங்காட்டம் இருக்கும். ஆனால், கடினமானது என்றால், நிஜமாகவே உயர்ரக சரக்கு இருந்தால்தான் முடியும். தன்னிடம் இருக்கும் மரபணுக்கள் உண்மையிலேயே மிக உயர்ந்த ரகமானவை என்று காட்டிக்கொள்ளவே ஆண் விலங்குகள் இப்படி மெனக்கெடுகின்றன. சொல்லி வைத்தாற்போல பெண் விலங்குகளும் இப்படிச் சாதிக்கும் ஆண்களாகப் பார்த்துதான் கூடிக் குட்டி ஈனுகின்றன. இதுதான் இயற்கையின் விதி என்றால், மனிதப் பெண்களும் இதற்குக் கட்டுப்பட்டுத்தானே ஆக வேண்டும்?

அதனால்தான், ஒவ்வொரு காலகட்டத்திலும் செய்வதற்கு அரிதான காரியங்களைச் செய்து காட்டும் ஆண்களாகப் பார்த்து கூடிக்கொள்கிறார்கள் பெண்கள். அதனால்தான், ஆயுதங்கள் இல்லாத காலத்தில், வீரமாக வேட்டைக்குச் செல்வதை ஒரு ஹை கிளாஸ் நடத்தை என்று பாராட்டினார்கள் பெண்கள். ஆனால், அதே பெண்களோ, ஆயுதங்கள் மிகச் சுலபமாகக் கிடைக்கும் இந்தக் காலத்தில், 'எதற்கு எடுத்தாலும் வெட்டிடுவேன், குத்திடுவேன்னு காட்டுமிராண்டி மாதிரி என்ன இது அசிங்கமா? அமைதியா இரு. அதுதான் வீரம்!' என விதிகளைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டு, புது நிபந்தனைகளை விதிக்கின்றனர்.

Join / Telegram : @Tamil_Books_Library



இதே Handicap Prinicple என்கிற விதியை அனுசரித்துத்தான் மனித ஆண்கள் இன்றும் மிக பகட்டான, அதிக செலவு பிடிக்கும் நடத்தைகளில் ஈடுபடுகிறார்கள். ஒரு சராசரி ஆண் மகன், விலை குறைவான வாகனம் பல இருந்தாலும், இருப்பதிலேயே அதிக எரிபொருள் செலவாகும், உயர் பராமரிப்பு வாகனத்தைத்தான் வாங்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பது இதனால்தான். அதனால்தான் புகாட்டி, லம்போகினி, மெர்சிடீஸ், ஹம்மர் மாதிரியான மிக அதிக விலை உயர்ந்த வாகனங்களை உரிமையாக்குவதைத் தன் வாழ்வின் லட்சியமாகக்கொண்டு இருக்கிறார்கள் பல ஆண்கள். 'இவ்வளவு ஹை மெயின்டனென்ஸ் சமாசாரத்தை நான் அநாயாசமாக உபயோகிக்கிறேன் என்றால், நான் எப்பேர்ப்பட்ட ஜித்தன் என்று தெரிந்துகொள்' என்பதுதான் இவர்கள் நடத்தையின் உள் கருத்து!

தன்னை இப்படி ஒரு பெரிய ஜித்தன் என்று காட்டிக்கொண்டால், பெண்கள் எல்லாம் வந்து தன்னோடு ஒட்டிக்கொள்வார்கள், ஆண்கள் எல்லாம் தன்னை 'அடேங்கப்பா... பெரிய ஆளுடா இவன்!' என்று மிரண்டு மதிப்பார்கள் என்பது

Join / Telegram : @Tamil_Books_Library

ஆண்களின் கணக்கு. மற்றவர்கள் இவனை மதித்தால் என்ன, மதிக்காவிட்டால் என்ன? அதற்காக ஏன் இவன் இவ்வளவு சிரமங்களை மேற்கொள்கிறான்? புகாட்டியும், மெர்சிடீஸும் இல்லை என்றால், இவன் செத்தா போய்விடுவான் என்றெல்லாம் கேட்கத் தோன்றலாம். இதற்கு ஆண்களைக் குறை கூறி அர்த்தம் இல்லை. காரணம், அவர்களுக்கே தெரியாது, இது அவர்கள் உடம்பில் ஊறும் டெஸ்டோஸ்டீரான் படுத்தும் பாடு என்று!

டெஸ்டோஸ்டீரான் என்பது ஆண்மைப்படுத்தும் ஹார்மோன். இது இருந்தால் உடலும், மூளையும், மனமும் பேராண்மை பெற்றுவிடும் என்பது பற்றி நாம் ஏற்கெனவே பார்த்து இருக்கிறோம். டெஸ்டோஸ்டீரானின் இன்னொரு மிக நுணுக்கமான தன்மை, இது உடம்பில் dominance என்கிற ஆதிக்க மனப்பான்மையைத் தூண்டுகிறது. அதனால், தன் கூட்டத்தில் தானே முந்தியிருக்க வேண்டும் என்கிற வேட்கை ஆண்களுக்கு வந்துவிடுகிறது. இப்படி முந்தி இருப்பதை அவன் உணர்ந்துவிட்டால், அவனுக்கு இன்னும் அதிக டெஸ்டோஸ்டீரான் சுரக்க ஆரம்பித்துவிட, இதுவே பெரிய போதையைத் தந்துவிடுகிறது.

இந்தப் போதையை நீடித்துக்கொள்ள இவன் தொடர்ந்து மற்ற ஆண்களை முந்திக்கொண்டே இருக்க வேண்டும். திடீரென தோற்றுப்போனால், அவனது டெஸ்டோஸ்டீரான் அப்படியே பல்டி அடித்து, மிகக் குறைந்த அளவுக்குப் போய்விடும். அத்துடன் அது தந்த போதை, துணிச்சல், தன்னம்பிக்கை எல்லாமே காணாமற் போய்விட, இதனால் ஆண்கள் அடையும் மன உளைச்சல் ரொம்பவும் துயரமானது. இந்தத் துயரில் இருந்து தம்மைக் காப்பற்றிக்கொள்ளவே ஆண்கள் எப்போதும் முந்திக்கொண்டு, பிறரது மதிப்பு மரியாதையைப் பெற ரொம்ப மெனக்கெடுகிறார்கள். இதற்காக, கடினமான காரியங்களை எல்லாம் இழுத்துப்போட்டுக்கொண்டு செய்கிறார்கள். பெண்களும், 'வசதியாப் போச்சு' என்று ஆண்களுக்குக் கொம்பு சீவி விட்டு, அவர்களை மேலும் மேலும் ஊக்குவிக்கின்றனர். டெஸ்டோஸ்டீரானின் தூண்டுதல் + பெண்களின் ஊக்கம், இரண்டும் சேர்ந்து ஆண்கள் தமக்குள் போட்டியிட்டுக்கொள்ள, பின்புலத்தில் அமைதியாகக் காத்திருந்து, போட்டிகளில்

Join / Telegram : @Tamil_Books_Library

தோற்கும் ஆண்களை எல்லாம் அப்படியே வடிகட்டிவிட்டு, ஜெயிக்கும் ஆண்களை மட்டும் தேர்ந்தெடுத்து, அவர்களது மரபணுக்களை அடுத்த தலைமுறைக்கு பார்சல் கட்டிவிடுகிறார்கள் பெண்கள்.

அப்படியானால் தோற்றுப்போன ஆண்கள் என்ன செய்வார்கள்?

Join / Telegram : @Tamil_Books_Library




# ஆணும் பெண்ணும்

ஆண்கள்... வேட்டைக்குப் போனார்கள். பல நாட்கள் இரையைப் பின் தொடர்ந்து போய், பதுங்கி இருந்து, கூட்டு முயற்சியில் வேட்டையாடி, மாமிசத்தைச் சுமந்து, மீண்டும் குகைக்கு வந்து, அங்கே காத்திருக்கும் பெண்கள், குழந்தைகள், பெரியவர்களுக்குக் கொடுத்தார்கள்.

பெண்கள்... தாங்கள் நாள் முழுக்கச் சுற்றிச் சேகரித்த காய், கனி, கிழங்கு வகையறாக்களைக் குடும்பத்தினரோடு பகிர்ந்துகொண்டார்கள்.

ஆண்கள்... பாதுகாப்பு, காவல், வேட்டை, ஆயுதம் செய்தல் மாதிரியான வேலைகளில் ஈடுபட்டார்கள்.

பெண்கள்... பிள்ளை வளர்ப்பு, நெருப்பைச் சமாளித்தல், குகை நிர்வாகம், பெரியவர் பராமரிப்பு என மற்ற வேலைகளைக் கவனித்துக்கொண்டனர். ஒருநாள் இரண்டு நாளைக்கு அல்ல; முழுதாக ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு!

இப்படி ஆண், பெண் இருவரும் தொடர்ந்து வெவ்வேறு வேலைகளை யுகம் யுகமாகச் செய்து வந்ததால், அவர்களது மூளையும் இதற்கு ஏற்றாற்போல மாறிப்போனது.

பெண்கள், காலையில் இருந்து மாலை வரை வாய் ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பதும், முகங்களைப் பார்த்தே உள் உணர்வுகளைக் கண்டுபிடிப்பதும், ஒரே சமயத்தில் பல வேலைகளை அநாயாசமாகச் செய்வதுமாக இருந்தார்கள். பிள்ளைகளைப் பாட்டிகளிடம் விட்டுவிட்டு, குகையைச் சுற்றி

Join / Telegram : @Tamil_Books_Library

இருக்கும் செடிகளை ஆராய்ந்து, இனிப்பான பழங்களையும், சுவையான விதைகளையும் திரட்டிக்கொண்டு வருவதும், கதைகள் பேசிக்கொண்டே, கை வேலைகள் செய்வதும் பெண்களின் பொழுதுபோக்குகளாக இருந்தன.

அதனால்தான், இன்று வரை பெண்களுக்கு இதே பழக்கங்கள் நீடித்து வருகின்றன. போரடித்தால், தித்திப்பாக எதையாவது சாப்பிடுவது, யாருக்காவது போன் போட்டு அரட்டை அடிப்பது, கையில் காசே இல்லை என்றாலும், சும்மாவாவது கடைத் தெருவுக்குப் போய் வேடிக்கை பார்த்து விண்டோ ஷாப்பிங் செய்துவிட்டு வருவது... என்று இன்றும் பெண்கள் இருப்பது இதனால்தான்.

பெண்கள் இப்படி என்றால், ஆண்கள் இதற்கு நேர் எதிர். வேட்டையே குறி என்று எப்போதும் திரிந்ததால், ஆண்கள் அவ்வளவாகப் பேசுவதே இல்லை. இவர்கள் மூளையில் மொழி மையத்தின் சைஸும் சின்னதாகிவிட்டதால், நிஜமான ஆண்களுக்குச் சமய சந்தர்ப்பம் அறிந்து, சாமர்த்தியமாகப் பேசவே வருவதில்லை. முகக் குறிப்புகளையும் இவர்களால் துல்லியமாகக் கணிக்க முடிவது இல்லை.

ஒரே சமயத்தில், பல வேலைகளையும் ஆண்கள் செய்வது இல்லை. ஒரே இலக்காக, எதையாவது தொடர்ந்து துரத்திக்கொண்டே சென்று, அது கிடைக்கும் வரை சளைக்காமல் முயன்று, அது கிடைத்துவிட்டால், எல்லோரிடமும் காட்டி பெருமைப்பட்டுக்கொண்டு, குகைக்குத் திரும்பி, 'அப்பாடா' என்று இளைப்பாற ஆரம்பித்துவிடுவான். பிற ஆண்களைச் சந்தித்தால், வேட்டை நுணுக்கங்கள், ஆயுதங்கள், கருவிகள், ஆணின அரசியல், சாகசங்கள், காமம் மாதிரியான தலைப்புகளில் பேசிக்கொண்டு இருப்பான். அப்போதும், 'எனக்குத்தான் எல்லாம் தெரியும், நான்தான் இங்கே ஆல்ஃபா!' என்று தம்பட்டம் அடித்துக்கொண்டே இருப்பான். காரணம், ஆண்களுக்கு இடையில் எப்போதும் 'யார் இங்கே ஆல்ஃபா?' என்ற போட்டி இருந்துகொண்டே இருக்கிறது.

Join / Telegram : @Tamil_Books_Library



இதனால், தமாஷாகப் பேசினாலும்கூட ஆண்கள் ஒருவரை ஒருவர் மட்டம் தட்டிக்கொண்டும், காலை வாரிக்கொண்டும் இருப்பார்கள். அதுவும், ஆண்கள் பேசும்போது, ஒருவர் முகத்தை அடுத்தவர் உற்றுப்பார்த்துப் பேசமாட்டார்கள். சுற்று வட்டாரத்தை விழிகளால் ஸ்கேன் செய்துகொண்டே பேசுவார்கள். அந்த அளவுக்கு அவர்களது மூளையில் வேட்டை வெறி ஊறி உள்ளது.

இதே வழக்கம்தான் ஆண்களுக்கு இன்றும் இருந்து வருகிறது. ஒரே வித்தியாசம், அந்தக் காலப் பெண், 'ஆண் என்றால் இப்படித்தான் இருப்பான்!' என்று ஏற்றுக்கொண்டாள். 'ஏன், என்கிட்ட முகம் கொடுத்துப் பேச மாட்டேங்கிறீங்க? உங்களுக்கு என்னைப் பிடிக்கலையா? ஏன் என்கூட ஷாப்பிங் வர மாட்டேங்கிறீங்க?' என்றெல்லாம் தொணதொணக்கவில்லை. 'நான்தான் குகை வேலையை எல்லாம் செய்யணுமா? ஏன், இவனும் கொஞ்சம் செய்தால் குறைந்தா போய்விடுவான்?' என்று குறைகூறவும் இல்லை. 'அப்ப ஏன் இந்தக் காலப் பெண்கள் மட்டும் இதை எல்லாம் எதிர்பார்த்து,

Join / Telegram : @Tamil_Books_Library

இம்சைப்படுத்துகிறார்களாம்!' என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றலாம்.

இதற்கும் ஒரு சுவாரஸ்யமான பதில் இருக்கிறது. ஆனால், அதற்கு முன் காட்டுவாசி நிலையில் இருந்து மனிதர்கள் நாடோடிகளாக மாறிய கதையை முடித்துவிடுவோம்.

கொடும் பனிக்காலம் முழுக்க மனிதர்கள் குகைகளில் பதுங்கி வாழ்ந்து வந்தார்கள். பத்துப் பதினைந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தக் கொடும் பனி விலகி, உலகில் உஷ்ணம் பரவ ஆரம்பித்தது. அதுவரை வெறும் பனிப் பாறைகளும், ஊசி இலை மரங்களுமாக இருந்த பூமியில், நதிகள் உருவாகி ஓட ஆரம்பித்தன. பல நிறங்களில் பூக்கும் செடிகள் தோன்றின.

வழக்கம்போல பெண்கள் இந்த இலை, கனி, காய்களைச் சேகரித்து குகைக்குக் கொண்டுவர, வழியில் சிதறிய விதைகள் புதுச் செடிகளாக உயிர் பெற, பெண்கள் தோட்டக் கலையைக் கண்டுபிடித்தார்கள். வீட்டைச் சுற்றித் தோட்டம் போட்டு, விதவிதமான செடிகளை நட்டுவைத்து, அன்றாடத் தேவைக்கான உணவு வகைகளை வளர்த்து, சாகுபடி செய்ய ஆரம்பித்தார்கள்.

இந்தச் செடிகளைச் சூறையாட கால்நடைகள் வந்தபோது, அவற்றையும் குட்டியில் இருந்தே எடுத்து வளர்த்து, வீட்டுப் பிராணிகளாக மாற்றி வைத்தார்கள் பெண்கள்.

இந்தக் கால்நடைகளை மோப்பம் பிடித்துக்கொண்டு வேட்டுவ விலங்குகள் வந்தபோது, அவற்றை விரட்டி அடிப்பது ஆண்களின் வேலையானது. வீட்டைச் சுற்றியே சைவ, அசைவ உணவுகள் ஆயத்தமாகக் காத்திருக்க... வேட்டைக்குப் போக வேண்டிய அவசியம் அதற்கு மேல் ஆண்களுக்கு இருக்கவில்லை. அதனால் வேட்டுவ வீரியத்தை வைத்து, ஆண்களைத் தரம் பிரித்துத் தேர்ந்தெடுத்துக் கலவிகொள்ளும் வழக்கத்தை மாற்றிக்கொண்டார்கள் பெண்கள்!

Join / Telegram : @Tamil_Books_Library




# அறிவு மயக்கம்!

வேட்டுவ வீரியம் தவிர்த்து, வேறு எப்படி ஆண்களைத் தேர்ந்தெடுத்தார்கள் ஆதிவாசிப் பெண்கள்?

சிம்பிள்... அவளுடைய சொத்துகளான, குழந்தைகள், விளை நிலங்கள், வீட்டுப் பிராணிகள் ஆகியவற்றைப் பாதுகாத்துத் தருவதில் எவன் கில்லாடியாக இருந்தானோ, அவனையே அவள் உறவுக்குத் தேர்ந்தெடுக்க ஆரம்பித்தாள்.

காவல் புரிவதில் கில்லாடித்தனம் காட்டிய ஆண்களுக்கு அதிகமான வாரிசுகள் உருவாக ஆரம்பிக்க, காவல் திறமை, வீரம் ஆகியவற்றுக்கு மவுசு பெருகியது. தான் காவலில் கெட்டிக்காரன், வீரத்தில் தலை சிறந்தவன் என்று காட்டிக்கொள்ள ஆண்கள் தமக்குள் போட்டியிட்டார்கள். ஓர் ஆண் அல்லது ஓர் ஊரைச் சேர்ந்த அனைத்து ஆண்களும், அடுத்த ஊருக்கு கள்ளத்தனமாகப் போய், அங்கு இருக்கும் ஆடு, மாடுகளை ஓட்டிக்கொண்டும், அந்த ஊர்ப் பெண்களைத் தூக்கிக்கொண்டும் தங்கள் ஊருக்குத் திரும்புவார்கள். இப்படிக் கடத்தப்பட்ட கால்நடை மற்றும் பெண்களை அவர்களது ஊர்க்கார ஆண் மீட்டுக் கொண்டு வர வேண்டும். இல்லாவிட்டால், அவன் ஆட்டத்தில் தோற்றவன் ஆவான். ஜெயித்தவன், கால்நடைகளையும் பெண்களையும் தனதாக்கிக்கொள்வான். இப்படிப் பெண்களைத் தூக்கிக்கொண்டு வருவதைத்தான் ‘விவாகம்’ என்று சம்ஸ்கிருதத்தில் குறிப்பிட்டார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

விளை நிலங்களையும் வீட்டுப் பிராணிகளையும் பராமரிக்க ஆரம்பித்த பிறகு, மனித மனம் புதுப் புது கோணங்களில் வேலை செய்ய ஆரம்பித்தது. அதுவரை, 'எனது' என்று பெரிதாக எதையும் உரிமை கொண்டாடிப் பழகி இராத மனிதர்களுக்கு, அப்போதுதான் முதன்முதலில், 'இந்த நிலப் பகுதி என்னுடையது. இந்தக் கால்நடைகள் எனக்குச் சொந்தமானவை!' என்கிற நம்பிக்கைகள் தலை தூக்கின.

காரணம், அதற்கு முன்பு வரை மனிதர்கள் நிலத்திலோ, பிற பிராணிகளின் மீதோ தங்கள் உழைப்பைச் செலவழித்தது இல்லை. அதனால், எல்லாமே இலவசமாகக் கிடைத்ததாக நினைத்திருந்தார்கள், உரிமை கொண்டாட அவர்களுக்குத் தோன்றி இருக்கவில்லை. ஆனால், உழைப்பை முதலீடாகச் செலுத்தியபோதோ, 'நான் கஷ்டப்பட்டு வளர்த்தது. அதனால் இது என்னுடையது!' என்கிற லாஜிக் சரியாகப்பட்டது.

இதே லாஜிக்கை ஆண்கள் பெண்களின் மீதும் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். விலங்கு தாக்குதல், எதிரி தாக்குதல் மாதிரியான அபாயங்களில் இருந்து பெண்களை அவர்கள் காப்பாற்றியபோது எல்லாம், 'கஷ்டப்பட்டுக் காப்பாற்றினேன். அதனால், நீ எனக்குத்தான் சொந்தம்!' என்று கருத ஆரம்பித்தார்கள். இப்படிக் காக்கப்பட்ட பெண்களை இன்னொருத்தன் தன் சாமர்த்தியத்தால் கடத்திவிட்டாலும், 'கஷ்டப்பட்டுக் கடத்தினேனே, அதனால் நீ எனக்குத்தான் சொந்தம்!' என்று உரிமை கொண்டாட ஆரம்பித்தான்.

எதற்குக் காப்பாற்ற வேண்டும், எதற்குக் கடத்த வேண்டும்? இந்த ஆண்களுக்கு ஏன் பெண்களின் மீது இவ்வளவு மோகம்? ஏனெனில், பெண்தான் மரபணு ஆட்டத்தில் அவன் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்கும் ஒரே மூலாதார வளம். அதனால் நீர், நிலம் மாதிரி அவளையும் தன் ஆளுமைக்குள் உட்படுத்தும் வேட்கை ஆண்களுக்கு ஏற்பட்டது.

Join / Telegram : @Tamil_Books_Library



வேட்டுவ காலத்தில் ஆணின் ஒரே வேலை... வேட்டை மட்டும்தான். ஆனால், நதிக்கரையோர நாகரிகங்கள் உருவான பிறகோ, ஆணுக்கு வேட்டையாட வேண்டிய அவசியமே இருக்கவில்லை. அதனால், அவனுக்கு நிறைய நேரம் கிடைத்தது. அதுவரை, பெண்கள் செய்து வந்த பல வேலைகளை ஆண்களும் கவனிக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது. இந்தப் பெண்பால் வேலைகளில் தனக்குப் பிடித்த ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்து, அதில் தன் வேட்டுவ மூளையைச் செலுத்தினான் ஆண். ஒரே விஷயத்தில் குறியாக இருந்து, அதைத் துரத்திக்கொண்டே போவது அவன் மூளைக்கு வாடிக்கை என்பதால், அதுவரை பெண்களுக்குப் புலப்பட்டு இருக்காத பல நுணுக்கங்கள் புதிதாக ஈடுபட்ட ஆண்களுக்குப் புரிய ஆரம்பித்தன.

அதனால், வாய்ப் பாட்டு, இசை ஆனது. கைவைத்தியம், மருத்துவமானது. தோட்டக் கலை, விவசாயமானது. அறிவு, அறிவியல் ஆனது. மன ஆறுதல், மதமானது. பூர்வீகக் கதைகள் புராணங்கள் ஆயின. பெண்கள் அதுவரை செய்து வந்த சாதாரண வேலைகள் எல்லாமே specialised ஆக ஆரம்பித்தன.

Join / Telegram : @Tamil_Books_Library

பல புதிய தளங்களைக் கண்டுபிடித்து, ஆண் அதை மென்மேலும் நுணுக்கமாக ஆராய, ஆணின் இந்த கெட்டிக்காரத்தனத்தினால் பெண்களின் வாழ்வு சுலபமானது.

அவன் உலோகம் கண்டுபிடித்தான், இவளுக்கு சமையல் சுலபமானது. மருத்துவம் கண்டுபிடித்தான், குழந்தைகளின் பிழைப்பு விகிதம் அதிகமானது.

இப்படி, ஆணின் மூளைத்திறன் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெண்களுக்குப் பயன்பட்டதால், பெண்கள் சட்டெனத் தங்கள் கலவியல் தேர்வு விதிகளை மாற்றிக்கொண்டார்கள். சுகம், உணவு வழங்கும் விகிதம், வேட்டுவ வீரியம், பாதுகாக்கும் விகிதம் ஆகிய எல்லாவற்றையும் பின் தள்ளி வைத்துவிட்டு, அவர்களின் அறிவுக்கு முக்கியத்துவம் தர ஆரம்பித்தார்கள்.

ஆணின் அறிவு பெண்ணுக்கு ரொம்பவே கவர்ச்சியாகத் தோன்ற, அறிவுசார் போட்டிகள் ஆண்களுக்குள் ஆரம்பமாகின. தன் ஆற்றலின் மீது முழு நம்பிக்கை இருந்த நிஜ ஆல்ஃபா ஆண்களுக்குப் பெண்கள் தோழிகளாகவும், காதலிகளாகவும், விசிறிகளாகவும், ஊக்குவிப்பாளிகளாகவும், ஏன்... சேவகிகளாகவும் இருக்க முன் வந்தார்கள்.

இதைப் பார்த்தால் தோற்றுப்போன ஆண்களுக்கு எப்படி இருந்திருக்கும்? அதனால் தோத்தாங்குளிகளும் சளைக்காமல் வேறு வழிகளில் தங்கள் மூளையைப் பிரயோகித்தார்கள். போட்டியில் கலந்துகொள்ளாமலேயே பெண்களைத் தந்திரமாக அடைய முயன்றார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library




# ஆல்ஃபா ஆண்கள்!

போட்டி என்று ஒன்று இருந்தால்தானே, வளமான மரபணுக்களைத் தேர்வு செய்து, ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்க முடியும். போட்டியே இல்லை என்றால், அந்த இனத்தின் மரபணுவின் தரம் தாழ்ந்துவிடுமே!

தந்திரம் செய்பவன், சில தில்லுமுல்லு உத்திகளை உபயோகிப்பான். அதில் முதலாவது, 'பெண்கள் இப்படி எல்லாம் ஆண்களைக் கலவிக்காகத் தேர்ந்தெடுப்பது, மகா பாவம். நல்ல குடும்பத்துப் பெண்கள் இப்படி எல்லாம் செய்யவே மாட்டார்கள்' என்று ஒரு புதுக் கருத்தை முன்வைப்பான்.

கொஞ்சம் புத்தி உள்ள பெண்ணாக இருந்தால், "ஏன், சீதைகூடத்தான் ராமனை பலப் பரீட்சைவைத்துத் தேர்ந்தெடுத்தாள். அவள் பத்தினித் தெய்வம் என்றால்... நான் மட்டும் அப்படி செய்யக் கூடாதா?" என்று கேட்டுவிடுவாள்.

அதையும் சமாளிக்க, அடுத்த உத்தி. 'பொம்பளைன்னா வாயாடக் கூடாது. எதிர்த்துக் கேள்வி கேட்கக் கூடாது. அடக்க ஒடுக்கமா இருக்கிறதுதான் நல்ல பொண்ணுக்கு அழகு' என்று சுயமாக யோசிப்பதற்கு ஒரு முட்டுக்கட்டையைப் போட்டுவிட வேண்டியது. இதை நம்பி பெண்கள் வாய் அடைத்துக்கிடக்கும்போது, "பொம்பளை உனக்கு என்ன தெரியும்?" என இன்னொரு தாழைப் போட்டு, தனக்குப் பிடித்த ஆணைத் தேர்வு செய்யும் உரிமையைத் தடுத்து, எவனையாவது அவள் தலையில் கட்டிவிட வேண்டியது.

Join / Telegram : @Tamil_Books_Library

இப்படி கட்டாயப்படுத்திக் கட்டிவைத்தும், அவள் அவனோடு வாழ மறுத்துவிட்டால்?

"ம்ஹூம்... கற்பு உள்ள பெண் அப்படி எல்லாம் செய்யவே கூடாது. தெய்வத்தைத் தொழவே இல்லை என்றாலும், கணவனைத் தெய்வம் எனத் தொழும் பெண்கள் ரொம்ப ஸ்பெஷல் சக்திகளைப் பெறுவார்கள். இவள் 'பெய்' என்றால் உடனே மழை பெய்துவிடும். அத்தனை விசேஷ சக்தியைக் கற்பு என்கிற இந்த சமாசாரம் உனக்குத் தரும்" என்று சொன்னால் கேட்க வேண்டுமா? பெண்களுக்குத்தான் பவர் என்றால் ரொம்பப் பிடிக்குமே!


இவ்வளவு தந்திரங்கள் செய்தும் பெண் மசியவில்லை என்றால், அதற்கும் ஓர் உத்தி கைவசம் இருந்தது. கடவுள் என்கிற பூச்சாண்டி.

"தெய்வம் உன்னைத் தண்டித்துவிடும். அப்புறம், அடுத்த ஜென்மத்தில் படாத பாடுபடுவாய்!" இந்த மிரட்டலுக்கும் ஒருத்தியும் மசியவில்லை என்றால், கடைசி ஆயுதமாக இருந்தது, public opinion. இவள் மோசமான பெண், சமூக விதிகளை உடைப்பவள், இஷ்டப்பட்ட ஆணோடு கூடுபவள்... என்று சொன்னால் போதும், அந்தப் பெண்ணுக்கு அதற்கு மேல் பாதுகாப்பே இருக்காது. இப்படித் தங்கள் பாதுகாப்புக்குப் பயந்தே, பல பெண்கள் தாங்கள் ஏமாற்றப்படுகிறோம் என்று தெரிந்தும், பலவீனமான ஆண்களின் தந்திர உத்திகளுக்கு அடிபணிந்து போகிறார்கள்.

தலைமைப் பண்புகள் ததும்பி வழியும் ஆல்ஃபா ஆண்களுக்குத்தான் பெண்கள் படிகிறார்கள் என்பது வெட்டவெளிச்சமான விஷயம். நிஜமான ஆல்ஃபா ஆண்களுக்கு இதில் எந்தச் சிக்கலும் இல்லை. அவன் சும்மா அவன் வேலையைப் பார்த்துக்கொண்டு இருந்தாலே போதும், பெண்கள் தாமாகவே வந்து, அவனிடம் ஆஜரானார்கள். ஆனால், நிஜ ஆல்ஃபாத்தனம் எல்லா ஆண்களுக்கும் இருக்காதே. இதைச் சமாளிக்கச் சில ஆண்கள் செயற்கையாகத் தங்களையும் ஆல்ஃபா என்று காட்டிக்கொள்ள முயல்வார்கள். தனக்கு எக்கச்சக்க செல்வாக்கும், அதிகாரமும் இருப்பதாக, ஓவராக பந்தா அடித்துக்கொள்வார்கள். ஆனால், பிரச்னை என்று

Join / Telegram : @Tamil_Books_Library

வரும்போது, புறமுதுகிட்டு ஓடி ஒளிவார்கள். பிரச்னை தானாகத் தீர்ந்ததும், கொஞ்சம்கூட வெட்கமே இல்லாமல், தன்னால்தான் அது தீர்ந்தது என்று வெட்டி ஜம்பம் வேறு அடித்துக்கொள்வார்கள் இந்தப் போலி ஆல்ஃபாக்கள்.



இன்னொரு வகை ஆண்கள் உண்டு. தாங்கள் ஆல்ஃபாவே இல்லை என்பது இவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். போலியாக ஆல்ஃபா வேஷம் போடவும் அவர்களுக்கு வராது. அதனால், ஒரு ஆல்ஃபா ஆணின் ஜோதியைக் கடன் வாங்கி, இவர்கள் பிரகாசிக்க முயல்வார்கள்.

சினிமா ஸ்டாரின் தீவிர விசிறிகள், கட்சித் தலைவரின் தொண்டர்கள், மத குருவின் சிஷ்யகோடிகள், அரசனை பாராட்டிப் பாட்டு எழுதிப் பிழைக்கும் புலவர்கள் என்று செட்டுகள் சேர்வதே இப்படித்தான்.

சிலர் இதற்கும் ஒரு படி மேலே போய், கற்பனையில் மிகச்

Join / Telegram : @Tamil_Books_Library

சக்திவாய்ந்த சூப்பர் ஆல்ஃபாவைச் சிருஷ்டித்துவிடுவார்கள். அந்த all powerful ஆல்ஃபாவிடம் இவர்களுக்கு மட்டும் ஏதோ பிரத்தியேக உறவு இருப்பதாகக் காட்டிக்கொண்டு, பொது மக்களின் கோரிக்கைகள் நிறைவேற சிபாரிசு செய்கிறேன் பேர்வழி என்று கதை கட்டிவிட்டே பிழைப்பை நடத்திக்கொள்வார்கள்.

கோயில் பூசாரிகள், ஆவியுடன் பேசும் ஆசாமிகள், குறி சொல்லும் நபர்கள், இவர்கள் எல்லாமே இப்படிக் குறுக்கு வழியில் செகண்ட் ஹாண்ட் ஆல்ஃபா ஆக முயல்பவர்கள்தான்.

ஆக, கூட்டிக் கழித்துப்பார்த்தால், நிஜ ஆல்ஃபாக்கள், போலி ஆல்ஃபாக்கள், செகண்ட் ஹாண்ட் ஆல்ஃபாக்கள் என மூன்று வகை மனிதர்கள் எல்லாக் காலத்திலும் இருந்து வருகிறார்கள்.

நிஜ ஆல்ஃபாக்கள்... ரொம்பவே ஒரிஜினலாக யோசிப்பவர்கள். அவர்களுக்குப் போட்டியாக யாருமே வர முடியாது. அதனால், "என் இடத்தை யாராவது அபேஸ் பண்ணிடுவானோ?" என்கிற இன்செக்யூரிட்டி இவர்களுக்கு இருப்பதே இல்லை. அதனால், எல்லோரிடமும் மிக சகஜமாகப் பேசி, அனைவரையும் சரிசமமாக நடத்தும் தன்மை நிஜ ஆல்ஃபாக்களுக்கு உண்டு. இவர்கள் சும்மா இருந்தாலே, இவர்களின் ஒளிவட்டத்தைக்கண்டு எல்லோரும் ஈர்ப்புக்கொள்வார்கள்.

மஹாவீரர் ஆகட்டும், புத்தர் ஆகட்டும், இயேசுகிறிஸ்து ஆகட்டும்... அவ்வளவு ஏன், கடவுளே இல்லை என்று சொன்ன ஈ.வெ.ராமசாமிக்குப் 'பெரியார்' என பட்டம் சூட்டியதே பெண்கள்தானே. ஆல்ஃபா ஆண் என்றால், பெண்களுக்கு அத்தனை இஷ்டம்!

Join / Telegram : @Tamil_Books_Library




# பெண் அடிமை ஆனாள்!

ஆ ல்ஃஃபாவின் பரந்த மனப்பான்மையோ, ஒரிஜினாலிட்டியோ, பரிபூரண சுயாபிமானமோ, போலி ஆல்ஃஃபாக்களுக்கு வருவதே இல்லை. 'என்னைவிட பெட்டராக யாராவது வந்து, என் பதவிக்கு உலை வைத்துவிட்டால் அப்புறம் என்னை யாருமே மதிக்க மாட்டார்களே... எதற்கும் எல்லோரையுமே வைக்க வேண்டிய இடத்தில் வைத்து, நம் பவரைத் தக்க வைத்துக்கொள்வது மேல்!' என்கிற இன்செக்யூரிட்டி இவர்களுக்கு எப்போதுமே இருக்கிறது. இந்த இன்செக்யூரிட்டியைச் சரிகட்டவே, இது மாதிரி போலி ஆல்ஃஃபாக்கள், கடவுள்/பேய்/அரசன்/அதிகாரி என்று ஏதாவது ஒரு சூப்பர் ஆல்ஃஃபாவின் பெயரைச் சொல்லிக்கொண்டு பிழைப்பு நடத்தும் செகண்ட் ஹாண்ட் ஆல்ஃஃபா ஆசாமிகளோடு கூட்டு வைத்துக்கொள்கிறார்கள்.

நேரடியாக சாம்ராஜ்யம் உருவாக்கத் திராணியற்ற ஆண், 'நானும் பெரியவன் தான்!' என்று காட்டிக்கொள்ள குறுக்கு வழிகளைக் கையாள்வான். இவன் உண்மையிலேயே பெரியவன் இல்லை என்பதால், மற்றவரைச் சிறுமைப் படுத்தி மட்டும்தான் இவன் தன்னை உயர்வாகக் காட்டிக்கொள்ள முடியும்.

துரதிர்ஷ்டவசமாக எல்லா விலங்குக் கூட்டங்களிலுமே நிஜ ஆல்ஃஃபா ஆண்களின் எண்ணிக்கை எப்போதுமே மிகக் குறைவாகத்தான் இருந்து வருகிறது. ஆல்ஃஃபா ஆண் இப்படி அரிதாக இருப்பதுதான் அவனுடைய இந்த மவுசுக்கும் காரணம்.

பதவி, அதிகாரம், அந்தஸ்து இவை எதுவுமே, தன்

Join / Telegram : @Tamil_Books_Library

சந்ததியினரின் கையை விட்டுப் போய்விடக் கூடாது என்று நைஸாக சில Mind games விளையாடி, அடுத்தவருக்கு எந்த ஆற்றலும் ஏற்படாதபடி சமூக அமைப்பை மாற்றிவிடுகிறார்கள்.

எகிப்து, கிரேக்கம், பாரசீகம், இந்தியா, சீனா என்று எல்லா புராதனக் கலாசாரங்களிலும் மன்னனை மூளைச் சலவை செய்து, மந்திரிகளும் புரோகிதர்களும் ரகசியமாக நிழல் உலக ராஜ்யம் நடத்தி வந்திருக்கிறார்கள். அதனால், இந்த எல்லா கலாசாரங்களுமே, பெண்களுக்கு படிப்பு/சொத்து/வருமான உரிமைகளை வழங்கியது இல்லை. பெண்களைச் சுகம் வழங்கி, பிள்ளைகள் பெற்றெடுக்கும் கருவிகளாகவும், அடிமை ஆண்களை இலவசமாக வேலை செய்யும் இயந்திரங்களாகவுமே நடத்தி வந்தனர். இதனால், பெண்களும் அடிமை ஆண்களும் சுயமாக எந்த அதிகாரமும் இல்லாத powerless puppets ஆகிப் போனார்கள். தனக்கு உணவு வழங்கி, பாதுகாக்க ஒரு எஜமான் கிடைத்தால் போதும் என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். Beggars cannot be choosers. தன் அன்றாட வாழ்வுக்கே உத்தரவாதம் இல்லை என்று ஆகிவிட்ட பிறகு, பெண்கள் எப்படி ஆண்களைக் கலவிக்காகத் தேர்ந்தெடுக்க முடியும்? அதனால், உலக ஜீவராசிகள் எவற்றிலும் இல்லாத புது விசித்திரமாக, மனிதர்களில் மட்டும் ஆண்கள் பெண்களைக் கலவிக்காகத் தேர்ந்தெடுக்க ஆரம்பித் தார்கள்.

சாதிக்க முடியாத போலி ஆண்களைப் பெண்கள் மிகச் சுலபமாக இனம் கண்டு உதாசீனப்படுத்த, தங்களுக்கும் துணை வேண்டுமே என்று இவ்வகை ஆண்கள் ஒரு சாதுர்யத்தைக் கையாண்டார்கள். அதுவரை பெண்கள், ஆண்களைத் தரம் பிரித்து, கலவியல் தேர்வுக்கு உட்படுத்தினார்கள் அல்லவா? அதையே தடை செய்துவிட்டால்?

Join / Telegram : @Tamil_Books_Library



பெண்ணுக்கு கலவி சுதந்திரம் பறிபோகும். அப்புறம் என்ன? தராதரமே இல்லாமல் எந்த ஆண் வேண்டுமானாலும் எந்தப் பெண்ணையும் தனதாக்கிக் கொள்ளலாமே!

பெரும்பான்மையான ஆண்களின் தேவையை இந்த யுக்தி பூர்த்தி செய்ததால் இந்தக் கலவியல் தேர்வு முறை பரவலாக ஆரம்பித்தது.

இதனால், தரமே இல்லாத ஆண்களின் மரபணுக்களும் பெருவாரியாகப் பரவ ஆரம்பித்தன. நிஜமான ஆல்ஃபா ஆண்களின் எண்ணிக்கை ரொம்பவே குறைந்துபோனது. பெண்களின் சமூக அந்தஸ்து குறைந்து, ஆண்களைத் தரப்பரிசோதனை செய்ய அவர்கள் தவறியதால், தராதரம் இல்லாமல் பெண்கள் போலி ஆல்ஃபாக்களுக்குக் குழந்தைகள் பெற்றுப்போட, கோழைகளும், நோஞ்சான்களும், வெட்டி

Join / Telegram : @Tamil_Books_Library

ஆசாமிகளும் ஜனத்தொகையில் பெருகினர். நிஜப் பராக்கிரமம் கொண்ட வீரர்கள் அதிகம் இல்லாத இந்த மாதிரியான நாட்டை எவன் தாக்கினாலும், எதிர்த்துப் போரிட எவரும் இல்லை. அதனால், ஒட்டுமொத்த சமுதாயமே அடிமையாகிப் போகும் அவலம் ஏற்பட்டது.



உதாரணத்துக்கு, தமிழ் கூறும் நல்லுலகை எடுத்துக் கொள்வோமே!

சங்க காலத்தில் இந்த நிலப்பரப்பில் வாழ்ந்த பெண்கள் கலவியல் சுதந்திரம்கொண்டு இருந்தார்கள். வீரமும், திறமையும், காதலும் ததும்பும் ஆண்களை மட்டுமே தேர்ந்தெடுத்துக் கூடியிருந்தார்கள். அதனால், மனித வளம் உயர்ந்திருந்தது. முல்லைக்குத் தேர் கொடுக்கும் அளவுக்கு இங்கு பரோபகாரம் பெருகிக்கிடந்தது. கிரேக்கத்துடனும், மிஸ்ரத்துடனும் வியாபாரம் செய்து செல்வம் கொழித்துக்கொண்டு இருந்தது.

ஆனால், இதே நிலப்பரப்பில் நம்பிக்கைகள் மாறியபோது, நிலைமை தலைகீழானது அல்லவா?

ஆரியர், மங்கோலியர், பாரசீகர், துருக்கியர், முகலாயர், போர்ச்சுகீசியர், ஆங்கிலேயர், ஃபிரெஞ்ச் என்று வரிசையாகப் பல வெளிநாட்டினருக்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் நிலைமை உருவானதே, ஏன்?

Join / Telegram : @Tamil_Books_Library




# பெண்ணின் திறமை... ஆணின் ஆளுமை!

ச ங்க காலத்தில் முல்லைக்குத் தேர் கொடுத்து, கிரேக்கம், மிஸ்ரத்துடன் வியாபாரம் செய்து, செல்வம் கொழித்துக்கொண்டு இருந்த தமிழ் கூறும் நல் உலகம், பிறகு ஏன் ஆரியர், மங்கோலியர், பாரசீகர், துருக்கியர், மொகலாயர், போர்ச்சுக்கீசியர், ஆங்கிலேயர், ஃபிரெஞ்ச் என்று வரிசையாகப் பல வெளிநாட்டினருக்கு அடிமைப் பட்டுக்கிடக்கும் நிலை உருவானது?

காரணம், பெண் அடிமையானால் அங்கே ஆணின் ஆளுமையும் அடிபட்டுப் போய்விடுகிறது. அதனால், பிறர் அவனை எளிதில் அடக்கி ஆளுகிறார்கள்.

உதாரணத்துக்கு, தாலிபான் பிடியில் இருக்கும் ஆப்கானிஸ்தானை எடுத்துக்கொள்வோம். அங்கே பெண்களுக்கு எதற்குமே சுதந்திரம் கிடையாது. கல்வி கற்கவோ, வருமானம் ஈட்டவோ, வேலைக்குப் போகவோ, சொத்துக்களை உடைமை கொள்ளவோ பெண்களுக்கு உரிமை இல்லை. தாலிபான் ஆண்களைப் பொறுத்தவரை, பெண்கள் வீட்டை நிர்வகித்து, கலவி கொண்டு, பிள்ளை பெற்று வளர்த்து ஆளாக்கினாலே போதும்.

சரி... பெண்களை இப்படிக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் மகா கெட்டிக்காரத்தனம் இருக்கும் இந்த ஆண்கள், வேறு ஏதாவது துறையில் சொல்லிக்கொள்வது போலச் சாதித்து இருக்கிறார்களா என்றால், ம்ஹூம்... இன்னும் கடந்த

Join / Telegram : @Tamil_Books_Library

நூற்றாண்டின் பின் தங்கிய சமூக அமைப்பில்தான் வாழ்கிறார்கள்.

இதற்கு நேர் எதிராக ஸ்வீடனை எடுத்துக்கொண்டால், அங்கே ஆண் - பெண் இருவரும் சமமாக வாழ்கின்றனர். அடக்குமுறை என்கிற பேச்சுக்கே இடம் இல்லை. பாதி வருடம் இருட்டிலேயே வாழ்ந்தாலும், இந்த ஊர் ஆண்கள் எல்லாத் துறைகளிலுமே சாதிப்பது மிக அதிகம். செல்வம் செழிப்பதால்தான், ஸ்வீடன் மற்ற நாட்டவரின் சாதனைகளுக்கும் நோபல் பரிசு கொடுத்துப் பாராட்டி ஊக்குவிக்கும் உயர் ஸ்தானத்தில் இருக்கிறது. ஆக, எங்கெல்லாம் பெண்கள் சுதந்திரமாகக் கலவியல் தேர்வு செய்கிறார்களோ, அங்கே அதிக திறமையான ஆண்கள் உருவாகிறார்கள். இதனால், ஒட்டுமொத்த சமுதாயமே முன்னேறிவிடுகிறது.

உதாரணத்துக்கு, 1490-களில் இந்தியாவில் வாழ்ந்த கல்வி வாய்ப்பு இல்லாத ஏதாவது ஒரு தாய், தன் மகனைப் பொத்திப் பொத்திப் பாதுகாத்து, காத்து கருப்பு படாமல் தடுக்கத் தாயத்து கட்டி, எல்லா சாமிக்கும் நேர்ந்துகொண்டு, மகனைத் தன் கண் பார்வையில் இருந்து விலகாமல் பத்திரமாகப் பார்த்துக்கொண்டு இருந்த சமயம், வாஸ்கோடகாமா திக்குத் தெரியாத கடலில் புது வழி தேடிப் போகிறேன் என்றபோது, அவன் அம்மா தடுக்கவில்லை.

கொலம்பஸ், இந்தியாவுக்குப் போகிறேன் என்று நிதி உதவி கேட்டபோது, அவனுக்கு நிதியுதவி அளித்ததே அவன் நாட்டு ராணி இசபெல்லாதான்.

பெண்கள் சுதந்திரமாக இயங்கும்போது, அங்கே ஆண்களின் வாழ்க்கைத் தரமும் வீரியமும் அதிகரிக்கிறது. இந்தச் சுதந்திரம் பெண்களுக்கு இல்லாதபோது, மனிதர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும், தரத்தில் தாழ்ந்துவிடுகிறார்கள். இப்படி எக்கச்சக்கத்துக்கு reproductive wastages-ஆக மனிதர்கள் இல்லாமல், சமூகத்துக்கு உபயோகமாக இருக்க வேண்டுமானால், அவர்களது தாய்கள் கெட்டிக்காரத்தனமாக அவர்களை வளர்த்தாக வேண்டும். இதற்கு முதலில் தாய்க்குலம் தன் அறிவை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு இருந்தால்தானே?

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

ரொம்பவே சிம்பிளான லாஜிக். பெண்கள் ஆண்களுக்கு நிகராக அறிவுசார்/ பொருளாதாரப் பங்கேற்பு கொண்டால்தான் சமூகம் இரட்டிப்புச் செழிப்பாகும். ஆனால், அதிசயம் என்னவெனில், சென்ற நூற்றாண்டு வரை பெரும்பாலான ஆண்களுக்கு இது புரியவே இல்லை. புரட்சிகரமாகச் சிந்திக்கக்கூடிய கோடியில் ஒரிரு ஆண்களுக்கு மட்டுமே இந்த லாஜிக் புரிந்தது.

ராஜாராம் மோகன் ராய், பாரதியார், பெரியார், நேரு போன்ற இந்தப் புரட்சியாளர்கள் பெண்கள் நிலையை மாற்றிட முயல, எல்லோருக்கும் கல்வி வழங்க ஐக்கிய நாட்டு சபையும் அறிவுறுத்த, எல்லா நாட்டுப் பெண்களும் அறிவை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்கள். கூடவே, சொத்துரிமை, வேலைவாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு, வருமானம் ஈட்ட வழிகள் எனப் புரட்சிகள் பல உண்டாக, பல நூற்றாண்டுகளாக வெறும் ஆடு, மாடு மாதிரி வாழ்ந்து வந்த பெண்களின் நிலை ஒரே தலைமுறையில் மாறிப்போனது!

பெண்கள் மீண்டும் தாமே தம் துணையைத் தேர்வு செய்ய ஆரம்பித்தார்கள். துணை சரியாக அமையாவிட்டால், அவனைக் கழற்றிவிடவும் தயாரானார்கள்.

காட்டுவாசி மனுஷி, வெறும் காம சுகம் தரும் விகிதத்தை வைத்து ஆண்களைத் தேர்ந்தெடுத்தாள். குகைவாசி மனுஷி, வேட்டுவ வீரியத்தை வைத்து ஆணைத் தேர்ந்தெடுத்தாள். ஆதிவாசி மனுஷி, பாதுகாப்பு விகிதத்தை வைத்து ஆணைத் தேர்ந்தெடுத்தாள். ஆரம்ப நாகரிக மனுஷி, அறிவு விகிதத்தை வைத்தும் ஆணின் செல்வாக்கு மற்றும் செல்வத்தை வைத்தும் அவனைத் தேர்ந்தெடுத்தாள்.

இந்த அறிவை வைத்து ஆண் அவளையே அடக்கி ஆண்டுவிட, சில ஆல்ஃபா ஆண்களின் கைங்கர்யத்தால் மீண்டும் பெண்கள் சுதந்திரம் பெற்றிட, நவீன யுகப் பெண்கள் மீண்டும் ஆண்களைத் தாமே தேர்ந்தெடுக்க ஆரம்பித்தார்கள். ஆனால், இம்முறை பெண்கள் பயன்படுத்தும் தேர்வு வரையறை மிகவும் வித்தியாசமாக இருந்தது.

காலமும் ரொம்பவே மாறிவிட்டு இருந்தது. வேட்டை என்பது இப்போது சட்ட விரோதமான செயலாகிவிட்டது. பாதுகாப்புக்குத்

Join / Telegram : @Tamil_Books_Library

தனியாக போலீஸ் என்கிற ஓர் அமைப்பு இருக்கிறது. பணம் இருந்தால் ஒரு தனி பூனைப்படையைக்கூட வேலைக்கு வைத்துக்கொள்ளலாம்.

அந்தக் காலத்து ஆயுதங்கள் மிகக் கனமானவை. அதனால், பெண்கள் அவற்றை லேசில் பயன்படுத்த முடிந்திருக்காது. ஆனால், இன்று பெண்களும் சுலபமாக உபயோகிக்கக்கூடிய ஆயுதங்களும், தற்காப்புக் கலைகளும் வந்துவிட்டன. இப்போது பெண்கள் சுயமாக தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். பெண்களுக்கும் அறிவை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்புகள் பெருகி உள்ளதால், ஆணின் அறிவை மட்டும் பார்த்துப் பெண்கள் இனி மயங்குவதாக இல்லை. இன்றைய பெண் சுயமாகச் சம்பாதித்து, தானே சொத்துகள் சேர்க்க ஆரம்பித்துவிட்டதால், வெறும் பணத்துக்காக ஆணை அண்டிப்பிழைக்க வேண்டிய அவசியமும் அவளுக்கு இல்லை.

அப்படி என்றால், இன்றைய காலத்தில் பெண்கள் எதைத்தான் வரையறையாக வைத்து ஆண்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்?

வழக்கம்போல இப்போதும் பெண்கள், survival-க்கு முக்கியமான அம்சங்களை வைத்துதான் ஆண்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இன்று ஓர் ஆண் பிழைத்துக்கொள்ள அவனுக்கு மிகவும் அதிகமாகத் தேவைப்படும் ஆற்றல் எது என்று யோசியுங்களேன். முன்பு வில்லுக்கு நாண் பூட்டுவதும், குறி தவறாமல் அம்பு எய்துவதும், காளையை அடக்கிக் காட்டுவதும் என பல hard skills-தான் ஆணின் பிழைப்பு விகிதத்தை அதிகரித்தன.

ஆனால், இது மென்பொருட்களின் காலமாயிற்றே... இன்று ஓர் ஆண் ஜெயிக்க வேண்டும் எனில், நாசூக்காகப் பேசுவது, பிறர் மனம் புரிந்துகொண்டு நடப்பது, அதிகாரம், ஆணாதிக்கம், அடக்கு முறை மாதிரியான முந்தைய காலத்து முறைகளைவிட்டு, diplomatic talks மூலமாகப் பிரச்னைகளுக்குத் தீர்வு தேடும் லாகவம், என்பது போன்ற soft skills இருந்தால்தான் முடியும்.

இதில்தான் சிக்கலே. நமக்குத்தான் ஏற்கெனவே தெரியுமே, ஆணின் மூளையில் மொழிக்கு உண்டான மையம், முக பாவங்களைக் கண்டறியும் மையம், குரல் ஏற்ற

இறக்கங்களுக்கு உள்ளர்த்தம் உணரும் மையம் ஆகிய மூன்றுமே ரொம்பவே சின்னது. இதை வைத்துக்கொண்டு எப்படிக் குறிப்பறிந்து லாகவமாகப் பேசுவது? ஒரு சராசரி ஆணுக்கு இது ரொம்பவே கஷ்டமான காரியம் இல்லையா..?

எல்லாக் காலத்திலும் பெண்கள் extraordinary capacity உள்ள ஆண்களைத்தானே தேர்ந்தெடுத்து வந்திருக்கிறார்கள்! இத்துனூண்டு மூளை மையத்தை வைத்துக்கொண்டு மனம் கவருமாறு பேசி, பழகும் ஆணைத்தான் பெண்கள் இன்று அதிகம் விரும்புகிறார்கள். ஏன்? இந்தக் குணங்கள் இருந்தால்தான் நாளை அவர்களின் பிள்ளைகளும் வெற்றிகரமாகப் பிழைத்துக்கொள்ள முடியும். இதில் மிகப் பெரிய விசித்திரம் என்ன தெரியுமா? உலகம் முழுக்க, மனித ஆண்களின் உடலில் ஊறும் டெஸ்டோஸ்டீரானின் அளவு வர வரக் குறைந்துகொண்டே வருவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். டெஸ்டோஸ்டீரான் குறைவதால் ஆக்ரோஷம், ஆதிக்கம் மாதிரியான குணங்கள் நீங்கி, அனுசரித்துப்போதல், அன்பால் காரியம் சாதித்தல் என்பது மாதிரியான தன்மைகள் ஆணுக்குள் தலை எடுக்கின்றன.

மனித வரலாறு முழுக்கப் பெண் பெரிதாக மாறி இருக்கவில்லை. அவளுக்குச் சூழலும், வாய்ப்புகளும்தான் மாறி வந்திருக்கின்றன. ஆனால், ஆண் தொடர்ந்து காலத்துக்கு ஏற்பத் தன்னை மாற்றிக்கொண்டே வந்திருக்கிறான். இப்படித் தன்னை மீண்டும் மீண்டும் மீட்டுருவாக்கி, பரிணமித்துக்கொண்டே போகிறவன்தான் மரபணு ஆட்டத்தில் ஜெயிப்பான். அதெல்லாம் முடியாது, நான் எப்பவுமே கற்கால பாணியிலேயேதான் இயங்குவேன் என்று அடம் பிடித்தால், இயற்கை சந்தடி இன்றி deselect செய்து ஆட்டத்தில் இருந்து அகற்றிவிடும். காரணம் இயற்கைக்கு நல்லவன், கெட்டவன், வேண்டியவன், வேண்டாதவன் என்ற பாரபட்சம் கிடையாது. ஒரே ஒரு விதிதான்... சர்வைவல் ஆஃப் தி ஃபிட்டெஸ்ட்!

இந்த சர்வைவலைக் குறி வைத்துத்தான், மனித நடத்தை எல்லாவற்றையுமே நம் மரபணுக்கள் முடிவு செய்கின்றன. வெவ்வேறு காலச் சூழ்நிலைக்கு ஏற்ப இந்த மரபணுக்கள் நம் நடத்தையை மாற்றிக்கொண்டே வருகின்றன. இந்த மாற்றங்கள் மூலமாக மரபணுக்கள் பேசும் மௌனமான உயிர்மொழி

Join / Telegram : @Tamil_Books_Library

உணர்வதற்குக் கொஞ்சம் கடினமானதுதான்.

மதம், நிறம், இனம், மொழி, வர்க்கம், பாலினம், சாதி, மரபு, நம்பிக்கைகள், நான் எனும் உணர்வு... இப்படி நம் மனத் தெளிவை மறைத்துக்கொண்டே இருக்கும் மாயத் திரைகளை நீக்கி, நிர்வாணப் பார்வையால் நோட்டமிட்டால் ஒழிய, இந்த உயிர்மொழி நமக்குக் கேட்காது. இந்த நிர்வாணப் பார்வையைக் கொஞ்சம் சுவீகரித்து, இந்த உலகை மீண்டும் ஒரு தரம் பாருங்கள். உயிர் பேசும் மொழி உங்களுக்கும் தெள்ளத் தெளிவாகக் கேட்கும்!

Join / Telegram : @Tamil_Books_Library

Join / Telegram : @Tamil_Books_Library

Printed Books

## வி.ஐ.பி–யின் பார்வையில்...



**காலச்** சுழற்சியினால் பெண் இனம் அடிமையான காரணங்களையும், அதன் விளைவாக, அவள் ஆழ்மன நிலையில் நெடிது நாள் நினைந்து ஆண்களைச் சுற்றிப் பின்னிய வலையையும், அது எவ்வாறு பின்னப்பட்டது என்பதையும் சிக்கலில்லாமல் சொல்லும் படைப்புதான் 'உயிர்மொழி!'.

தாய் ஏன் தன் குழந்தைக்கே தடையானாள்..? பெண்குழந்தையை விடுத்து ஆண்குழந்தைகள் மீது ஏன் பற்றுகொண்டாள்..? தாயின் பற்றுக்குப் பாத்தியப்பட்ட ஆண்குழந்தைகள் எப்படி விடுபட்டார்கள்..? விடுபட இயலாத ஆண்குழந்தைகள் எவ்வாறு வீழ்ந்துபட்டார்கள்..? - இப்படி ஆதிகால பரிணாம வளர்ச்சிபற்றிய கேள்விகளுக்கு இந்த நூல் இயல்பாக பதில் சொல்கிறது.

பெண்கள் சந்தித்த துரோகம், அதனால் அவர்கள் அடைந்த கோபம், தன் நிலையிலிருந்து மீண்டு எழுந்த வேகம், வீரியம்மிக்க குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள தன் துணையைத் தானே தேர்ந்தெடுத்துக்கொண்ட ஆதங்கம் - இவற்றின் பரப்புகளைப் பேசுவதே 'உயிர்மொழி!'.

ஆண்-பெண் பாரபட்சமின்றி இருவரைப்பற்றியும் நேர்மையாக அலசி ஆராய்ந்து, எந்த இடத்திலும், தான் பெண் என்பதால் அந்தப் பற்றின் காரணமாகக்கூட ஒரு பால் சாராமல் இந்த நூலை எழுதியிருக்கிறார், டாக்டர் ஷாலினி.

பாசம் - காதல் - காமம்

-இவற்றைப் பகுத்துணரும் திறனும் திராணியும் வேண்டுவோர் அவசியம் படிக்கவேண்டிய நூல்.

**– வழக்கறிஞர் சுமதி**

விகடன் பிரசுரம்

UYIRMOZHI

₹ 70

ISBN 978-81-8476-417-8